பக்கங்கள் : முப்பத்து இரண்டு

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 28 வியாழக்கிழமை (13.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 237




# தாயகத்தை வலியுறுத்துவோருக்கு அணிதிரண்டு வாக்களியுங்கள்!




## வடக்கு முதலமைச்சர் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்பும் தாயகம், தனித்துவம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்ற சுதந்திர மான சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் உறுதி யுடன் உள்ள இன அழிவுக்கு நீதி தேடுவதற்கு பின் நிற்காத கட்சிக்கு வாக்களிக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் முதலமைச்சர் விடுத்துள்ள செவ்விக் குறிப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

(முழுமையான செய்தி 24ஆம் பக்கத்தில்)
















நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX
நல்லூரில் மட்டும்தான் சரவணா ரெக்ஸ் உள்ளது




நல்லூரில் மட்டும்தான் ஆடித்தள்ளுபடி ஆகஸ்ட் 18 வரை

நீங்கள் ஒரு சாறி வாங்கும் பணத்துக்கு இரண்டு சாறி வாங்கலாம்

வேறு எங்கும் கிளைகள் இல்லை

526, 529,
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சிவன்கோயில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

(சி-1797)

## சமையற்காரர் தேவை

வடமராட்சியில் உள்ள உணவகத்துக்கு **சமையற்காரர் தேவை.** றொட்டி, சைனிஸ் சாப்பாடுகள் செய்யத் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-1799)

தொடர்புகளுக்கு :
0772298915

## தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் மூக்குக் கண்ணாடி ஸ்தாபனத்துக்கு பெண் இலிகிதர் தேவை. கல்வித் தராதரம் க.பொ.த சாதாரண தரம். யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (C-1795)

தொடர்புகளுக்கு :
021 222 7893

## யாழ் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்துக்கு தற்காலிக கொட்டகை அமைப்பதற்கான கேள்வி மனுக்கோரல் (தேசிய போட்டிச் சந்தை - NCB)

யாழ் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் (**ATI**) நிறுவனத்துக்கு தற்காலிக கொட்டகை அமைப்பதற்கான கேள்வி மனுக்கோரல் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பங்களை 13-08-2015 தொடக்கம் 26-08-2015 வரையுள்ள வேலை செய்யும் நாட்களில் மு.ப 9 மணி தொடக்கம் பி.ப 3 மணி வரை கீழுள்ள முகவரியிலுள்ள நிதிக்கிளையில் **ICTAD** பதிவு செய்த புத்தகத்தின் (**C9** இற்கு மேல்) மூலப் பிரதியினை சமர்ப்பித்து மீளச் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் ரூபா 500/= இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பீங்களை பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 27-08-2015ம் திகதி பி.ப 2 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (1477)

பணிப்பாளர்
ATI,
இல. 665/2, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல:
021 222 9803

## மோதி...

கப்பட்டுள்ளார்.

அத்துடன் பொதுமக்களின் உதவியுடன் வாகனங்களில் பற்றிக் கொண்ட தீ அணைக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-12-273-28)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக
JANA Digital Printers
Photo Quality Printing




டிஜிற்றல் பிறிண்டிங்
Original Japan Ink
(WorldColor Digital Technology)

- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- விளம்பரப் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்

Light Board
1 Side - 450/=
2 Side - 500/=

Name Board
1 Side - 210/=
2 Side - 350/=

Sticker Print 70/=
Backlit Print 70/=

3 வருட உத்தரவாதம் 35/= முதல் 50/= வரை

அரச நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

டிசைனிங் முற்றிலும் இலவசம்

மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
077 073 1654

(சி-1794)

## பாராளுமன்றத் தேர்தல் - 2015

கந்தை செல்வா காட்டிய வழியில் உதய சூரியன் சின்னத்தில் உங்கள் வீட்டுப்பிள்ளை

- வளம் கொழிக்கும் விவசாய மாவட்டமான கிளிநொச்சியில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தராக ...
- யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் புதல்வனாக ...
- விவசாய குடியேற்ற பிரதேச மைந்தனாக ...



X 3

தமிழர் விடுதலைக் கூட்டணி

விவசாயிகளின் நண்பன்
**க.ஜனார்த்தனன்**
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி, கிளிநொச்சி மாவட்டம்.

(சி-534)

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

# மைத்திரியின் வெற்றிலைச்சின்னம்

## பரப்புரைக்கூட்டங்களில் மக்கள் கேட்ட கேள்விகளுக்கான பதில் எல்லா மக்களுக்கும். . .

**⇨ இன்று நீங்கள் கேட்கும் வெற்றிலைச் சின்னம் மகிந்தவினுடையது என்கிறார்களே?**
இப்படி சொல்லுகின்றவர்கள் உண்மையில் விசமிகள் தான். ஏனென்றால் வெற்றிலைச் சின்னம் மகிந்தராஜபக்சவினுடையதென்றால் அவர் ஜனாதிபதிப்பதவியிலிருந்து தமிழ் மக்கள் அவரை வீட்டுக்கு அனுப்பியபோதே வெற்றிலைச் சின்னமும் இல்லாதல்லவா போயிருக்க வேண்டும்? ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் சின்னம் தான் இந்த வெற்றிலைச் சின்னம் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன அவர்கள். இன்று தமிழ் மக்களால் அதிகப்படியான வாக்குகளைபெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புனிதமான சின்னமே இது. இதில் என்னையும் என் சக வேட்பாளர்களையும் தவிர வேறு யாருக்கும் இதனைப் பயன்படுத்தும் அனுமதி யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்படவில்லை. ஆகவே இன்று நாம் கேட்கும் வெற்றிலைச் சின்னம் உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டமைத்திரிபால சிறிசேனவின் சின்னம் என்பதுடன் இன்று நீங்கள் வெற்றிலைக்கு இடும் புள்ளடி உங்கள் வேட்பாளர் அங்கஜன் இராமநாதனைத்தான் சேர்கிறதே தவிர, அது கிளிநொச்சி தாண்டி போகாது என்பதையும் நான் கறைகள் ஏதுமற்ற பச்சைத் தமிழன் என்பதையும் பெருமையாகக் கூறுகின்றேன்.

**⇨ நீங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒருவராக இருந்தாலும் மற்றைய கட்சிகள் அனைத்தையும் ஆதாரத்துடன் குற்றம் சாட்டுகிறீர்களே?**
ஆம். நாம் எந்தக் கட்சியில் இருக்கின்றோம் என்பது முக்கியமில்லை. நாம் எப்படி செயற்படுகின்றோம் என்பது தான் முக்கியம். இன்று தமிழ் மக்களின் கட்சி என்று முன்னர் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சிகளில் இருப்பவர்கள் கட்சித் தலைவர் உட்பட பலரும் தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு தமிழ்த் தேசியத்துக்கு துரோகம் இழைத்த தன்மைகளை இன்று ஊடகங்கள் வாயிலாகவும் அதே கட்சியின் உறுப்பினர்கள் வாயிலாகவும் அறிய முடிகின்றது. எல்லோருமே தமிழ் மக்களை அவர்களின் அபிலாசைகளை பயன்படுத்தி வாக்கு கேட்டு நல்ல வாய்ப்புக்களை பயன்படுத்தினார்களே தவிர மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றகொஞ்சமாகவேனும் முயற்சி செய்யவில்லை என்பதே உண்மையாகும். ஏனென்றால் நானொரு வடமாகாண சபை உறுப்பினராக மட்டும் இருந்துகொண்டே இன்று அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்யாத விடயங்களை சாதித்துக் காட்டியிருக்கின்றேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும்நான் விலைபோனது கிடையாது. அப்படி ஒரு வாழ்வியல் வறுமை எனக்கு வரவே வராது.

**⇨ இன்று உங்கள் தேர்தல் பரப்புரை மேடைகளில் நீங்கள் தேசியம் பேசுவதாகவும் தமிழீழ் விடுதலைப் புலிகளின் தலைவர் பற்றியும் பேசுவதாவும் சொல்கிறார்களே?**
ஆம் உண்மைதான். ஏன் நான் பேசக்கூடாதா? நான் தமிழன் இல்லையா? இன்றும் சொல்லப்போனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி என எல்லாக் கட்சிகளைக் காட்டிலும் அங்கஜன் இராமநாதனுக்கு என்றும் தனிமனித ஆளுமைக்கு தேசியம் பேசும் உரிமை தகுதி அதிகமாகவே உள்ளது. இதைத்தான் என்சக பேச்சாளர்கள் மேடைக்கு மேடை ஆதார பூர்வமாக நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையில் தேசியம் என்றால் என்ன என்பதை நன்றாகப் புரிந்து கொண்டவர்கள் இப்படி கேட்க மாட்டார்கள். எனது தந்தை வடமராட்சியை சேர்ந்தவர். எனது தாய் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர் என்பதனால் மட்டும் நான் தேசியவாதியல்ல. இதுவரை தமிழ் மக்களுக்குப் பிடிக்காத எதிரான எந்தவொரு நிகழ்விலும் நான் கலந்து கொள்ளவே இல்லை. அத்துடன் சிங்களக் கட்சியில் இருந்தாலும் அவர்களோடு சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கர வாதிகள் என்றோ அதற்கு சமனான சொற்களைப் பயன்படுத்தியோ நான் சொன்னவனும் இல்லை எமது தேசத்து வளங்களை சிங்கள தேசத்துக்கு விற்றவனும் இல்லை. மாறாக சிங்கள தேசத்தில் இருந்து பல நல்ல விடயங்களை எமது யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் விதைத்தவன்.நான் தான் உண்மைத்தமிழன். பச்சைத்தமிழன். மார்பு தட்டும் மகத்துவம் கொண்ட ஒரேயொரு யாழ்ப்பாணத்து அரசியல்வாதி. இதனால் தான் நான் எந்தக் கறையும் அற்றவன் என்பதனால் தான் இன்று எல்லோரும் பயப்படுகின்றார்கள். நான் எல்லோரையும் பயமுறுத்துகிறேன். அரசியலுக்கு நான் வந்தது காட்டிக் கொடுக்கவோ அல்லது கூட்டிக் கொடுக்கவோ மேடைப் பேச்சு பேசவோ அல்ல. மக்களுக்கு சேவை செய்யவே வந்தேன். அதைத்தான் இன்று வரை செய்து கொண்டிருக்கின்றேன். மக்கள் என்னை அமைச்சரவை அனுப்பினால் இன்னும் பல சாதித்துக் காட்டுவேன்.

**⇨ எல்லோருமே மேடைப் பேச்சுக்கள் பேசுகின்றார்கள். சாத்தியப்படாத விடயங்களை பேசுகின்றார்கள். இதுதொடர்பான உங்கள் நிலைப்பாடு?**
உண்மைதான். இதுவரை காலமும் நான் சுத்தமான அரசியல் செய்தவன். இனிமேலும் நான் சுத்தமான அரசியல் தான் செய்வேன். ஆனால் இன்று எம் மக்களின் இருப்புக்கள் அழிந்துவிடுமோ என்ற பயம் ஏற்பட்டமையால் தான் தேசியம் பேசுவோரும் மற்றவர்களும் எப்படியெல்லாம் எம் இருப்புக்களை தேசியம் பேசிப் பேசி அழிக்கின்றார்கள் என்று நான் கூற வேண்டியிருக்கின்றது. இது காலத்தின் தேவை. 2009ம் ஆண்டே தமிழீழக் கனவை மறந்துவிட்டேன். அதற்காகப் போராடிய, போராடவிருந்த அதே சிந்தனை கொண்ட மக்களையும் குறிப்பாக இளைஞர் யுவதிகளையும் காப்பாற்றியே ஆக வேண்டும். இன்று எமது கலாசார பண்பாடுகள் நாறடிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றன. இன்றைய இளைஞர்கள் தேசியம் மறந்தவர்களாக்கப்படுகின்றனர். புதிய புதிய போதைப் பொருட்கள் திட்டமிடப்பட்டே கொண்டு வரப்படுகின்றன. இளைஞனாய் இருந்து சிந்திக்கும் போது என்னுள்ளே எரியும் நெருப்பை யாராலும் அணைக்க முடியாது. நான் சாத்தியமான விடயங்களையே செய்வேன் என்று மேடைகளில் கூறுகின்றேன். என்னால் முடியும் என நான் அதிகமாகவே நம்புகின்றேன். ஒரு மத்திய அமைச்சில்வேலைக்கென யாழ்ப்பாணத்திலிருந்து தகுதியுடைய 5000 பேர் விண்ணப்பித்திருந்தால் அவர்களில் 1500 பேருக்காவது வேலை வாய்ப்பை சண்டை பிடித்தேனும் கொண்டுவரமுடியும். இதுவரை அதைத்தான் செய்தேன். எந்த முயற்சியும் செய்யாமல் தமிழ் மக்களிடையே சிங்கள அரசு எதையும் தரவில்லை என்று கூறமாட்டேன். சிங்கள அரசு எதையும் தானே தராது. தட்டிக் கேட்டால் தான் தரும். அதைத்தான் நான் செய்கின்றேன். இன்று சில இளைஞர்களின் திட்டங்களும் கதைகளும் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் அவை உடனடிசசாத்தியமாகாது. அதுவரை மக்களின் நிலை என்ன? இருப்பல்லவா அழிக்கப்பட்டுவிடும். ஆகவே நான் கூறுவதெல்லாம் உடனடிச் சாத்தியமான விடயங்களே.

**⇨ தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை விமர்சித்தாலும் முதலமைச்சரை அதிகமாகவே மேடைகளில் மதிக்கின்றமைக்குக் காரணம்?**
நான் உண்மையில் மேடைகளில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஐயாவை புகழ்ந்து தான் பேசுகின்றேன் . ஏன் அவர் 12.08.2015 புதன்கிழமை அன்று ஊடகங்களுக்குக் கொடுத்த அறிக்கையைப் படித்தேன்.அவர் உண்மையான நேர்மையான அரசியல்வாதி என்பதுடன் கடவுள் பக்தியும் மக்கள் மீது அக்கறையும் தூய அரசியலும் கொண்டவர் என நிரூபிக்கப்பட்டுவிட்டதை உணர்கிறேன். அந்த அறிக்கையை எனக்காகத்தான் எழுதினாரோ என்றுகூட எண்ணத்தோன்றுகிறது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்குள் ஏராளமான பிரச்சனைகள். அவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முற்பட்டாலே அடுத்த ஆறு ஆண்டுகள் போதாது . பின்னர் எப்படி அவர்கள் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்குக்கூட தீர்வு காணப் போகிறார்கள். சட்டத்தரணி ஸ்ரீகாந்தா ஊடகம் ஒன்றில் தாம் முதலமைச்சரையும் சம்பந்தன் ஐயாவையும் நம்பவில்லை என்கிறார். அப்படியென்றால் ஏன்? எதற்கு? என்று புரியவில்லை. அத்துடன் அதிகமாகவே இவர்களுக்குள் மாறி மாறி குற்றச்சாட்டுக்கள் அதிகம். இவர்களின் இந்நிலைப்பாடே இன்று அதிகளவான மக்கள் இவர்களை வெறுக்க காரணமாயுமிருந்தது. இதை வெளியில் இருந்து பார்க்கும் எமக்கே கோபம் வருகிறதென்றால் உள்ளே இருந்து அனுபவிக்கும் முதலமைச்சர் பாவந்தான். இதனால்தான் அவர் இன்றைய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர்கள் யாருக்குமே ஆதரவு தெரிவிக்கவில்லை. அவர் ஒரு நல்ல மனிதர் என்பதுடன் நல்ல அரசியல்வாதியும்கூட. ஆதலால் அவரது நேர்மைத்தன்மை பிடித்திருக்கிறது. அதனால் அவரையும் எனக்குப் பிடித்திருக்கிறது.

X 1

(சி-496)

**புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

பாராளுமன்றத் தேர்தல் - 2015

அகில இலங்கை தமிழர் மகா சபை



X

# தேர்தல் முடிவுகளை வைத்தே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## க்ரைசிஸ் க்ரூப் ஆய்வு நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை தேர்தல் முடிவுகளை வைத்தே இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது அமையும். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று ஆறு மாதங்கள் கழிந்திருக்கும் நிலையில் பிரிவினைவாத அரசியலின் சிக்கல்கள் மீண்டும் இலங்கையில் உருவெடுத்திருப்பதாக இன்டர்நேஷனல் க்ரைசிஸ் க்ரூப் என்ற ஆய்வு நிறுவனத்தின் புதிய அறிக்கை ஒன்று கூறியிருக்கிறது.**

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் அந்த அமைப்பு நேற்று வெளியிட்டிருக்கும் அறிக்கையில், அரச நிர்வாகத்தில் செய்யப்பட வேண்டிய முக்கியமான சீர்திருத்தங்கள் சிறிசேன அரசின் முதல் ஆறு மாதங்களில் செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

தன் ஆட்சிக் காலத்தின் முதல் ஆறு மாதங்களில் சிறிசேன குறிப்பிடத்தக்க செயல்களைச் செய்துள்ளார் என் இன்டர்நேஷனல் கரைசிஸ் க்ரூப் தெரிவித்திருக்கிறது.

குறிப்பாக 19-வது அரசியல் சாசனத்திருத்தத்தை இந்த அறிக்கை

31 ஆம் பக்கம் பார்க்க....

## சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ். நீதிமன்றம் மீது தாக்குதல மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் நேற்று உத்தரவிட்டார்.

கடந்த மே மாதம் 20ஆம் திகதி, நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில், 27பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நீதிமன்ற கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டமை, பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி அவர்களை காயப்படுத்தியமை மற்றும் சிறைச்சாலை வாகனங்களை சேதமாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ், சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்களுடைய வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த வழக்கை விசாரித்த நீதவான் சிவகுமார் மேற்படி சந்தேகத்தின் 'பேரில் குற்றஞ்சாட்டப்பட்ட 27 பேரையும் எதிர்வரும 26ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-11)

# தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி அச்சமின்றி வாக்களிக்க முடியும்!

## யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் அனைவரும் எந்தப்பயமும் இன்றி சுயாதீனமாக வாக்களிக்க முடியுமெனவும் யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச்செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,



யாழ் மாவட்ட நிர்வாகத் தொகுதியில் இம்முறை 526 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் சில இடமாற்றம செய்யப்பட்டுள்ளன.

மாற்றம் செய்யப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களின் விபரம் வாக்காளர் அட்டையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.


எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வாக்களிப்பு செய்ய முடியும்.

இம்முறையும் வாக்கெண்ணும

31 ஆம் பக்கம் பார்க்க....

# மோதிய வாகனங்கள் தீப்பற்றிக் கொண்டன

## கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

இரு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஏற்பட்ட தீயினால் வாகனங்கள் இரண்டும் முற்றாக தீக்கிரையாகின.

இச் சம்பவம் கிளிநொச்சி கரடிபோக்கு சந்தியில் நேற்று மாலை இடம் பெற்றது.

வவுனியாவிலிருந்து யாழ் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இவ் அனர்த்தம் ஏற்பட்டது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்

02 ஆம் பக்கம் பார்க்க....

# வித்தியா படுகொலை வழக்கு சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்

## 26-ம் திகதிவரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் சந்தேக நபரகளை மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதவான் எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு நேற்றைய தினம் காலை 10.33 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் சந்தேகநபர்கள் 9 பேரும் குற்றத்தடுப்பு பொலிஸாரினால் மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தனர்.


இந்நிலையில் சந்தேகநபர்கள் 9 பேரையும் கடந்த 60 நாட்கள் தாம தடுத்துவைத்து விசாரணை நடத்தியதற்கான விசாரணை நடத்தி பெற்றுக்கொண்ட தகவல்களினை மன்றுக்கு தெரியப்படுத்தினர்.

இதன்போது 2-ம், 4-ம், 5-ம், 6-ம் சந்தேகநபர்கள் மேற்படி மாணவியை வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்வதற்கான திட்டத்தை தீட்டியிருந்ததாகவும், 2-ம், 3-ம், 5-ம், 6-ம் சந்தேக நபர்கள் மேற்படி குற்றத்துடன் தொடர்புபட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியதுடன்

31 ஆம் பக்கம் பார்க்க....

# புலிகளுக்கு பணம் கொடுத்து பலமடைய வைத்தார் மகிந்த

## ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு மகிந்த கொடுத்த பணத்தினாலேயே விடுதலைப் புலிகள் பலமடைந்ததாகவும், 2005 ஆம் ஆண்டில் அவர்களை ஒழித்திருந்தால் பாதிப்பு குறைவாக இருந்திருக்கும் என்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷ இரண்டு முறை விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியதாவும், முதலில் 200 மில்லியன்களையும் பின்னர் பிறிதொரு நிறுவனத்தின் ஊடாக 2ஆயிரம் மில்லியன்களையும் வழங்கியதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு தேர்தலில்

31 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இடம் பெயர்ந்த வாக்காளர் வாக்களிப்பதற்கு பஸ் சேவை

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் வாக்களிக்கவிருக்கும் கரவெட்டி, கோப்பாய், பருத்தித்துறை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் உள்ள இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக இலவச பஸ் சேவை நடத்தப்படவுள்ளதாக யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் கடமைகளுக்காக யாழ்.மாவட்டத்தில் இ.போ.ச பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

வழமையான போக்குவரத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாதவாறு போக்குவரத்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்கான இலவச போக்குவரத்து சேவையில்,

கரவெட்டி பிரதேச செயலகத்திலிருந்து குஞ்சர் கடையடி, நெல்லியடி, கொடிகாமம் வீதி, துன்னாலை கலிகைச்சந்தி, மந்திகைச் சந்தி, மாலுசந்தி, உடுப்பிட்டி, அச்சுவேலி, புன்னாலைக்கட்டுவன், வசாவிளான், மல்லாகம் ஊடாக தெல்லிப்பழை வரை ஒரு பஸ்சேவையும்,

கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து மானிப்பாய் வீதி, கோப்பாய் கிருஸ்ணன் கோவிலடி, உரும்பிராய்சந்தி, பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன், வசாவிளான், மல்லாகம், தெல்லிப்பழை ஊடாக வீமன்காமம் வரை ஒரு பஸ் சேவையும்,

பருத்தித்துறை பிரதேச செயலகத்திருந்து கற்கோவளம், மணியன்காரன் சந்தி (பாடசாலை முன்) முனை (மாதா கோவிலடி), வியாபாரிமூலை (எரிந்த அம்மன் கோவிலடி), இன்பருட்டி (போரூட் சங்கம்), பொலிகண்டி (ஆலடி), வல்வெட்டித்துறை (வேம்படி), தொண்டைமானாறு, அச்சுவேலி, புன்னாலைக் கட்டுவன், வசாவிளான் மல்லாகம், தெல்லிப்பழை ஊடாக வீமன்காமம் வரை ஒரு பஸ் சேவையும்,

பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து, முதலாம் கட்டைச் சந்தி, மந்திகைச் சந்தி, தம்பசிட்டி, வியாபாரிமூலை (எரிந்த அம்மன் கோவிலடி), இன்பருட்டி (போரூட் சங்கம்), பொலிகண்டி (ஆலடி), வல்வெட்டித்துறை (வேம்படி), தொண்டைமானாறு, அச்சுவேலி, புன்னாலைக் கட்டுவன், வசாவிளான், மல்லாகம், தெல்லிப்பழை ஊடாக வீமன்காமம் வரை 2ஆவது பஸ் சேவையும்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து, கட்டுடை முகாம், அரசடிச் சந்தி, நவாலிச் சந்தி, ஆனைக்கோட்டை சந்தி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய் சந்தி, மருதனார்மடச் சந்தி, சுன்னாகம் ஊடாக தெல்லிப்பழை வரையில் ஒரு பஸ் சேவையும்,

சண்டிலிப்பாய் பிரதேச பிரதேச செயலகத்திலிருந்து, மாசியப்பிட்டி முகாம், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, பெரியவிளான் ஊடாக தெல்லிப்பழை வரை 2 ஆவது பஸ்சேவையும்நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-4,9)


## அமெரிக்காவில் சாதனை படைத்த சிவபூமி பாடசாலை மாணவர்களுக்கு (ஒலிம்பிக் வீரர்கள்) வரவேற்பு



**காலம் - 13.08.2015 பி.பகல் 3 மணி**

நல்லூர் கோவில் வாசலிலிருந்து திறந்த வாகனத்தில் வீரர்கள் ஏற்றப்பட்டு பலாலி வீதியூடாக கோண்டாவில் சந்தியை அடைந்து, பின் நடைபவனியாக கோண்டாவில் சிவபூமி பாடசாலையை அடைந்து பின் விசேட கௌரவிப்பு நிகழ்ச்சி இடம்பெறும்.

அனைவரும் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்

ஆறு.திருமுருகன்
தலைவர்

(C-1800)

சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு இணைந்த தனி ஆட்சி தன்னிறைவான பொருளாதாரம்

*30 வருடங்களாக மாறாத என் ஒரே கொள்கை*

*ஈ.சரவணபவன்*

## வடக்கின் பொருளாதார மேம்பாட்டுக்கு தனியான மத்திய நிலையம் வேண்டும்

வடமாகாணத்தின பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அபிவிருத்தி என்ற பெயரில் எமது மூல வளங்கள் சுரண்டப்படுவதை யும் அழிக்கப்படுவதையும் தடுத்து நிறுத்தவும் வடக்கில் ஒரு பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி முன்கொண்டுசெல்லப்படவேண்டும்.

20.01.2014, நல்லூர்

## தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் அரசின் சதி தொடர்கிறது

ஜெயகுமாரி மற்றும் அவரது மகளது கைதுகளும் அது தொடர்பான உண்மைத் தன்மைகளை அறியச் சென்ற மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான றூகி பெர்னான்டோ மற்றும் அருட் தந்தை பிரவீன் ஆகியோரின் கைதுகளும் உண்மையில் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியே அல்ல. தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க விரும்பும் இந்த அரசின் சதித் திட்டம்.

20.03.2014, நாடாளுமன்றம்

## சிறுவர்களின் கல்வியை ஏழ்மை பாதிக்கக்கூடாது

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர் கள் அவர்களது அடிப்படைக் கலவி இன்றி யமையாதது. அவர்களின் கல்வி ஏழ்மை யினால் என்றுமே தடைப்படக் கூடாது. நாளைய சமுதாயத்தினை வளர்த்தெடுக்கும் முக்கய பணி நமக்கு உண்டு.

18.10.2014, அரியாலை

## ஐ.நா. படையினரை அழைக்க வேண்டும்

இலங்கையில் நிரந்தர அமைதியையும் நீடித்த சட்ட ஆட்சியையும் நிலைநிறுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அமைதிப் படை இங்கு வரவழைக்கப்படவேண்டும். தமிழர் கள் இலங்கைப் பொலிஸாரால் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். பக்கச் சார்பாக நடந்துகொள்கிறார்கள். எனவே நாட்டில் நிரந்தர அமைதியையும் சட்டத்தி ஆட்சியை நிலை நிறுத்தவும் ஐ.நா. அமைதிப் படையை அழைக்க வேண்டும்.

19.03.2014, நாடாளுமன்றம்

## மஹிந்தவும் என்றோ ஒருநாள் போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுவார்

மனிதப் படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் எவரும் சர்வதேச விசாரணையில் இருந்து தப்பியதில்லை. இதன்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் என்றோ ஒருநாள் சர்வதேச போர்க்குற்ற விசாரணையின் முன் நிற்கவேண்டி வரும். இன்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் அரசியல் பிரச்சினையைத் தெருச் சண்டை போன்று ஆக்கிவிட்டனர். ஜனாதிபதியின் அனுரணையுடன் ஜாதிக ஹெல உறுமய, பொது பல சேனா போன்ற அமைப்புகள் துவேசத்தைக் கக்குகின்றன.

15.09.2012, ஏழாலை

## அரசியல் கைதிகள் அனைவரும் உடன் விடுவிக்கப்படவேண்டும்

அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப் படவேண் டும். கருணா, பிள்ளையான் போன்றவர்களுக்கு அமைச்சுப் பதவியும் முதலமைச்சர் பதவியும் கொடுத்து வைத்துள்ள அரசு அரசியல் கைதிகளை அடைத்து வைத்திருப்பதில் நியாயமில்லை. அதிலும் சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் இன்றி பல ஆண்டுகளாக அவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஏற்புடையதே அல்ல.

10.10.2014, வவுனியா

## மனித உரிமைகளின் பாதுகாவலர்களையும் கொல்ல முயல்கிறது இந்த அரசு

நீதிக்காகக் குரல் கொடுக்கும் மக்கள் பிரதிநிதிகள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் தாகுதல் நடத்தி அவர்களைப் படுகொலை செய்த அரச கூலிப்படைகள் இன்று மனித உரிமைகள் பாகாவலர்கள் மீதும் தாக்குதல் நடத்தி அவர்களைக் கொலை செய்யவும் முயற்சிக்கின்றது. அரசுக்கோ அதன் படைகளுக்கோ தமிழ் இனம் ஒருபோதும் அச்சமடையாது.

09.10.2014,
ஊடகங்களுக்குக் கருத்து

## தீர்வைக் கொடுக்கத் தவறினால் நல்லிணக்கம் சாத்தியமேயில்லை

தமிழ் மக்களுக்கு இருக்கின்றன பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்க இந்த அரசு தவறினால் நாட்டில் நல்லிணக்கம் என்ற பேச் சுக்கே இடமில்லை.

21.04.2015, யாழ்ப்பாணம்




இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Illankai Tamil Arasu Kachchi

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(C-504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சந்நிதியான் மஹோற்சவத்தை முன்னிட்டு

# மருத்துவச் சான்றிதழ் இல்லாத உணவகங்கள் மீது நடவடிக்கை

**தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவ பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் மஹோற்சவ காலங்களில் ஆலய வீதியில் அமைக்கப்படும் உணவகங்கள் அனைத்தும் மருத்துவ சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். மேலும் சுகாதாரம் பேணப்படாத உணவகங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.**

மஹோற்சவ காலம் ஆரம்பிக்கப்படுவதை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் தலைமையில் மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றது. இக்கலந்துரையாடலின் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரதேச செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில், கோயிற் சுற்றாடலில் சுகாதாரத்தைப் பேண புகையூட்டல் மேற்கொள்ளப்படும். இம்முறையானது மஹோற்சவத் திருவிழா ஆரம்பிக்க முன்பும் அதனைத் தொடர்ந்து தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்கள் முன்பும் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆலயச்சுற்றாடலில் நடைபாதை வியாபாரம் தடை செய்யப்படுவதுடன் ஆலய நிர்வாகத்தினரைத் தவிர வேறு யாரும் ஒலிபெருக்கிகளை பாவிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

இவ்வாறான ஒலிபெருக்கி தடையானது காவடி எடுத்து நேர்த்திக் கடனை செலுத்துவோருக்கு பொருந்தக்கூடும்.

பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் வழமை போன்று தம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஆலயச்சூழலில் உணவ்கங்கள் அமைப்பவர்கள் அனுமதிப்பத்திரம் கட்டாயம் பெற்றிருக்கவேண்டும்.

இது தொடர்பாக சாதாரண சிறு உணவக உரிமையாளர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

குடிநீர் விநியோகம், கடைகளுக்கான நீர் விநியோகம், மலசல கூடங்களுக்கான நீர் வழங்கல் சேவை மற்றும் கழிவகற்றல் தொடர்பான சுகாதார நடவடிக்கைகள் வல்வெட்டித்துறை நகரசபையினால் வழமை போன்று மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான அவதானிப்பு நடவடிக்கைகளுக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் தற்காலிக அலுவலகம் மற்றும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் தற்காலிக நிலையம் என்பன மஹோற்சவம் முழுவதும் ஆலய வளாகத்தில் இயங்கவுள்ளது.

கொடியேற்றத்திருவிழாவில் இருந்து பத்தாம் திருவிழா வரை 30 பொலிஸாரும் அதன் பின்பு 60 பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். வீதிக்கடவைகளிலும் பொலிஸாரின் உதவி பெறப்படும்.

அத்துடன் ஆலய உற்சவத்தின் பத்தாம் திருவிழாவில் இருந்து தீர்த்தத்திருவிழா வரை 150 சாரணர்களும் இலங்கை முதலுதவிச் சங்கத்தில் இருந்து 200 சாரணர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை ஆலயச் சூழலில் சிகரெட், மதுபானம், பாக்கு, வெற்றிலைப் பாவனையும், போதைப் பொருட்களின் பாவனையும், பச்சை குத்துதலும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை பேருந்து சாலையின் ஊடாக விசேட போக்குவரத்துச் சேவை இடம்பெறுவதுடன் வடமராட்சி, அச்சுவேலி என்பனவற்றின் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் விசேட போக்குவரத்துச் சேவை என்பனவும் இடம்பெறவுள்ளன.

இவற்றைவிட சப்பறத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா போன்ற திருவிழாக்காலங்களில் விசேட போக்குவரத்துச் சேவை என்பன இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆடிப்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் விசேட அபிஷேகங்கள் நடைபெற்று 108 சங்காபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து 1008 சங்குகள் வைத்து மஹாசங்காபிஷேகம்நடைபெறவுள்ளது. (இ-5)

(இருபாலை)

யாழ். இருபாலை கட்டப்பிராய் அருள்மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் ஆடிப்பூர விழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அம்பாளுக்கான ருதுசாந்தி நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (இ-5-136)

டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளிதர்சன மாலையும் ஆடிப்பூர சிறப்புப் பூஜையும் யாழில் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு யாழ்.நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது ஏற்கனவே டென்மார்க்கில் இருந்து கொண்டு வரப்பட்ட அம்பாளின் திருவடிக்கு பால் அபிஷேக பூஜை நிகழ்வுகள் என்பன சிறப்பாக நடைபெறவுள்ளன.

எனவே பால் அபிஷேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப் பெற்று தமது பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள முடியும்.

மேற்படி பூஜை நிகழ்வுகள் ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணத்திலும் இறுதிப்பகுதியில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் வவுனியா பூந்தோட்டம் சாந்தசோலைப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்திலும் நடைபெறவுள்ளன. (இ-5)




## 17,18 ஆம் திகதிகளில் பணிகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் காணி மாவட்டப் பதிவாளர் திணைக்களத்தின் அனைத்து பணிகளும் 17ஆம் திகதி திங்கட்கிழமை, 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களிலும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமான ப.பிரபாகர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டே இப்பணிகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தல் தினமான திங்கட்கிழமை மட்டுமல்லாது மறுநாள் செவ்வாய்க்கிழமையும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து 19ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் காணி மாவட்ட பதிவகத்தின் அனைத்துப் பணிகளும் வழமைபோல் இடம்பெறவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல்பிரசாரக்கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 6.30மணிக்கு அராலி மாவத்தை விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதல் நிலை தேசியப்பட்டியல் வேட்பாளர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி பிரசாரக்கூட்டத்தில் பிரதம பேச்சாளர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மாகாண சபை உறுப்பினருமான த.சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈ.சரவணபவன், சி.சிறீதரன், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் தவிசாளர், ந.அனந்தராஜ், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் திருமதி மதினி நெல்சன், றிபேக்கல்லூரி அதிபர், க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (இ-5)

## முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடியில் வினாவிடைப்போட்டி

(நல்லூர்)

முதியோர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட சமூகசேவை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஒவ்வொரு பிரதேச செயலக மட்டத்தைச் சேர்ந்த முதியோர்களுக்கிடையிலான வினாவிடைப்போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதடி முதியோர் இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது முதலாம் இடத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் இரண்டாம் இடத்தை கோப்பாய் பிரதேச செயலகமும் மூன்றாம்இடத்தை தெல்லிப்பழைபிரதேசசெயலகமும் பெற்றுள்ளன. (இ-5-134)


## சீருடை, தொப்பி கட்டாயம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து உணவகங்களிலும் பணிபுரிந்து வருகின்ற ஊழியர்கள் அனைவருக்கும் சீருடை, தொப்பி என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான உத்தரவுக் கடிதங்கள் வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேசசபை ஊடாக மேற்படி உணவங்களுக்கு நேற்று புதன்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரியின் கோரிக்கைக்கு அமையவே இவ் உத்தரவுக்கடிதங்கள் பிரதேச சபை ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-60)







யாழ்.பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட *சுத்தாம்* மண்டப திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் ஆசிய பசுபிக் அவுஸ்திரேலிய பிராந்திய பணிப்பாளர் இராஜயோகினி டாக்டர் நிர்மலா கஜாரியா, கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறி, பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் தேசிய பொறுப்பாளர் சூனேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2

X

30 வருடங்களுக்கு மேலாக கல்விப்பணியாற்றி.....

நிர்வாகத்திறனாளியாக....

யுத்தகால நெருக்கடியில் மக்கள் சேவகனாக...

பல்துறை நூல்களின் எழுத்தாளராக.....

# தேர்ந்தெடுங்கள்

## ந. அனந்தராஜ் B.A.(Hons.),M.A.

Dip-In-Education,Dip-In-Journalism, SLPS,SLEAS

(சி-532)

தந்தை செல்வா தொடக்கம் போராட்ட காலம் வரை தமிழ் மக்களின் விடிவுக்காக ஒரே தலைமையின்கீழ் கடைசி-வரை சேவையாற்றிய இவரை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகோஹறாம் குண்டுத்தாக்குதல் நைஜீரியாவில் 50 பேர் உயிரிழப்பு!



(போர்னோ)

**நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் நடத்திய குண்டுத்தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 52 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

நைஜீரியாவில் ஐ.எஸ். பாணியில் ஒரு தனி நாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் செயற்பட்டு வரும் தீவிரவாத இயக்கம் போகோஹறாம்.

இந்த இயக்கம் பொது இடங்கள் மீது தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கானவர்களை கொன்று குவித்து வருகிறது.

நேற்று முன்தினம் வடகிழக்கு நைஜீரியாவின் சொபான் கரி என்ற நகரத்தின் மதியம் சுமார் 1.30 மணியளவில் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும் சந்தையில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

இதில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. இதுவரை 47 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 52 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கொடூர தாக்குதலுக்கு போகோஹறாம் பொறுப்பு ஏற்கவில்லை என்றாலும், குண்டு வெடிப்பு நடந்த பகுதி அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கியமான பகுதிகளில் ஒன்று என்பதால் இந்த தாக்குதலை அவர்கள்தான் நடத்தியிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. (3-7)

## 280 கோடி தொன் ஆலை கழிவு கடலில் கொட்டி அழிப்பு

சீனாவில் ஹீபே, லியானிங், ஷாங்டாங் மாகாணங்களிலும், தியான்ஜிங் நகராட்சி பகுதியிலும் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன.

அதற்கு தகுந்தாற்போல் ஆலைக் கழிவுகள் அதிகரித்து சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது.

ஷாங்டாங் மாகாணத்தில் உள்ள பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலைகள், லியானிங் மாகாணத்தில் தூத்தநாக தொழிற்சாலைகளில் இருந்து நச்சு கழிவு நீர் வெளியாகிறது. அவற்றை சீன அரசு வடக்கு மற்றும் வடகிழக்கு பகுதியில் உள்ள போகை கடலில் கொட்டி அழிக்கிறது. அங்கு ஆண்டுக்கு 280 கோடிடன் தொழிற்சாலை கழிவு நீர் கொட்டப்படுகிறது.

இதனால் போகை கடல் பகுதியில் மீன்பிடி தொழில் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலை கழிவுகள் கலப்பதற்கு முன்பு இங்கு 30 ஆயிரம் தொன் மீன்கள் கிடைத்தன. தற்போது அங்கு 1000 முதல் 3 ஆயிரம் வரை மட்டுமே மீன்கள் கிடைக்கின்றன. (3-7)



1,500 அகதிகளின் விபரம் கிரேக்கத்தில் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்த போது அவர்களிடையே ஏற்பட்ட கலவரத்தை அடக்க பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை பிரயோகிப்பதை படத்தில் காணலாம்.







Valampuri 001.pdf 1 8/12/2015 6:24:03 PM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளை ஏன் விடுவிக்கக்கூடாது - நீதிபதி கேள்வி

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளை ஏன் விடுவிக்கக்கூடாது என்ற காரணத்தை மத்திய அரசு ஏன் இன்னும் தெளிவாகக் கூறவில்லை என தலைமை நீதிபதி கேள்வியெழுப்பியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை கைதிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிப்பது குறித்து தமிழக அரசு எடுத்த முடிவுக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்றில் நடந்து வருகிறது.

தலைமை நீதிபதி எச்.எல்.தத்து தலைமையில் நீதிபதிகள் இப்ராகிம் கலிபுல்லா, பி.சி.கோஷ், ஏ.எம்.சப்ரே, யு.யு.லலித் ஆகியோரை கொண்ட அரசியல்சாசன அமர்வு இந்த வழக்கை விசாரித்து வருகிறது. இந்த வழக்கின் மீதான வாதங்கள் நேற்று முன்தினம் மீண்டும் தொடர்ந்தது.

கைதிகளில் ஒருவரான பேரறிவாளன் தரப்பில் ஆஜரான மூத்த சட்டத்தரணி யுக்சவுத்ரி தனது வாதத்தில் கூறியதாவது,

குற்றவியல் நடைமுறை சட்டத்தில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை விடுவிக்க மாநில அரசுக்கு உரிமை உண்டு. அதில் மத்திய அரசுக்கு ஏதேனும் பிரச்சினை இருந்தால் மாநில அரசுக்கு கடிதம் எழுதாமல் நேரடியாக நீதிமன்றத்தை அணுகியது தவறு. இதில் நீதிமன்றம் தலையிட தேவையில்லை.

குற்றவாளிகளின் தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட போது, உரிய அரசாங்கம் அவர்களை விடுதலை செய்யலாம் என்றும் அறிவித்தது. இதனால் நீதிமன்றம் மற்றும் மத்திய அரசின் பங்களிப்பு அதோடு முடிவடைந்து விட்டது. அந்த தீர்ப்பை மத்திய அரசு எதிர்க்க வேண்டும் என்றால் மறுஆய்வு மனு அல்லது திருத்தம்கோரும் மனு வழியாகத்தான் நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும் என்றார்.

முருகன் தரப்பில் ஆஜரான மூத்த சட்டத்தரணி ராம்ஜெத்மலானி நீதிமன்றில் தாக்கல் செய்த எழுத்துபூர்வமான வாதத்தில், குற்றவியல் நடைமுறை சட்டத்தின் அடிப்படையில் அவர்களுடைய தண்டனை குறைப்புக்கும், விடுதலைக்கும் சம்பந்தப்பட்ட மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. இதற்கு முன்பு பல வழக்குகளில் குற்றவியல் நடைமுறை சட்டத்தின்கீழ் விடுதலை செய்யுமாறு மாநில அரசுகளுக்கு .உத்தரவு பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. அதேபோல இந்த வழக்கில் மாநில அரசு விடுதலை செய்த உத்தரவை இந்த நீதிமன்றம் தடை செய்ய *முடியாது என்று கூறியிருந்தார்.

மத்திய அரசு சார்பில் இறுதி வாதத்தை மீண்டும் தொடங்கிய சொலிசிட்டர் ஜெனரல் ரஞ்சித் சிங் தன்னுடைய வாதத்தில் கூறியதாவது,

அரசாங்கம் என்பது இந்த சமூகத்தின் பாதுகாவலர்களாக திகழ வேண்டிய பொறுப்பை உடையது. இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து யாரும் அக்கறை காட்டவில்லை. அனைவரும் தங்களுடைய அதிகாரத்தில் தான் குறியாக இருக்கிறார்கள். மாநில அரசு இதுபோன்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பது துரதிர்ஷ்டவசமானது.

மாநில அரசே முன்வந்து இவர்களுடைய விடுதலையை மறுத்திருக்க வேண்டும். இந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றத்தின் தன்மை குறித்து சீர்தூக்கி பார்க்க வேண்டும். அதை விடுத்து அவர்களை நான் விடுவித்தே ஆக வேண்டும் என்று கூறுவது எந்த வகையில் நியாயம்?

அவர்களை விடுதலை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு கிடையாது. மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ள உரிய அரசாங்கம் என்பது மாநில அரசு தான் என்று அனைவரும் நினைக்கிறார்கள், அது தவறு. அந்த தவறான எண்ணத்தில் மாநில அரசு அவர்களை விடுவிக்கும் முடிவை எடுத்துள்ளது. இந்நிலையில் மத்திய அரசு இதில் தலையிடுவது அவசியமாகிறது என்று அவர் கூறினார்.

இடையில் குறுக்கிட்ட தலைமை நீதிபதி, இவர்களை ஏன் விடுவிக்கக் கூடாது என்ற காரணத்தை மத்திய அரசு இன்னும் ஏன் தெளிவாக கூறவில்லை? மாநில அரசு இவர்களை விடுதலை செய்வதற்கான அறிவிப்பு வெளியிட்டபோது உடனடியாக மாநில அரசுக்கு கடிதம் வழியாகவோ அல்லது எதிர் அறிவிப்பு வழியாகவோ அதனை கேள்வி கேட்காமலே மத்திய அரசு நேரடியாக நீதிமன்றத்தை ஏன் அணுக வேண்டும்? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சொலிசிட்டர் ஜெனரல் தொடர்ந்து, மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. மத்திய அரசை கலந்தாலோசிக்காமல் நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ள உரிய அரசாங்கம் எது என்பதையும் வரையறுத்தாக வேண்டும். இதுகுறித்து வாதாடுவதற்கு மேலும் அவகாசம் தேவை என்று கோரிக்கை விடுத்தார்.

இந்த வழக்கின் இறுதி வாதங்கள் நேற்றுமுன்தினம் முடிவடைய இருந்த நிலையில் சொலிசிட்டர் ஜெனரல் அவகாசம் கோரியதால் விசாரணை தொடரும் என்று நீதிபதிகள் அறிவித்துள்ளனர். (இ-7)





# தேர்தல் கருத்துக் கணிப்பு

# மாபெரும் போட்டி

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி, வன்னி தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள் , சுயேட்சைக் குழுக்கள்

**1. பெற்றுக் கொள்ளும் ஆசன எண்ணிக்கை?**

**பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்கள்?**

உங்கள் கருத்துக்களுக்கு பெறுமதியான பரிசில்கள்

## போட்டி நிபந்தனை

- ஒருவர் ஒரு கருத்துக்கணிப்பை மட்டுமே அனுப்பி வைக்க முடியும்
- போட்டியாளர் தாம் சார்ந்த தேர்தல் மாவட்டத்தின் முடிவை மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வலம்புரியில் வெளிவரும் வி ண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு போட்டி முடிவுடன் இணைக்கப்பட வேண்டும்.
- முடிபுகள் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் தேர்தல் கருத்துக் கணிப்பு - 2015 என தவறாது குறிப்பிடவும்.
- உங்கள் கருத்துக்கணிப்பை 06.08.2015 தொடக்கம் 14.08.2015 வரை அனுப்ப முடியும் அனுப்பவேண்டிய முகவரி பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

### போட்டிக்கான விண்ணப்பப்படிவம்

போட்டியாளரின் முழுப் பெயர் : ....................................

முகவரி : ....................................

தொலைபேசி இல. : ....................................

தேசிய அடையாள அ.இல. : ....................................

....................................
போட்டியாளரின் கையொப்பம்

குறிப்பு:- தேர்தல் முடிபுகள் அறிவிக்கப்பட்ட பின்னரே போட்டி முடிபுகள், வெற்றியீட்டியவர்களின் விபரம் என்பன வெளிவரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் வேட்பாளர்களைக் கைது செய்யலாம்

## மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டின் குற்றவியல் சட்டத்தின் அடிப்ப டையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பா ளர்களை கைது செய்ய தடையில்லை என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார்.**

ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியா ளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்து ள்ளார்.



நாட்டின் குற்றவியல் சட்டத்தின் அடிப்ப டையில் எந்தவொரு நேரத்திலும் எந்த்வொரு நபரையும் கைது செய்யவும் விசாரணை செய்யவும் முடியும்.

இதற்கு தேர்தல் திணைக்களம் எந்த வகையிலும் இடையூறாக இருக்காது.

தேர்தல் முடிவடையும் வரையில் போட்டி யிடும் வேட்பாளர்களிடம் வாக்கு மூலங்க ளைப் பெற்றுக்கொள்ளக் கூடாது என்ற தீர்மானம் தேர்தல் திணைக்களத்தில் எடுக்கப்பட்டது.

தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்ற கட்சிச் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிக ளுடனான சந்திப்பின் போதே இந்த தீர்மா னம் எடுக்கப்பட்டது. இந்த யோசனைக்கு அனைத்து தரப்பினரும் இணக்கம் வெளி யிட்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தின் போது எதிர்வரும் 18ம் திகதி வரையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அழைத்து விசாரணை செய் வதில்லை என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் குற்றவியல் சட்டத்தின் அடிப்ப டையில் மேற்கொள்ளப்படும் விசாரணை களை தடுக்க முடியாது என அவர் தெரி வித்துள்ளார்.

இன்று நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் வாக்கு மூலமொன்றை அளிக்க வருமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் விமல் வீரவன்ச ஆகியோருக்கு அழைப்பு விடுக் கப்பட்டிருந்தது.

தேர்தல் ஆணையாளரின் உத்தரவிற்கு அமைய இருவரையும் அழைக்கும் நடவ டிக்கை ஒத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

# பிரதமர் ரணில் சிறப்பாக நடித்தாலும் மக்கள் பழையதை மறக்கமாட்டார்கள்

## சீ.பி.ரட்நாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறந்த முறையில் நடித்து வருகின்ற போதிலும் மக்கள் பழையவற்றை மறந்து விட மாட்டா ர்கள் என முன்னாள் அமைச்சர் சீ.பி. ரட்நாயக்க தெரிவித்துள்ளார்..

நுவரெலியா மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் பெருந்தோட்டப் பகுதிக ளின் பாதைகளை வெள்ளையர்கள் அமைத் திருந்தனர்.

இந்தப் பாதைகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமே செப்ப னிட்டு கொங்கிறீட் இட்டது.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பு வழங்கி வரும் பெருந்தோட்ட மக்களின் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இன்னும் எஞ்சியுள்ளன.

பெருந்தோட்டப் பகுதி வீடுகளுக்கு மின் சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், ஆசிரியர் நியமனங்களை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமே மேற்கொண்டது.

அதிர்ஷ்டத்தில் கிடைத்த பிரதமர் பத வியை வைத்துக் கொண்டு ரணில் விக்கிர மசிங்க நடித்து வருகின்றார்.

அவர் நடித்தாலும், பெருந்தோட்ட மக்கள் உள்ளிட்ட நாட்டு மக்கள் கடந்த கால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கசப்பான அனுப வங்களை மறந்து விட மாட்டார்கள் என சீ.பி. ரட்நாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)


**விற்பனைக்கு**

37ஶ்ரீ XXX இலக்கமுடைய உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு. (Model 240 மசிபேகிஷன்) (1473)

தொடர்புகளுக்கு 077 865 5805


# ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை தடுக்க முடியாது



ராஜபக்ஷவினர் வானத்திலும் பூமியிலும் கடலிலும் கொள்ளையிட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது எனவும் அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி பெற செய்வதற்காக அம்பாந்தோட்டை மாவட்ட மக்கள் அணிதிரண்டு வருகின்றனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டங்களில் நான் மக்கள் மத்தியில் உரையாற்றியுள் ளேன். எவராலும் தடுக்க முடியாத அளவுக்கு மக்கள் வெள்ளத்தால் ஐக்கிய தேசியக் கட்சி வலுவடைந்துள்ளது எனவும் சஜித் பிரேம தாச மேலும் தெரிவித்தார். (இ-7)


**B.B.A, (MANAGEMENT) BCOM (MEDIUM TAMIL)**

**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்(வெளிவாரி) ஒலுவில்**

மேற்படி பல்கலைக்கழகத்தினால் பதிவு திகதி 20/08/2015 வரை மீண்டும் நீடிக்கப் பட்டுள்ளது.

A/Lல் வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், கலை ஆகிய பிரிவுகளில் மூன்றுபாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் ஆவர்.

A/L 2014ஆம் ஆண்டும் இதற்கு முன்னர் பரீட்சை எடுத்தவர்களும் விண்ணப் பிக்கமுடியும்.

இக்கற்கை நெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.

பிரிவுகள் யாவும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

பிரிவு II க்குரிய விரிவுரைகள் ஆரம்பம்:-15/08/2015 காலை 8மணி

விபரங்கட்கு S.அருள்நங்கை (நிர்வாகி)

**புதிய உயர்கல்லூரி,**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**
**T.P No:-021 222 8148**
**021 568 9477**


# ராசி பலன்

13.08.2015
(ஆடி 28, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 7.51 மணிவரை
பூசம் பின்னிரவு 12.53 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை | | சூரி, செவ், சந் |
| | | | குரு சுக் புதன் |
| | | சனி | ராகு |

**மீனம்** தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**மேடம்** கல்வி நலன் கருதி எடுத்த முய ற்சிகள் வெற்றி தரும், பெற் றோர் நலனில் அக்கறை காட்டுவீ ர்கள், சிந்தனை ஆற்றலால் சிற ப்படைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், உடன் பிறப்புக்களின் மூலம் உள்ளம் மகிழும் செய்தி வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** சேமிப்பை உயர்த்தும் எண் ணம் உருவாகும், தொழி லில் உயரதிகாரிகளின் பாரா ட்டுக்களைப் பெறுவீர்கள், நாலவன்மையால் நற்பெய ரெடுப்பீர்கள்.

**கும்பம்** கடன் சுமைகளைச் சாமர்த்திய மாகப் பேசிச் சமாளிப்பீர்கள் ஆரோக்கியம் சீராகி ஆனந்த மடைவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** வீட்டுத் தேவைகளைப் பூர் த்தி செய்து கொள்ள முற்படு வீர்கள், வெளியூர்ப் பயண மொன்றால் கையிருப்பு கரையலாம், போசன சுக முண்டு.

**மகரம்** தொழிலில் எதிர்பார்த்த சலு கைகள் கிடைக்கப் பெறுவீர் கள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**சிம்மம்** மாற்றங்களால் ஏற்றம் பெறு வீர்கள், திடீர் பயணமொன்று உருவாகலாம், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு** எதிர்பாராத வகையில் சில பிணக்குகள் ஏற்பட்டு உறக்கம் குறையும், எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தொலைபேசி வழித்தகவ ல்கள் மகிழ்ச்சிதரும், தடைப் பட்ட காரியங்களில் முன்னே ற்றம் காண்பீர்கள், பயண ங்களால் பலனுண்டு.

**துலாம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத் தார்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர் கள், பிரியமான சிலரின் சந்திப் புக்கள் இடம்பெறலாம்.

**கன்னி** யோகமான நாள், இளைய சகோ தர வழியில் இனிய சம்பவ மொன்று நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியை விற்று ஐ.தே.க. வாக்கு வேட்டை

## மகிந்த குற்றச்சாட்டு

ஐக்கிய தேசிய கட்சி ஏனைய முறைகளை போன்று இம்முறை யும் மக்களை மறந்து விட்டதாகவும் நல்லாட்சியை விற்று வாக்கு களை பெறுவதாகவும் முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருமான மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் எட்டாம் திகதி ஏற் படுத்திய நல்லாட்சியை விற்று வாக்குகளை பெற்று கொள்ள நடவடிக்கைகளை மேற்கொ ள்ளும் ஐக்கிய தேசிய கட்சி, இம்முறை பொதுத் தேர்தலில் படுதோல்வியடையும் எனவும் முன்னணி 117 ஆசனங்களை பெற்று கொண்டு அதிகாரத்தை கைப்பற்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டிற்கு முறை கேடான வழியில் பிரதமராகினார் எனவும் இந்த விளையாட்டுகள் அனைத்தும் எதிர்வரும 17 ஆம் திகதியுடன் நிறைவடையும். இவை அனைத்தையும் மாற்று வதற்கு மக்கள் வெற்றிலைக்கு வாக்களிக்குமாறு கேட்டு கொள்வதாக முன னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7)







## முன்னணியின் கேகாலை மாவட்ட வேட்பாளர் கைது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கேகாலை மாவட்ட வேட்பாளர் அப்துல் லதிப் கைது செய்யப்பட்டு ள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரம்புக்கன புகை யரத நிலையம்அருகே துண்டுப் பிரசுரங் கள் பகிர்ந்து கொண் டிருந்தமையே அவ ருக்கு எதிரான குற்றச் சாட்டு என குறிப்பிடப் படுகின்றது.

எதிர்வரும் 27 ஆம் திகதி கேகாலை நீதவான் நீதிமன்ற த்தில் ஆஜராகுமாறு அவருக்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

தற்போது வரை யில் அப்துல் லதி ப்பை பொலிஸ்பிணை மூலம் விடுதலை செய் வதற்கான நடவ டிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக தகவல் வெளியாகியு ள்ளது. (இ-7)
















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள்

ஸ்ரீ சிவகுருநாத குருபீடத்தின் ஏழாவது குருபீடாதிபதியாக இருந்து 25.07.2006 இல் சமாதி அடைந்த ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் ஒன்பதாவது குருபூசை தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.


யாழ்ப்பாண ஞானபரம்பரையில் வந்த மகான்களுள் தவத்திரு ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளும் ஒரு வராவர். இவர் கொக்குவில் தலையாளி யில் சித்தவைத்தியர் செல்லத்துரை சிவபாக்கியம் தம்பதியினரின் இரண்டாவது புத்திரனாக 27.08.1944 இல் அனுஷ நட்சத்திரத்தில் திருஅவதாரம் செய்தார்.

இவர் மட்டுவில் ,சாவகச்சேரியைச் சேர்ந்த சிவஸ்ரீ பொன்னுச்சாமி குருக்களிடம் சமயதீட்சைப் பெற்றுக்கொண்டதுடன் 1964 ஆம் ஆண்டு அதாவது சுவாமிகளின் 20 ஆவது வயதில் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளிடம் ஞானதீட்சை பெற்றார். 1981 ஆம் ஆண்டு சுவாமிகள் வேதாந்தமடம் சிவகுருநாதகுரு பீடத்தின் 7 ஆவது குருபீடாதிபதியாகக் குருபீடம் வந்தார்.

அகத்திய முனிவர் போன்ற சிறிய தோற்றமுடையவர். ஆனால் உயர்ந்த உள்ளமும் புன்முறுவல் பூத்தமுகமும் உடையவர். சிவந்தமேனியும் கருகரு என்றிருக்கும் அழகிய தாடியும் கூர்மையான கண்களும் உடையவர்.

“இறைவன் என்னை ஊக்குவிக்கின்றார் நான் ஒரு கருவியாக செயற்படுகின்றேன். ஆண்டவன் என்னை ஆட்டுவிக்கின்றார். நான் ஆடுகின்றேன். என் செயல் ஆவது ஒன்றும் இல்லை எல்லாம் அவன் செயலே”என தன்வாழ்வில் அடிக்கடி கூறிக் கொள்வார்.

ஆச்சிரமத்திற்கு வரும் அடியார்கள் அன்பர்கள் அனைவரையும் “வாருங்கோ” என் இன்முகத்துடனும், அன்புடனும், மகிழ்வுடனும் வரவேற்று உபசரித்து அனுப்புவதல் அவருக்குநிகர் யாருமேயில்லை.



பந்தபாசங்களை நீக்கி மண், பொன், பெண் ஆசைகளைத் துறந்த துறவிகளே இம் மடத்தைநிர்வகித்துவந்தனர். ஆனால் பதவி ஆசையால் உப்படுத்தப்பட்டசிலர் சுவாமிகளுககுப் பல கஷ்டங்களைக் கொடுத்தனர். இவர்களால் ஏற்பட்ட தொல்லைகளையும் கஷ்டங்களையும் தனியாக நின்று இறைவன் கருணையுடன் சற்றேனும் மனம் தளராம லும் நீதி வழுவாமலும் மடத்தைப் பாதுகா த்து நடத்திய பெருமை சுவாமிகளையே சாரும்.

இவை யாவற்றிற்கும் குருமாரின் அருளும், இறைவனின் திருவருளும் துணை நின்றதாகஅடிக்கடி கூறிக்கொள்வார். தனது வாழ்நாளின் முடிவுகாலம் வரப்போவதை உணர்ந்தசுவாமிகள் 01.02.2002 இல் மடத்தின் பொறுப்புக்களை அருணாசலம் செந்தூரன் என்ற இயற்பெயர் கொண்ட ஸ்ரீவேத வித்தியாசாகரர் என்ற இளம் பீடாதி பதியை உரு வாக்கி அவருக்கு மரணசாதனம் எழுதி மடத்தின் சகல பொறுப்புக்களையும் ஒப்ப டைத்தார். ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள் 25.07.2006 செவ்வாயக் கிழமை இரவு 8 மணியளவில் பூச நட்சத்திரத்தில் இறைவனு டைய பாதார விந்தங்களுடன் இரண்டறக் கலந்து விட்டார்.

குருபீட அடியார் ஆர்.வீ.கே.

## ரணிலை வெற்றிபெற செய்வதற்காக பிரபாவின் உடலும் தோண்டப்படலாம்

(கொழும்பு)

அரசியல் இலாபங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கம தலைவர் பிரபாகரனின் உடலையும் தோண்டுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ரகர் வீரர் வசிம் தாஜுடீனின் மரணம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர்,

சடலங்களை தோண்டியெடுத்து மக்கள் மத்தியில் போலி பிரசாரத்தை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர். இதனை இந்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் சுயரூபத்தை மாற்றுவதற்காக திருடன் என்று கூறினார்கள். அதனையும் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

தற்போது மகிந்த ராஜபக்ஷவை கொலையாளி என சித்திரிக்க முயற்சிக்கின்றார்கள். இதனையும் மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

எதிர்வரும் நாட்களில் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சடலத்தை தோண்டினால் வெற்றி பெற முடியும் என கூறினால் ரணில் விக்கிரமசிங்க அதனையும் செய்வார்.

நாங்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒன்று கூற விரும்புகின்றோம், கடந்த 5 மாதங்களினுள் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு என்ன செய்ததென்று மக்கள் நன்கு அறிந்துள்ளனர்.

ஜனவரி மாதம் 8ம் திகதி செய்த தவறு மக்களுக்கு தற்போது புரிந்துள்ளது. மக்கள் அத் தவறினை சரிப்படுத்துவதற்கு ஆயத்தமாகியுள்ளனர்.

எனவே 2ம் வகுப்பு வேலைகள் போன்று அல்லது சிறு பிள்ளைகளை போன்று வேலை செய்ய வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தங்கம் கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் இரு இலங்கையர்கள் இந்தியாவில் கைது

தங்கம் கடத்த முயற்சித்த குற் றச்சாட்டின் பேரில் இரண்டு இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் கேரள மாநிலம் கொச்சின் விமான நிலையத்தில் இரண்டு இலங்கையர்களும் தங்கத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய சுங்கப் பிரிவின் விமான நிலைய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குறித்த இலங்கையர்களை கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து இந்த இரண்டு இலங்கையர்களும் இந்தியா வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.200 கிராம் எடையுடைய நான்கு தங்க பிஸ்கட்கள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. கால்களில் போலியாக பென்டேஜ்களை சுற்றி அதனுள் தங்கத்தை மறைத்து கடத்தியுள்ளனர்.

தங்கத்தை சென்னைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்ய இவர்கள் முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## முதலைக் கண்ணீர் வடிப்பதில் மகிந்தவுக்கு நிகர் அவர்தான்

### அர்ஜுன கிண்டல்

முதலைக் கண்ணீர் வடிப்பதில் மகிந்தவற்கு நிகர் அவரே தான் என முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ரகர் வீரர் வசீம் தாஜுதீனின் மரணம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிலைப்பாடே இதற்கு சான்று என்றும் அவர் தெரிவித்தார்.

ரகர் வீரர் வசீம் தாஜுதீனின் மரணம் தொடர்பாக நாம் பேசினோம். இதனை மரணம் என்று சொன்னார்கள்.

நாம் கொலை என்று சொன்னோம். இருப்பினும் தற்பொழுது, பரிசோதனையின் பின்னர் அந்த விளையாட்டு வீரர் ஆயுதங்களினால் தாக்கப்பட்டுத்தான் மரணம் ஏற்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

இப்பொழுது அவரின் சடலமும் மீண்டும் தோண்டப்பட்டு பரிசோதனை நடத்தப்படுகின்றது.

இந்த வீரரின் மரணம் 2012 ஆம் ஆண்டு நடைபெற்றது. 2014 வரை மகிந்த ராஜபக்ஷ தான் இந்த நாட்டில் ஜனாதிபதியாக இருந்தார். இருந்தும் அவர் எந்தவொரு பிரேத பரிசோதனையையும் நடத்தவில்லை.

இவர் கடந்த காலத்தில் மறைத்த விடயங்கள் இழுத்து இழுத்து வெளியில் வரத் தொடங்கியுள்ளன.



வசீம் தாஜுதீன் இந்த நாட்டின் தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வீரர். மகிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால் மீண்டும் விசாரணைகளை ஆரம்பிக்கப் போவதாக கூறியுள்ளதை ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது.

ஆனால் இதனை நாம் ஏற்க முடியாது. தனது ஆட்சியில் ஒருவரை கொன்றுவிட்டு இப்பொழுது மீண்டும் ஆட்சிக்கு வந்தால் விசாரணைகளை மேற்கொள்வேன் என்று கூறுவதானது வேடிக்கையானது. இவர் முதலைக் கண்ணீர் வடிக்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 19 3/4 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4862 | |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 43 1/2 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் A/L/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/4864 | |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 8 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: JIT/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/4865 | |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 54 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ சொந் தொழில்<br>தொ.இ: B/4867 | |

இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 7 3/4 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/4891 | |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 94 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/4894 | |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 16 1/2 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSC, CIMA/ தனியார் தொழில் லண்டன்<br>தொ.இ: G/4896 | |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 35 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, MA/ ஆசிரியர்<br>தொ.இ: G/1799 | |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2015

# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்



## எங்களுக்கு கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு கடவுள்தான் ஐயா கணேஷ்வரன்

மல்லாகம் கோணப்புலம் நலனபுரி முகாமில் நான் வசிக்கின்றேன். என் பெயர் ஜன்பிகா. கணவர் மேசன் தொழில் செய்பவர். எனக்கு திருமணமாகி தெல்லிப்பழை வைத்தியசாலையில் முதல் குழந்தை கிடைத்தது. குழந்தைக்கு மலவாசல் இல்லை என அறிவித்து யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்தார்கள்.

அங்கு வேறு பக்கத்தில் இடைவெளி ஏற்படுத்தி விட்டு ஒன்பது நாட்களுக்குப் பின்பு கொழும்பிலுள்ள நோனா வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள்.

48 நாட்கள் அங்கு வைத்திருந்தார்கள். பின்பு ஆறு மாதம் கழித்து மீண்டும் அங்கு வரச் சொன்னார்கள். இது போக அநுராதபுரம் வைத்தியசாலைக்கும் எடுத்துச் சென்று காட்டினோம். அங்குமிங்கும் அலைந்து திரிந்ததில் எந்தப் பயனும் கிட்டவில்லை.

ஒருவேளை வயிற்றுக்கு கஞ்சிக்குக் கூட வக்கில்லாமல் கஷ்டப்படும் எங்கள் குடும்பத்தவர்கள் எப்படிச் சரி பிள்ளையை தனியார் வைத்தியசாலையில் காட்டி சிகிச்சை




மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.

அதற்காக எமது பகுதியிலுள்ள அரசியல்வாதிகளிடம் சென்று உதவி கேட்டால் ஏதாவது உதவி செய்வாரகள் என்கின்ற முழுமையான நம்பிக்கையை வைத்தோம். அப்போது கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலம். குறிப்பாக இங்குள்ள எல்லா முக்கிய அரசியல்வாதிகளையும் காலடிக்குச் சென்று சந்திக்கக்கிடைத்தது. எல்லோரும் உதவி செய்வதாகத்தான் கூறினார்கள்.

ஆனால் இதுவரை எதுவும் செய்யவில்லை. நம்பி எதிர்பார்ப்புடன் சென்று உதவி கேட்டவர்கள் எல்லோரும் கைவிட்டு விட்டார்கள். இப்போது பிள்ளைக்கு வயது ஒரு வருடமும் நான்கு மாதமும்.

துன்பத்தில் உறைந்து போயுள்ள எங்களுக்கு திடீரென கடவுளால் அனுப்பட்ட கடவுளாக ஐயா கணேஷவரன் எங்களைப் பார்க்க வந்தார். ஒருநாளைக்கு உழைக்கின்ற ஊதியம் சாப்பாட்டுக்குப் போதுமானதாக இருக்கிறது. எதிர்பாராத வகையில் இது மாதிரியான நோய்க்குள்ளாகின்ற பிள்ளைகள் இறப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை.

அவர் இந்தச் சந்தர்ப்பத்தில் வைத்திய செலவுக்கு எவ்வளவு பணம் செலவானாலும் தான் செய்து தருவேன் என உறுதியுடன் கூறினார. அதுமட்டுமல்ல உடனே முன்னோடி வைத்திய பரிசோதனை முயற்சிகளுக்காக எதிர்பார்க்காதளவுக்கு பெருந் தொகையான பணமும தந்தார்.



அதன் பின்பு ஐயா கொழும்பிலுள்ள அவருடைய அக்காவை தொடர்பு படுத்தித் தந்தார்.

அவரும் ஐயா மாதிரி இரக்க குணமுடையவர். சகல உதவியும் செய்தார். கொழும்பில் அவர் வீட்டில எங்களை தங்க வைத்தார். அவர் வீட்டிலிருந்து லங்கா தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். 15 நாட்கள் அங்கு தங்க வேண்டி ஏற்பட்டது. அறுவைச் சிகிச்சை நடைபெற்ற பிற்பாடு பிள்ளை மிகுந்த ஆரோக்கியத்துடன உள்ளது.

ஐயாவுக்கு ஐந்து இலட்சம் செலவு மேல் செலவு போய் இருக்கலாம்.. இந்தப் பணத்தை எங்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. எங்களுக்கு உயிர் இருக்கும் காலம வரை ஐயா எங்களுக்கு தெய்வம். ஐயா கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு கடவுள்தான் என்று நாங்கள் சொல்ல வேண்டும்.


இலங்கை முழுவதும் 14 வலது குறைந்தோர் நிலையம் வைத்து நடத்தும் ஐயா எங்கள் மண்ணுக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷம. எமது தமிழ்சமூகத்திற்கு கிடைத்த பெரும் தொண்டன்.


அவர் தேர்தலில் நிற்பதையிட்டு நான்மகிழ்ச்சி அடைகின்றேன். மண குடிசையை ஒரு தடவை வந்து எட்டிப் பார்க்காதவர்களெல்லாம் வாக்குப போடுங்கள் என்கிறார்கள்.

ஐயா மண் குடிசையை மட்டுமல்ல உயிரையே காக்கும் தெய்வம்.. உறுதி செய்யப்பட்ட அவருடைய வெற்றிக்கு சகல தரப்புடைய மக்களும் பங்காளியாக இருத்தல் வேண்டும் என்பதே என்னுடைய அன்பான வேண்டுகோள்.

அன்புடன் : **ஜன்பிகா**
கோணப்புலம்
நலன்புரி முகாம், மல்லாகம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூர் வீதியில் அனகொண்டா தர்மசங்கடத்தில் அதிகாரிகள்





(பெங்களூர்)

மேடு பள்ளமான வீதியில் மழை நீர் தேங்கி இருந்தால் என்ன செய்வோம்? மெதுவாக ஒதுங்கி செல்வோம், அரசாங்கத்தை திட்டிக் கொண்டே அந்த இடத்தைவிட்டு நகர்வோம். ஆனால, பெங்களூரைச் சேர்ந்த சில ஓவியர்களும், தன்னார்வ குழுக்களும் எடுத்திருககும் யுக்தி சற்றே வித்தியாசமானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யஷ்வந்த்பூரில் உள்ள ஒரு பரபரப்பான சாலையில் ஏற்பட்டிருந்த ஒரு பள்ளத்தில் பெரிய அனகொண்டா உருவத்தின் வாயில மனித கை இருப்பது போல இவர்கள் அமைத்திருந்தனர்.

அந்த சாலையில் இருந்த பள்ளத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்காத பெங்களூர் மாநகராட்சி நிர்வாகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த பெரிய அனகொண்டா பாம்பு பொம்மையை அவர்கள் அமைத்திருந்தனர்.

இது தற்போது, பெங்களூர் மாநகர பாலிகே என்ற நகர சீரமைபபுக்கு பொறுப்பான அரசாங்க அமைபபை கடும் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

இது குறித்து பெங்களூர் அமைப்பைச் சேர்ந்தவர் கள் கூறும் போது, இந்த பொம்மையை விளையாட்டாகவும், சிரிப்பாகவும், ஏன் ஒரு படைப் பாகவும் கூட பார்க்கலாம். ஆனால, இந்த அனகோண்டா பாம்பு பொம்மை மூலமாக மிக ஆழமான செய்தியை உரிய அதிகாரிகளுக்கு உணர்த்த முயற்சித்து இருக்கிறோம்" என்றனர். (3-7)

# அகதிகள் தொடர்பான சட்டத்தை கடுமையாக்குகிறது ஜேர்மனி

ஜேர்மனியில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடுமையான இடம்பெயர் சட்டம் பெர்லின் பகுதியில் உள்ள அகதிகள் மத்தியில் கடும கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அகதிகள் அந்தஸ்து கோரியுள்ள 94 ஆயிரம் அகதிகளின் மறுநுழைவு அனுமதியையும் ஜேர்மன் அரசு முடக்க திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து கருத்து தெரிவித்த அதிகாரிகள், கடந்த 2013-ல் இருந்து அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாகவும், தற்போது நிலுவையில் இருக்கும் விண்ணப்பங்கள் 2.5 லட்சம் எனவும் தெரிவித்தனர்.


இந்த ஆண்டு மட்டும் ஜேர்மனியில் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை 4 லட்சத்தைத் தாண்டும் என தெரிவித்துள்ள அதிகாரிகள், இந்த ஆண்டு இறுதிக்குள் இது 4.5 லட்சம் என அதிகரிக்கும் என்று தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், சுகாதார அலுவலகத்தின் அருகே சில அகதிகள் முற்றுகையிட முயன்றதால் பொலிசாருக்கும் புலம் பெயர்ந்தோருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

புதிதாக வருகை தந்துள்ள நூற்றுக்கணக்கான அகதிகள் தங்களது விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்யும் பொருட்டு காத்திருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு தேவையான உறைவிடம் வழங்க அரசால் முடியவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (3-7)

# விஞ்ஞானி அப்துல் கலாமின் அணுகுமுறை அணுகுண்டு சாதனையைவிட மகத்தானது

## விஞ்ஞானி வி.டில்லிபாபு புகழாரம்



**விஞ்ஞானிகள் பொதுவாக கர்வத்தோடு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளோடு மட்டுமே நெருக்கம் கொண்டிருப்பர். அந்த சம்பிரதாய வழக்கத்தை உடைத் தெறிந்தவர் அப்துல் கலாம்தான். அதுதான் அவருடைய அணுகுண்டு சாதனையைவிடவும் மக்களிடம் புரட்சியை ஏற்படுத்தியது என இந்திய விஞ்ஞானி வி.டில்லிபாபு தெரிவித்துள்ளார்.**

சமீபத்தில், பெங்களூரில் தூய அல்போன்சா உயர்நிலை பாடசாலை மற்றும் எல்லையில்லா பொறியியலாளர்கள் பெங்களூர் கிளை சார்பில், அறிவியல் மன்றம் ஒன்று பென்சன்டவுனில் திறக்கப்பட்டது.

அந்த அறிவியல் மன்றம் சனிகிழமை பாடம் என்ற பெயரில் சனிக்கிழமை தோறும் அறிவியல் பாடம் நடத்துகிறது. இதை தொடங்கி வைத்து பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விண்வெளி மற்றும் விமான துறையில் இந்தியாவின் சாதனைகள் மகத்தானது.

இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள இலகுரக போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் நமது தொழிநுட்பத் திறனை உலகுக்கு பறைசாற்றுகிறது.

மேலும், இளம் வயதில் அறிவியல் மீது நாட்டம் கொள்வது நல்லது. செய்முறைகள் மூலம் அறிவியல் வினைகளை மாணவர்கள் புரிந்து கொள்ளத் தொடங்கினால் போதும், அறிவியலில் அடுத்தகட்ட முன்னேற்ற நிலைக்கு இந்தியா அடியெடுத்து வைக்கும் முதற்படியாக அது அமையும்.மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தை ஏற்படுத்துவது வளமான இந்தியாவுக்கு நல்லது.

மாணவர்களும் அறிவியலை ஆர்வமாக கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும்.

இந்திய அளவில் அறியலில் போட்டிபோடும் மாணவர்களுக்கு பொருளாதார ரீதியிலும் எங்கள் அமைப்பு உதவும் இந்த சனிக்கிழமை பாடம் மேலும் பல பாடசாலைகளில் ஏற்படுத்தப்படும் என்றும் கூறினார்.

அப்துல் கலாம் இறந்தபோது, ஒரு விஞ்ஞானியின் எல்லைகளையும் கடந்து ஒரு நாட்டின் பெரிய அரசியல் தலைவர், பெரிய சினிமா நடிகர், பெரிய விளையாட்டு வீரர் இறந்ததுபோல இளைஞர்கள் உட்பட எல்லா தரப்பினரையும் துக்கத்தில் பங்கெடுக்க வைத்தது.

ஒரு காலத்தில் விஞ்ஞானிகள் என்றால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பியர்கள்தான் நமக்கு அந்த அறிவு தகுதியே கிடையாது என்று, இந்தியர்களே தங்களை கிண்டலடித்துக் கொண்டிருந்தனர். சர்.சி.வி. ராமன போல ஓரிருவர் மட்டுமே தப்பிப் பிறந்ததாக நினைத்தனர்.

உலக அளவில் சாதனை புரியாவிட்டாலும் விண்வெளி போன்ற அறிவியல் துறையில் சிறந்த விஞ்ஞானிகள் தொடர்ந்து பணிபுரிந்தே வந்திருக்கின்றனர்.

ஆனால், அவர்கள் எல்லாம் மக்களோடும் மாணவர்களோடும் அவ்வளவு தொடர்புகொள்ளவில்லை. மாணவர்கள் தன்னை புரிந்து கொள்ளாமலே விஞ்ஞானியாகும் முயற்சிக்கு நடுங்கினர்.

அதற்கு காரணம் அதை பெரிய விடயமாகவும் வியப்பாகவும் பதிய வைத்த, அவர்களுக்கு முன்னால் இருந்த அறிவியல் அறிஞர்களின் நடவடிக்கைகள்தான்.

அந்த மாயை திரையை விலக்கி விஞ்ஞானிகளாக யாரும் பிறக்கவில்லை எல்லோருமே உருவானவர்கள்தான் என்ற நம்பிக்கையை மாணவர்களுக்கு ஊட்டியதுதான் அப்துல் கலாமின் அரும்பணி.

மலைப்பாக நினைக்கப்பட்ட ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிப்புகள் இப்போது அந்நிலைமாறி, சாமானியர்களும் முயன்றதால் வெற்றி பெற முடிகிறது. அதுபோல, இனி விஞ்ஞானி களும் நிறைவார்கள், அவர்களில் சிலர் உலக அளவிலும் உயர்வார்கள் இது நிச்சயம் என்றார். (3-7)

# வாகன விபத்தில் 11 பேர் உயிரிழப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் வாகனம் பள்ளத்திற்குள் விழுந்து விபத்துக்குள் சிக்கியதில் 11 பேர் உயிரிழந்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் குபுவாரா-கார்நாக் சாலையில் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்று பள்ளத்திற்கு விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 11 பேர் உயிரிழந்தனர்.

விபத்து தொடர்பாக மாவட்ட பொலிஸ் அதிகாரி பேசுகையில், குபுவாரா-கார்நாத் சாலையில் சென்று கொண்டிருந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்திற்குள் விழுந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்தனர்," என்று கூறியுள்ளார்.

இதுதொடர்பாக விசாரிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். வாகனத்தில் இருந்தவர்கள் குபுவாராவில் இருந்து கார்நாக் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

# இந்திய- பாகிஸ்தான் எல்லையில் பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகம்

## தினம்தோறும் நடைபெறுவதனால் பதற்றம் அதிகரிப்பு

(ஸ்ரீநகர்)

இந்திய- பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் மீண்டும் அடாவடியாக துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தியுள்ளது. பாகிஸ்தானுக்கு இந்திய இராணுவம் பதிலடி கொடுத்துள்ளது.

காஷ்மீரில் சர்வதேச எல்லைப் பகுதியில் இந்தியா-பாகிஸ்தான் இடையே கடைப்பிடிக்கப்பட்டு வரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை, பாகிஸ்தான் இராணுவம் அடிக்கடி மீறி வருகிறது.

எல்லையோர மாவட்டங்களான பூஞ்ச், ஜம்மு உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள இராணுவ நிலைகள் மற்றும் கிராமங்கள் மீது பாகிஸ்தான் வீரர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த மாத தொடக்கத்தில் இருந்தே தினந்தோறும் பாகிஸ்தானின் அத்துமீறல் அதிகரித்துள்ளது.

இந்தியாவின் எச்சரிக்கையை மீறி, ஜம்மு காஷ்மீரில் எல்லையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதல் நடத்துவதை பாகிஸ்தான் இராணுவம் வாடிக்கையாக கொணடுள்ளது.

தீவிரவாதிகளை இந்தியாவிற்குள் ஊடுருவ செய்வதற்காக பாகிஸ்தான் இராணுவம் இச்செயல்களை தொடர்ச்சியாக செய்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவும் பாகிஸ்தான் இராணுவம் எல்லையில் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தியுள்ளது. ஜம்மு காஷ்மீர் மாநிலம பூஞ்ச் மற்றும் பாலகோட் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது. பூஞ்ச் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளது.



இந்த துப்பாக்கி சூடு காலை 4 மணிவரையில் நீடித்துள்ளது. பாலகோட் பகுதியில் இரவு 9:15 மணிக்கு துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த துப்பாக்கி சூடானது அதிகாலை 1:30 மணிவரையில் நீடித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி நடத்திய தாக்குதலுக்கு இந்திய இராணுவம் பதிலடி கொடுத்தது. துப்பாக்கி சூட்டில் ஏற்பட்ட சேதம் குறித்தான தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை. (3-7)

# ஐ.நா மாநாட்டிற்கு செல்கிறார் மோடி

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சி நடவடிக்கைகள்-2015 என்ற தலைப்பிலான உச்சிமாநாடு எதிர்வரும் செப்டம்பர் 25-ந் திகதி தொடங்கி 3 நாட்கள் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில், 150-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஐ.நா. உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடியும் அமெரிக்கா செல்கிறார். செப்டம்பர் 25-ந் திகதி அவர் மாநாட்டில் உரையாற்றவுள்ளார். 28-ந் திகதி தொடங்கும் பொது விவாதத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பங்கேற்கவுள்ளார்.

பின்னர் அவர் அமெரிக்காவின் மேற்குப் பகுதி கலிபோர்னியாவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரத்துக்குச் செல்கிறார். அங்கு நடைபெறும் ஒரு மாநாட்டில் மோடி கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தல் - 2015

பாராளுமன்றம் என்பது வசந்த மண்டபமோ
அல்லது
வயோதிபர் மடமோ அல்ல!
அது
ஜனநாயகப் போர்க்களம்!

அடக்கப்படும் தமிழினத்தின் சார்பில்
போரிட வல்லவர்களை தேர்ந்தெடுங்கள்

நாடறிந்த சிரேஷ்ட சட்டத்தரணி

## ந.ஸ்ரீகாந்தா



(609)

வெற்றி ஈட்ட வாக்களியுங்கள்!



## பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2015

## இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ் தேசியக் கூட்டமைப்பு)

## மாபெரும் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டம்

காலம்:-13.08.2015 வியாழக்கிழமை பி.ப 5.30 மணி
இடம்:-முத்திரைச் சந்தி, (சங்கிலியன் பூங்கா, நல்லூர்)
தலைவர்:-கௌரவ சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள் (வட மாகாண சபை, அவைத் தலைவர்)

### உரையாற்றுவோர்

01.திரு.மாவை சோ.சேனாதிராசா (முன்னாள் பா.உ) வேட்பாளர் (தலைவர் இ.த.அ.கட்சி)
02.திரு. க.பிரேமச்சந்திரன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் (தலைவர் ஈ.ம.பு.வி முன்னணி கட்சி)
03.திரு.த.சித்தார்த்தன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் தலைவர் புளொட்
04.திரு.ந.ஸ்ரீகாந்தா முன்னாள் பா.உ) வேட்பாளர் பிரபல சட்டத்தரணி
05.திரு.ம.அ.சுமந்திரன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் பிரபல சட்டத்தரணி
06.திரு.ஈ.சரவணபவன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் நிறுவுனர் உதயன் குழுமம்
07.திரு.சி.சிறிதரன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் முன்னாள் அதிபர், கிளிநொச்சி
08.திரு.க.அருந்தவபாலன் வேட்பாளர் அதிபர் டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி
09.திருமதி மதினி நெல்சன், வேட்பாளர் முன்னாள் உறுப்பினர் பருத்தித்துறை நகர சபை
10.திரு.ந.அனந்தராஜ் வேட்பாளர் ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் முன்னாள் தவிசாளர் வல்வெட்டித்துறை நகர சபை

தமிழ் தேசிய அபிமானிகள் அனைவரையும் கருத்துக்கேட்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(சி-506)

இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ் தேசியக் கூட்டமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தில் அதிகரித்துவரும் போதைப் பழக்கமும் பாலியல் வன்முறைகளும்



கலாநிதி.க.கஜவிந்தன்
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்
மெய்யியல்/உளவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

எப்படியாவது வாழ்ந்து விடலாம் என்ற எண்ணத்தில் தம்மையும் தமது சமூக கட்டுப்பாடுகள், பண்பாடுகள் மற்றும் விழுமியங்களையும் அநேகர் மறந்து மனிதாபிமானம் அற்றவர்களாகவும், சமூக வாழ்வில் இன்னல்களையும இடையூறுகளையும் ஏற்படுத்தும் எண்ணங்களை சாதாரணமாக தமக்குள்ளே கொண்டு விரோத மனப்பாங்கோடு நம் சமுதாயம் மாறிக் கொண்டுவருகிறது. சமூகம் எதிர்பார்க்கும் அன்பு, கருணை, உதவும் நடத்தை என்பன அருகி கொலை, பகை விரோதம், வக்கிரம், "வன்னடத்தை" என்ற சமூக விரோத நடத்தைகள் தலைதூக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படைகளில் மிகவும் மோசமான நிலையில் சமூகம் எதிர் நோக்கிக் கொண்டு இருக்கின்றதோர் பிரச்சினையாக அதிகரித்து வரும் பாலியல் வன்முறைகள் காணப்படுகின்றது. பத்திரிகைகளும் முகநூல்களும் இன்று இவ்வாறான பாலியல் வன்னடத்தை சம்பவங்களுக்கு தலைப்பிட்டு அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

சமூகப் பிறழ்வுகள்

இன்று உலக இயக்கத்தில் ஒவ்வொரு விடயமும் தனக்கு எதிரான ஒரு கருத்தை மறைமுகமாக அல்லது வெளிப்படையாக கொண்டுள்ளதனை நாம் காணலாம். உதாரணமாக வழக்கம், வழக்கத்திற்கு புறம்பானது, சாதாரணமானது, அசாதாரணமானது என்ற வகையிலோ விரும்பத்தகுந்தது, விரும்பத்தகாதது என்ற அடிப்படையில் நேரானதும் எதிரானதுமான இரு பண்பினை நாம் காணமுடிகிறது. இவ் விடயம் தொடர்பாக நாம் நோக்கும் போது மனித நடத்தையில் சமூகத்திற்கு ஒவ்வாத அல்லது விரும்பத்தகாதது என்பதனை சமூகமோ அல்லது தனிமனிதனோ பொதுவாக விரும்புவது இல்லை. ஆனால் காலத்தின் மாறுதலில் சமூகத்தாலும் ஒரு தனிமனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாததும், விரும்பப்படாததுமான விடயங்களையே நாம் சமூக நடத்தையில் மனிதர்களிடையே காணக்கூடியதாகவுள்ளது.

சிறப்பாக மனிதவாழ்வின் சாதாரணமான வாழ்க்கைக்கு புறம்பான பிறழ்வுகளும், சமூக அங்கீகாரமற்ற நடத்தைகளும் இன்று பல்கிப் பெருகிக்கொண்டு இருப்பதுடன் பலரது வாழ்வில் எதிர்மறையான விளைவுக்குள் இட்டுச் செல்வதாகவுமே உள்ளது. சமூகத்தால் எதிர்பார்க்கப்படும் உதவும் நடத்தை, கருணை, கீழ்ப்படிவு, வீரம் போன்ற அநேக விடயங்கள் இன்று அருகி, சமூக விரோத நடத்தைகளான பகைமை, விரோதம், கொலை, பாலியல் வன்நடத்தைகள் என்பன அதிகரித்து வருவதுடன் இப்பண்புகளையும் நடத்தைகளையும் வெளிப்படுத்தும் அநேகர் தனக்கும் பிறருக்கும், ஆபத்தானவராகவும் காணப்படுவதுடன் சமூக விரோத ஆளுமையைத் தன்னகத்தே கொண்டு வாழ்கின்றனர்.

இப் பண்புகள் குறித்த தனிநபரை மாத்திரமின்றி அவரது குடும்பம், நண்பர்கள், சமூகம் என்பவற்றுடன் நாடளவிலான பாரிய பாதிப்புக்களைத் தோற்றுவிப்பதாகவும் அமைந்து விடுகின்றது. இவ்வடிப்படையில் நோக்கும் போது குறிப்பாக தமிழ் சமுதாயத்தில் சிறுவர் முதல் வளர்ந்தவர்கள் வரை அநேகர் வன்னடத்தை உணர்வினால் தூண்டப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

போதைப் பொருட்பாவனை

நம் சமுதாய ஆரோக்கியத்திற்கு எதிராக பாரிய அளவில் எழுந்திருக்கும் பிரச்சினைகளில் முக்கியமானது போதைப்பொருட்களால் எழும் பிரச்சினைகளாகும். போதைப் பொருட்களினால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா அமைப்புக்களிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன. தன் சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தையும், குழப்பத்தையும் தனக்குத்தானே மனிதன் ஏற்படுத்திக் கொள்கின்றான். மனிதர்கள் ஒருவருக்கொருவர் அன்பானவராகவும், விட்டுக் கொடுப்பவராகவும் இருந்து மனிதாபிமானத்துடனும், உண்மையுடனும் வாழ வேண்டிய தேவை காணப்படுகின்றது. ஏனெனில் மனித பண்புகள், பாரம்பரியங்கள், நம்பிக்கைகள் மற்றும் சமூக ஒழுக்க விதிமுறைகள் தொன்றுதொட்டு பேணப்பட்டு வந்தன இவையே மனித நடத்தையை விலங்கு நடத்தையிலிருந்து பிரித்துக்காட்டியது.

இத்தகைய பாலியல் வன்முறைகளுக்கு போதைவஸ்துகளின் அதிகரித்த பாவனையும் பாலியல் பற்றிய தவறான மனப்பாங்குகள் மற்றும் வக்கிர எண்ணங்களுமே காரணமாக காணப்படுகிறது. மனிதனையும் அவனது சுய சிந்தனையையும் மாற்றி அசாதாரணமான நடத்தையை தூண்டும் தன்மை போதைப் பொருட்களுக்கு காணப்படுகின்றது. இதன் பிடியில் அகப்பட்டவர்கள் தம்மையும் தமது ஒழுக்க விழுமியங்களையும் மறந்து செயற்படுகின்றனர்.

இத்தகைய வன்முறை செயற்பாடானது வார்த்தை மூலமாகவோ, காயப்படுத்தல் செயற்பாடுகளாகவோ வெளிப்படுத்தப்படுகின்றது. வன்னடத்தை வெளிப்பாடுகளுக்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும் போதைவஸ்து என்பது பெரும் செல்வாக்குச் செலுத்துவதை வானொலி ,தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை, முகநூல்கள், வார வெளியீடுகள் போன்ற ஊடகங்களில் வெளியாகும் செய்திகளிலிருந்து காணக் கூடியதாகவுள்ளது. பாலியல் வன்முறைச்சம்பவங்களே அதிகமாக காணக்கூடியதாக உள்ளன. பாலியல் வன்முறைகளின் அதிகரிப்பினால் ஊடகங்கள் தமது செய்தியை வழங்கி தலைப்புக்களை அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றன. ஆனால் இன்றைய சமூகத்தினர் போதையின் பிடியில் மாட்டிக் கொண்டு மனிதாபிமானம் இழந்து ஏனைய மனிதர்களின் வாழ்வை அழிக்குமளவு வக்கிர உணர்வு விதைக்கப்பட்டு காணப்படுகின்றனர். இந்த வகையில் அதிகரித்து வரும் பாலியல் பிரச்சினைகளுக்கு அதாவது பாலியல் வன்முறைகளுக்கும் போதைப்பொருள் பாவனைகளும், பாலியல் பற்றிய தவறான வக்கிர எண்ணங்களுமே காரணம் எனலாம்.

போதைவஸ்து என்பது மனிதனை அவனது இயல்பு நிலையிலிருந்து மாற்றி உணர்வுகளை மற்றும் சுரப்புக்களின் (ஹோர்மோன்) செயல்களையும் தூண்டி ஒரு பரவசநிலைக்கு அவனை உட்படுத்தும் ஒன்றாகும். இது பானம்மூலமோ அல்லது [illegible] மூலமோ உட்கொள் [illegible] இனிப்பு பதார்த்தம் உட்கொள்ளுவதாகவும் இது அமையலாம். இன்று போதை மருந்துகள் தொழில்நுட்ப வசதியால் ஊசிகள் மூலமும் பானமாகவும் வெளிவருகின்றன. அநேகர் இதனை வாய் மூலமும், மூக்கின் மூலமும் உள்ளெடுக்கின்றனர்.

இத்தகைய போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின், குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்பட்டுவிடுகிறது. போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகின்றது. குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகிவிடுகின்றது.

ஆரம்ப காலம் அதாவது பண்டைய காலங்களில் மக்கள் தெய்வங்கள் கூட போதையை விரும்புவதாக கருதி பிரசாதமாக படைத்தனர். காலப்போக்கில் மூடக்கொள்கைகளின் அடிப்படையில் உள அசாதாரணங்கள், சில நோய்கள் தீர்க்கும் மருந்துகளாக போதை மருந்துகளை பாவித்தனர். பின்னர் உடல், உள மற்றும் சோர்வு நீக்கி எனவும் தெரிந்தோ, தெரியாமலோ போதை மருந்துகளை பாவித்தனர். பின்னர் காலப்போக்கில் நாகரிகவிருத்தி, அந்நிய நாட்டு மோகம், கலாசார கலப்புகள், மதக்கலப்புகள், பண்பாட்டு மாறல்களால் போதைப் பாவனை அதிகரிக்க நேரடி மறைமுக காரணங்களாக அமைந்தன.

விழாக்கள், கொண்டாட்டங்களின் போது மது அருந்துதல், பரிமாறல்கள் மேலை நாட்டுக் கலாசாரம் என உயர்வாகக் கருதுவதும் இப்பழக்கத்திற்கு ஒரு காரணமாகும். பிரச்சினைகள் மற்றும் குறைகளை போதைப்பழக்கத்தால் மறந்து நிம்மதியாக இருக்கலாம் என்று தவறாகக் கருதுவதும் இது போன்ற தீய பழக்கங்களுக்கு மக்களை ஆட்படுத்திவிடுகின்றது. போதைப் பொருட்களின் பாவனை அதிகரிக்க காரணம் சிலர் அபின்,ஹெரோயின், கஞ்சா போன்றவற்றுடன் புகையிலை மதுபானம் என அநேக வகையான போதைப் பொருட்களை அதன் பாதிப்புத் தெரியாமல் சாதாரணமாக உட்கொள்கின்றனர் தன்னைச் சுற்றியுள்ளவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களாக இருந்தால் அவரைத் திருத்த முயற்சிக்காமல் அவர்களிடமிருந்து சிறிது சிறிதாக தாமும் கற்றுக் கொள்கின்ற பலரும் இருக்கிறார்கள்.

அரசும் தனது வருமானம் கருதி அநேக மதுபானக் கடைகளுக்கு அனுமதி வழங்கியது. வெளிநாட்டு போதைப் பொருட்களை அனுமதித்தது. மக்கள் மத்தியில் அனுமதியின்றி அநேக மதுபானக் கடைகள் மற்றும் தவறான போதைப் பொருள் உற்பத்திகள் விற்பனைகள் அதிகரித்துக் கொண்டே சென்றன. அநேக இடங்களில் கொண்டாட்டங்களில் கூட போதைப்பொருட்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கடின வேலை செய்பவர்கள் தங்கள் உடல் வலி மறந்து இருக்கவும் போதையைப் பயன்படுத்துகிறோம் என்று கூறுகிறார்கள்.

இன்று அநேகர் [illegible] உள்ளனர். சில உள-உடல் நோய்களுக்கு வழங்கப்படும் மருந்துகளை உள்ளெடுக்கப்படுபவர்களாக காணப்படுகின்றனர். மற்றும் தேயிலை,பானம், கோப்பி இவற்றை உள்ளெடுக்கும் பழக்கமானவர்கள் இதிலிருந்து வெளிவருவது பாரிய பிரச்சினையாகவே கருதுகின்றனர். உதாரணமாக வைத்தியர்கள் அனுமதியுடன் வழங்கும் வலி நீக்கிகள் மாத்திரைகளை உள்ளெடுப்பவர்கள் கூட இவைகளுக்கு அடிமையாகின்றனர். இவர்களை மறைமுகமான போதைப் பாவனையாளர்களாகவே கருத முடியும்.

முன்மாதிரியற்ற பெற்றோர் தமது பிள்ளைகளை கட்டுப்பாடின்றி கவனியாது வளர்ப்பதனாலும் நண்பர்களின் தவறான செய்கைகளினாலும் அநேகர் போதை மது பாவனைகளில் ஈடுபட ஆரம்பிக்கின்றனர். இன்றைய சினிமா உலகம் இளைஞர்கள் பின்பற்றும் மாதிரிகள், பிரபல்யங்கள் புகைத்தல் மற்றும் போதைப் பாவனை, மதுபானம் அருந்தும் விடயங்கள் தொடர்பாக மிகவும் ஆளுமையான தோற்றம் மற்றும் வீரத்தினையும் கவர்ச்சியினையும் வெளிக்காட்டுவதனால் இளைஞர்கள் தாமும் இலகுவாக அதனைக் கற்றுக் கொளகின்றனர்.

பாடசாலைகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் அருகில் மது பானசாலைகள் அனுமதியுடன் அமைக்கப்பட்டுள்ளன. இச் சூழல் பாடசாலை மாணவர்களை தவறாக வழி நடத்துவதாக உள்ளது. போதையினால் கவலை மறக்கலாம் ,வீரமாக செயற்படலாம் வலிமையடையலாம், மகிழ்வாக இருக்கலாம் போன்ற தவறான எண்ணப்பாங்கினை அதாவது மனப்பாங்கினை இன்றைய சினிமா உலகம் காட்சிப்படுத்துகின்றது. இதனால் இளைஞர்கள் போதைப் பொருட் பாவனைக்கு தூண்டப்படுகன்றனர். அது மாத்திரமின்றி நணபர்களின் தொந்தரவு, பெற்றோர்களின் தவறான நடத்தை ,அதிக கட்டுப்பாடு, அதிக சுதந்திரம் என்பனவும் போதைப் பொருட்களின் பாவனையை தூண்டுவதாக உள்ளது.

சில பாரிய நோய்கள், உடற் குறைபாடுகள் உடையவர்கள் , தாழ்வு மனப்பான்மையுடையவர்கள் அன்பு மற்றும் ஆதரவற்றோர் போதைப் பொருட்களை நாடுகின்றனர். இவ்வாறாக கட்டிளம் பருவத்திலிருக்கும் ஒவ்வொருவரிடமும் காணப்படும் எதனையும் பரீட்சித்துப் பார்க்கும் எண்ணம் மற்றும் ஊடகங்கள் கற்பிக்கும் போதை பற்றிய தவறான மனப் பாங்கினால் இதன் பாவனையானது ஊக்கப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு ஆரம்பிக்கும் போக்கானது காலப்போக்கில் அதனை விட்டு விட முடியாத அளவு அடிமை நிலையினை உருவாக்குகின்றது. போதைப் பொருட்களின் பாவனையின்றி உயிர் வாழ முடியாது என்ற நிலையினை மனித மனங்களில் ஆழப்பதியும் அளவு அடிமை நிலையினை தோற்றுவிப்பதாக அமைந்து விடுகின்றது.

தொழில்நுட்ப விருத்தி ,கல்வி அறிவு விருத்தி என்பன தவறை செய்யவும் வழி காண்பிக்கின்றது. விளம்பரங்கள் வாழ்வை சீரழிக்கும் காரணிகளில் பங்கெடுக்கின்றன. யுத்தத்தின் பின்னான சூழலில் பல பாதிப்பினை உடல் ,உள ரீதியாக எதிர்கொள்ளும் மக்கள் போதைப் பாவனையை ஒரு ஆறுதலாக கருதும் தவறான எண்ணம் இதனை விட்டுவிட முடியாத வண்ணம் தொடரத்தூண்டுகின்றது.

அடிமைப்பட்டவர்கள் பாரிய நோய் களுக்கு ஆளாகின்ற நிலை காணப்படுகின்றது. புகைத்தலால் சுவாசக்கேடு வரும் என அறிந்தும் அநேகர் புகைக்கின்றனர். அதற்கு அவர்கள் நான் எப்பவுமா? செய்கி றேன். ஒரு நாளைக்கு ஒரு தடவை இரு தடவை தானே செய் கிறேன் என தமக்கு தாம் நியாயம் கற்பிக்கின்றனர்.

இது மாத்திரமன்றி அடிமையானவர்கள் இதனை தவிர்க்க நினைத்தாலும் உடல் நடுக்கம் சோர்வு என்பன போதைப்பாவனையை விட்டு விட முடியாத அளவு அவர்களது வாழ்வில் போதைப் பொருள் ஆதிக்கம் செலுத்துகின்றது. சுவாச நோய்கள் இதய மற்றும் குடல், வாய்ப் புற்றுநோய்கள் மற்றும் இரத்த அழுத்தம் போன்ற பல நோய் நிலைமைகளுக்கு ஆளாகின்றனர். இதனை விடவும் மோசமான குணப்பண்புகளையும் போதைப் பொருட்களின் பாவனையானது மனிதர்களில் உருவாக்குகின்றது. கோபம் திடீரென உணர்ச்சி வசப்படல், வக்கிரம், விரோதம் ,வன்முறை உணர்வு என்பவற்றினை தூண்டுகிறது. இதன் விளைவுகளே இன்றைய பாலியல் வன்னடத்தைகள் அதிகரிப்பதற்கான பிரதான காரணம் எனலாம்.


வன்நடத்தைகள் எனும் போது தன்னையும் பிறரையும் துப்புறுத்தக்கூடிய வகையில் சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத அளவு மோசமான நட த்தையினைக் காண்பித்தல் என லாம். இவ்வாறான நடத்தை பாலியல் சார் விடயங்கள் தொடர்பாக காணப்படும் போது அதனை பாலியல்சார் வன்நடத்தைகள் எனலாம். விரிவாக கூறினால் ஒரு பெண்ணை அவளது விருப்பம் மற்றும் அனுமதியின்றி பாலியல் செயற்பாடுகளுக்கு கட்டாயப்படுத்தி பாலின்பம் பெறுதல் பெற முயற்சித்தல் மற்றும் பாலியல் ரீதியான சுரண்டல்கள் என்பனவும் பாலியல் வன்முறை அல்லது வன்நடத்தை என விபரிக்கப்படும்.

பாலியல் வன்நடத்தை செயற்பாடு பலாத்காரமாக கட் டாயப்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் பதினாறு வயதிற்கு குறைந்த பெண்ணை அவரது அனுமதியுடன் பாலுறவு செயற்பாட்டில் ஈடுபடுத்தினாலும் அதனையும் பாலியல் வன்நடத்தை வன்புணர்ச்சி என்றே கூறப்படும். இவ்வாறான நடத்தையில் ஈடுபடுபவர்கள் மிகவும் மோசமான இரக்கமற்ற நடத்தையினைக் காண்பிப்பவர்களாகவே காணப்படுவர். இவர்களது சிறுபராயம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலும் உரிய தேவைகள் பூர்த்தியாக்கப்படாதவர்களாகவும் வன்நடத்தைப் பாங்கான வார்த்தைகள் செயல்கள் மற்றும் பொருட்களுடன் பழக்கப்பட்டவர்களாகவும் காணப்படுவர். இவர்களது இந் நிலைக்கு இவர்களது சூழலே பெரும்பாலும் காரணமாக அமையலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தேசிய கல்விக் கொள்கை விரைவில் அறிமுகம் செய்யப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

**இலவசக் கல்வி முறைமையை பாதுகாக்கும் வகையில் புதிய தேசிய கல்விக் கொள்கையொன்று அறிமுகம் செய்யப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாட்டின் கல்வியை அபி விருத்தி செய்ய தேசியக் கல்விக் கொள்கையொன்று அவசியம். இலவச கல்வி முறை மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த புதிய கொள்கை அறிமுகம் செய் யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பாலர் பாடசாலை, பாடசாலை, தொழில்நுட்பக் கல்வி, பல் கலைக்கழகங்கள் மற்றும் ஆங்கிலக் கல்வி ஆகியன வற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த ஐந்து துறைகளையும் மேம்படுத்த நவீன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

புதிய பாடத்திட்டங்களும் அறிமுகம் செய்யப்படும்.

பாலர் பாடசாலை பயிலும் வயதுடைய சிறுவர் ,சிறுமியர் உள்ள குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கினால், சிறுவர் ,சிறு மியர் பாலர் பாடசாலை கல் வியைத் தொடர உதவிகள் வழங்கப்படும்.

பாலர் பாடசாலை பார்ட விதானம் சர்வதேச தரத்திற்கு தரமுயர்த்தப்படும்.

பா்லர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் உரிய பயிற் சிகள் அளிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிக ழ்வு ஒன்றில் பங்கேற்று இத னைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்தவின் பிரசார நடவடிக்கைகளில் 50 முன்னாள் புலி உறுப்பினர்கள்?

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பரப்புரைகளில், 50 இற்கும் அதிகமான விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இவர்கள் எந்தவொரு புனர்வாழ்வு முகாமிலும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படாதவர்கள் என்றும், தகவல் வெளியாகியுள்ளது.


முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும், இலங்கையின் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரனவும், இணைந்தே, இவர்களை தேர்தல் பரப்புரையில் ஈடுபடுத்தியுள்ளனர்.

அதேவேளை, இவர்களை தீவிரமாக கண்காணிக்கும் பணியில் இலங்கை பொலிஸாரின் புலனாய்வுப் பிரிவு ஈடுபட்டுள்ளதாகவும், கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

## நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிப்பு

# நியாயம் கிடைக்காவிட்டால் போராட்டம் விரிவுபடுத்தப்படும்

## விவசாயிகள் எச்சரிக்கை





இலங்கை அரசால் வட மாகாணத்தில் நியமனம் செய்யப்பட இருக்கும் 361 விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களில் 332 பேர் சிங்களவர்கள் எனத் தெரியவந்ததையடுத்து, தமிழ் மக்களுக்கு உரிய நியாயம் விரைவில் கிடைக்காவிடில் போராட்டம் விரிவுபடுத்தப்படும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் நியமனங்களில் 90 விழுக்காடு சிங்களவர்கள் இடம்பெற்றிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக விவசாயிகளால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே, நியாயம் கிடைக்காவிட்டால் போராட்டம் விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் மேலும் கருத்துகளைத் தெரிவிக்கையில், போர் எங்களுடைய விவசாயத்தைப் பெருமளவுக்குப் பாதித்திருக்கிறது. காலநிலை மாற்றங்களால் அவ்வப்போது ஏற்படும் கடும் வரட்சியாலும்,பெரும் மழையினாலும் கூட நாங்கள் பாதிக்கப்பட்டு வங்கிக்கடன் சுமையில் இருந்து மீள முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் நியமிக்கப்பட இருக்கும் 361 விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களில் 332 பேர் சிங்களவர்கள் என்ற செய்தி எங்களுக்குப் பேரிடியாக உள்ளது. தமிழ் பேச முடியாத உத்தியோகத்தர்களால் எவ்வாறு எங்கள் தேவைகளையும், குறைகளையும் கேட்டறிந்து எங்களுக்கு உதவமுடியும்.

விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கு விண்ணப்பம் கோரும்போது தாய்மொழியில் க.பொ.த. சாதாரண தரத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்றே கோரப்பட்டிருந்தது. விவசாயிகள், பாமரர்கள். அவர்களுக்கு அவரவர் தாய் மொழியில் பேசும் உத்தியோகத்தர்களே தேவை என்பதற்காகவே இவ்வாறு கோரியிருந்தார்கள். இப்போது, விண்ணப்பித்த எமது இளைஞர்களையெல்லாம் புறந்தள்ளிவிட்டு தெற்கில் இருந்து சிங்கள உத்தியோகத்தர்களை இங்கு அனுப்ப முன்வந்துள்ளார்கள். மாற்றத்துக்காக வாக்களித்த எங்களுக்கு புதிய ஜனாதிபதியும் ஏமாற்றத்தையே தந்துள்ளார். உடனடியாக இந்த நியமனங்களை இரத்துச் செய்து மாவட்ட ரீதியான நியமனங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் என்றும் தெரிவித்துள்ளார்கள். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கான மகஜரை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகத்திடம் விவசாயிகள் கையளித்துள்ளனர். இக்கடிதத்தின் பிரதிவடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடமும் கையளிக்கப்பட்டுள்ளதோடு, மத்திய விவசாய அமைச்சர் துமிந்த திஸ்ஸநாயக்கவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 70 | 80 | 70 |
| கரட் | 160 | 80 | 160 | 120 |
| பூசணி | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 30 | 80 | 40 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 30 | 50 | 50 | 40 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 30 | 30 | 40 | 80 |
| கறிமிளகாய் | 140 | 140 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 50 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 200 | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 50 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 200 | 120 | — | 120 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 200 | 160 |
| முள்ளங்கி | 40 | 30 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## பிரசாரக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுயேட்சைக்குழு-2 இன் தேர்தல்பிரசாரக்கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு அச்சுவேலி இராஜ மாணிக்கம் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அச்சுவேலி ஈஸ்வரன் வர்த்தக நிலையத்தின் முன்னாள் உரிமையாளர் ஐ.புவனேஸ் வரன் தலைமையில் இக்கூட் டம் நடைபெறவுள்ளது. (இ-5)

## நல்லவர்களை தெரிவு செய்யும் பொறுப்பு வாக்காளர்கள் கையில்

எதிர்வரும் 17 ஆம் திகதி தகுதியானவர்கள் தெரிவு செய்யும் பாரிய பொறுப்பு வாக்காளர்களிடம் இருப்பதாக சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.


புறக்கோட்டையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். தேர்தலில் போட்டியிடும் கட்சிகளில் தகுதியானவர்களை சில கட்சிகள் நிறுத்தவில்லை என்பதால், வாக்காளரகளுக்கு பாரிய பொறுப்பு உள்ளது. வாக்காளர்கள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் நல்லவர்களுக்கு மாத்திரம் வாக்களியுங்கள்.

இந்த தேர்தலானது நபர்களுக்கு இடையிலான தேர்தல் அல்ல. கட்சிகளுக்கு இடையிலான தேர்தலும் அல்ல. இது கொள்கைகளுக்கு இடையிலான தேர்தல். நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான தேர்தல். போதைப் பொருள் விறபனையாளர்கள், எதனோல் காரர்கள், ஊழல்வாதிகளுக்கு பதிலாக படித்த, புத்திசாலிகள் உட்பட சிறந்தவர்களை, வாக்காளர்கள் தெரிவு செய்ய வேண்டும் எனவும் மாதுளுவாவே சோபித தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் அரசியல் பலத்தை நாமே தீர்மானிக்க வேண்டும்

## முன்னாள் எம்.பி.சிறீதரன் தெரிவிப்பு



சர்வதேசத்திற்கு இத் தேர்தல் ஊடாக மிக முக்கிய மான செய்தியைச் சொல்லப் போகும் தமிழர்களாகிய நாம், எமது பலத்தையும் ஒற்றுமையையும் வெளிப் படுத்த வேண்டிய காலகட்ட மிது. தமிழர்களின் அரசி யல் பலத்தை தமிழர்களா கிய நாம்தான் தீர்மானிக்க வேண்டும். எமது விடுதலைக் காக வித்தாகிப்போன மாவீ ரர் தியாகங்களை மதித்து எமது அரசியல் பலத்தை நிரூபிப்போம்.

அவர்கள் கொண்ட விடு தலை இலட்சியத்தை அடை யும்வரை தொடர்ந்தும் பலத் தோடு நாம் பயணிப்போம். என் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாள ருமான சிவஞானம் சிறீ தரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் தேர்தல் பிரசாரப் பரப்புரைக் கூட்டம் கிளி நொச்சி பூநகரி வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே வேட் பாளர் சிவஞனம் சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்,

தமிழர் தாயகப் பகுதி களில் நடைபெறுகின்ற தேர் தல்கள் ஒவ்வொன்றும் மிக முக்கியமானதாகவே காண ப்படுகின்றன. இந்தத் தேர்தல் களில் தமிழர்களாகிய நாம் எமது பலத்தை நிரூபித்துக் காட்டவேண்டியவர்களாகக் காணப்படுகின்றோம்.

இந்த மண்ணிலே தமி ழர்களாகிய நாம் கடந்த எழு பது ஆண்டுகளாக துன்புறு த்தப்பட்டவர்கள், அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள், பேசு வதற்கான உரிமைகள்கூட மறுக்கப்பட்டவர்கள். இந்த மண்ணிலே அடிமைகளாக வேதான் தொடர்ந்தும் வாழ வேண்டுமா என்ற குழப்பங்க ளோடு ஏங்கியவர்கள் நாம்.

இந்த மண்ணிலே எமது விடிவுக்கான ஒரு அறவழிப் போராட்டத்தை தந்தை செல்வா தலைமையில் 1970 களின் இறுதிக் காலம்வரை முன் னெடுத்தவர்கள்.

தமிழர்களாகிய எங்களின் நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்பட்டு, அகிம்சை வழிப் போராட்டம் பேரினவா தச் சிங்களத் தலைமைகளால் ஏற்றுக்கொள்ளப்படாது எம் மீது ஆயுத ரீதியான அடாவடி கள் அழிப்புக்கள் சித்திரவ தைகள் தொடர்ந்ததன் விளை வாக அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில, அதற்கெதிராகத்தான் 1976 ஆம் ஆண்டு வட்டுக் கோட் டையிலே தந்தை செல்வா அவர்களால் தமிழீழம்தான் எமக்கான இறுதித் தீர்வு என்ற கோரிக்கை கொண்டு வரப்பட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கமை வாக 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலே 18 ஆச னங்களைத் தமிழ் மக்கள் வடக்குக் கிழக் கிலே வழங்கி தமது பலத்தை நிரூபித்துக் காட்டி ஒரு ஆணையை வழ ங்கி எங்களுக்குத் தீர்வாக தமிழீழம்தான் அமைய வேண் டும் என்ற ஆணையை அப் போதே மக்கள் வழங்கியிரு ந்தார்கள்.

அதற்குப் பிற்பாடும் இல ங்கை அரசு எங்களை ஏமா ற்றி எங்களுடைய உரிமை கள் மறுக்கப்பட்டு அடக்கி, ஒடுக்கப்பட்டு தமிழர்களை நசுக்குவதற்காக தங்களுக் கேற்ற சட்டங்களைக் கொண்டு வந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தினூடாக தமிழ் இளை ஞர்கள் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு சித்தி ரவதைக்குள்ளாக்கப்பட்டு நாம் அழிக்கப்பட்டுக் கொண் டிருந்த வேளையில், 1983 ஆம் ஆண்டில் ஒரு கண்ணி வெடித் தாக்குதலோடு தமி ழினத்தின் இனவெறியர் களுக்கெதிரான தமிழ் இளை ஞர்களின் ஆயுதப் போரா ட்டம் முதன்மை நிலையைப் பெற்றிருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கு கிழக்கில் தன்னாட்சியை தமிழ்க் கூட்டமைப்பு கோரியுள்ளது

## முன்னாள் எம்.பி.சேனாதிராசா தெரிவிப்பு


நாம் தேசிய இனம், வட-கிழக்கு எமது தாயகம் எனும் தனித்துவமான கொள்கை யுடன் சுயநிர்ணய அடிப்படை யில் சமஷ்டி கட்சியில் வட-கிழக்கில் தன்னாட்சியையும் கோரியுள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் மாவை சேனாதிராசா தெரிவித்துள் ளார்.

ராஜபக்ஷவினால் ஒற்றை ஆட்சியின் கீழ் இனப்பிரச் சினை தீர்க்கப்படும் என கூறி யதை அறிந்திருக்கின்றோம். ஆனால் தற்போது நாட்டின் புதிய ஆட்சி மாற்றத்தில் சர்வ தேசத்தின் பங்களிப்பு இருந் தது.

அதேபோல் சர்வதேசத் தின் அனுசரணை எமக்கும் உள்ளது. அவர்களிடம் நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். அத்துடன்நல்லிணக்கஆணை க்குழுவில் அங்கம் வகிக்கும் சந்திரிகா பண்டாரநாயக்கா விடம் மிகத் தெளிவாக எமது இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேசியுள்ளோம்.

ஒற்றையாட்சியின் கீழ் ஐக்கிய இலங்கையாக இரு க்க முடியாது. முறையான அதிகாரப் பகிர்வு இருக்க மாட் டாது. எனவே நாம் ஒற்றை யாட்சியின்கீழ்போகமாட்டோம்.

புதிய அரசின் தேர்தல் ஆணை யில் கூறியபடி நில ங்கள் மீட்கப்படவில்லை. அது



எமக்குப் பெரும் வேதனை அளிக்கிறது. இனிவரும் கால ங்களில் எமது நிலத்தை இரா ணுவத்திடம் இருந்து மீட்டு மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

காணாமற்போனவர்கள் சிறையில் உள்ளவர்கள் தொட ர்பாக தற்போதுள்ள அரசு பதில் கூறவேண்டிய கடமை இருக்கிறது. எனவே, அவர் கள் சரியான தீர்வை கொண்டு வர வேண்டும்.

சர்வதேசம், இந்தியா, புலம் பெயர்ந்த தமிழர் உறவுகள், எம் மக்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். அவர்களு டைய வாழ்வாதாரத்தைக் கட்டி யெழுப்பதிட்டங்கள்மேற்கொண் டுள்ளோம். அவற்றை நடை முறைப்படுத்த புலம்பெயர்ந்த எம் உறவுகள் முன்வர வேண் டும்.

போர்க்குற்றம்குறித்தஉள் ளக விசாரணையில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வ தேச விசாரணையை வலி யுறுத்தியுள்ளோம். அதன் மூலம்தான் உண்மை அறிய ப்பட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என எதிர் பார்க்கின்றோம்.

அரசியல் தீர்வு தொட ர்பாக தனித்துவமாக எமக்கு என தாயகம் இருப்பதால் சுயநிர்ணய அடிப்படையில் இனப்பிரச்சினை தீர்க்கப் பட வேண்டும்.

எமக்கு சர்வதேசத்தால் சந்தர்ப்பம் கிடைத்துள்ள சந்த ர்ப்பத்தில் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வரும் காலகட்ட த்தில் நாம் இருக்கின்றபடி யால்தமிழ்மக்கள்ஒன்றிணை ந்துதமிழ்த்தேசியக்கூட்டமை ப்புக்கு வாக்களித்து தமிழ் மக்களுக்கென்று தனித்துவ மான தீர்வை பெற்றுக்கொ ள்ள அனைவரும் வாக்களி க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

**தேர்தல் வியூகம்**

# முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு நிச்சயம் பதில் சொல்லும் காலம் வரும்

## முன்னாள் எம்.பி.கஜேந்திரகுமார் தெரிவிப்பு

முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் மண்ணில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப் பட்டுக் கொண்டிருந்தபோது இந்தியாவில் மனைவி பிள் ளைகளுடன் வாழ்ந்தவர் கள் மக்கள் படுகொலை செய் யப்படுகிறார்களே தடுக்க வேண்டுமே என கேட்பதற்கு தொலைபேசி அழைப்பு எடுதத போது அழைப்பை துண்டி த்தவர்கள்,

இப்போது தமிழ் மக்க ளுடைய வாக்குகளை கொள் ளையடிப்பதற்காக மக்களு க்கு பொய்களை கூறிக்கொண் டிருக்கிறார்கள். உண்மை யில் முள்ளிவாய்க்கால் மண் ணில் தமிழ் மக்கள் இலட் சக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டதற்கு இந்த கூட் டமைப்பின் தலைவர்கள் நிச்சயம் பதில் சொல்லும் காலம் வரும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவரும், நாடாளு மன்ற வேட்பாளருமான கஜேந திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இது தொட ர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

எனக்கும் முன்னாள் பொரு ளாதார அபிவிருத்தி அமை ச்சர் பசில் ராஜ பக்ஷவுக்கு மிடையில் இரகசிய ஒப்பந்தம் இருந்ததாக தமிழரசு கட்சி யின் தலைவர் மாவை சேனா திராசா பொது மேடைகள் சிலவற்றில் கூறியிருக்கின் றார். ஆனால் அது உண்மை யான விடயம் அல்ல. உண் [illegible] நான் [illegible] பல தடவை கள் ஊடகங்கள் வாயிலான மக்களுக்கு கூறியிருக்கிறேன். ஆனால் அவை தொடர்பாக அவர் அறிந்திருக்கவில்லை போலும். இந்நிலையில் அந்த விடயத்தை நான் மீண்டும் கூறவேண்டும்.

போர் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது தமிழ்த்தேசிய கூட் டமைப்பின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர் கள் வெளிநாடுகளில் இருந் தார்கள். குறிப்பாக கூட்டமை ப்பின் தலைவர்கள் இந்தியா வில் தங்கள் மனைவி பிள் ளைகளுடன் வாழ்ந்தார்கள். அப்போது நான் இலங்கை யில்- கொழும்பில் இருந் தேன். விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நான் தொட ர்பில் இருந்தேன். அப்போது போர் வலயத்திற்குள் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் சிக்கியிருப்பது தொடர்பாக வும் அவர்களை பாதுகாப் பாக மீட்பது தொடர்பாகவும் எனக்கு புலிகளின் தலை மையிடமிருந்து பேசப்பட்டி ருந்தது. இதனையடுத்து நாம் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் பேச்சு வார் த்தை நடத்தியிருந்தேன். அப்போது ஜனாதிபதி நாட்டில் இல்லாத நிலையிலேயே அவ வாறு பேசவேண்டிய நிலை வந்தது. இந்நிலையில் பேச்சு வார்த்தைகள் பல கட்டங்க ளாக நடந்தபோதும் அவை அனைத்தையும் பின்னர் அரசாங்கம் ஒருதலை பட்ச மாக மீறியது. இந்நிலையில்



மேலும் ஒன்றரை இலட்சம் மக்கள் சிக்கியுள்ளார்கள். அவர்களை மீட்பதற்காக நான் இலங்கை அரசாங் கத்துடன் பேசிக் கொண்டி ருக்கிறேன் என்பதை நான் வெளிநாட்டு தூதுவராலயங் களுக்கும், தூதுவர்களுக் கும் கூறியிருக்கிறேன்.

இதனை இலங்கையிலு ள்ள அமெரிக்க தூதுவர், அமெரிக்காவுக்கு மே மாதம் 17 ம்திகதி அனுப்பிய கேபிளை விக்கி லீக்ஸ் பின்னர் அம்ப லப்படுத்தியிருந்தது. இதற்கு மேல் போர் நிறுத்தத்தை கொண்டுவந்து ஒன்றரை இலட்சம் மக்களை மீட்பத ற்கு நான் எடுத்த முயற்சி தொடர்பாக நான் பின்னர் பிறேமன் மக்கள் தீர்ப்பாய த்தில் சாட்சியம் வழங்கியி ருக்கிறேன்.

மேலும் ஐ.நா மனிதவுரி மைகள் கூட்டத்தொடரிலும் பேசியிருக்கிறேன். முள்ளி வாய்க்கால் மண்ணில் மக் கள் படுகொலை செய்யப்பட் டுக் கொண்டிருந்தபோது அதனை நிறுத்துவதற்கு நான் கடைசி வரையில் முயற்சித்தேன். இதுவே உண்மை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# அர்ப்பணிப்புடன் சேவையாற்ற த.வி.கூட்டணி உறுதிபூண்டுள்ளது

## வேட்பாளர் விக்னராசா தெரிவிப்பு



தமிழ் மக்களின் நம்பிக் கைக்குரியவர்களாக விளக்க அர்ப்பணிப்புடன் சேவையாற் றிய தமிழர் விடுதலைக் கூட் டணியின் தலைவர்களின் வழி யில் மீளவும் மக்களுக்கு அர் ப்பணிப்புடன் சேவை யாற்ற உறுதி பூண்டுள்ளதாக தமிழர் விடுதலைக்கூட்டணியின்யாழ். மாவட்ட முதன்மை வேட்பா ளர் இ.த.விக்னராசா தெரிவி த்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சபை முதலமைச்சர் சி.வி. விக்னே ஸ்வரன், மன்னார் ஆயர்யாழ் ப்பாணம்பல்கலைக்கழக ஆசி ரியர் சங்கம் என்பன எதிர் வரும் தேர்தலில் தமிழ்த்தேசி யத்தில் நிலையாக நின்று அர் ப்பணிப்புடன் செயற்படக்கூடி யவர்களை தேர்வு செய்யுமாறு தெரிவித்துள்ளார்கள்.

இது தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக மக் களின் சிந்தனைக்கு விடப் பட்டுள்ள விடயமாகும்.

ஆயுதப் போராட்டம் ஓய் ந்து ஜனநாயக அரசியல் வள ர்ச்சி அடைந்த காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசி யத்தை நிலை நிறுத்துவதற் காக தமிழர் விடுதலை கூட் டணி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, இணைந்து மக்கள் மத்தியில் எளிச்சியை ஏற்படு த்தி மாகாணசபை தேர்தலில் வெற்றியீட்டினோம்.

ஆனால்மாகாணசபையின் ஒற்றுமை சிதைந்து தமி ழர் விடுதலைக் கூட்டணி ஓரங்க ட்டப்பட்டதன் காரணமாக தனி த்து நின்று தேர்தலை எதிர் கொள்ள வேண்டிய சூழ் நிலை உருவானது. ஏனெனில் தமிழ்த் தேசியத்தில் அர்ப்பணிப்புள்ள வர்களைத் தெரிவு செய் யுமாறு தமிழ் மக்களின் நம்பிக்கைக் குரியவர்களால் தமிழ் மக்கள் மத்தியில் கோரிக்கை விடப்பட் டுள்ளது.

மேலும் மக்களின் நம்பிக் கைக்குரிய நடுநிலையானவர் களின் கோரிக்கைக்கு முக்கிய காரணம் தமிழ் பேசும் மக்க ளுடைய அன்றாட பிரச்சினை களையும் தேவைகளையும் அவர்களுடன் கூட்டயிருந்து அடையாளம் கண்டு தீர் த்து வைக்கக்கூடிய நேர்மை யுள்ள தூரநோக்கு சிந்தனையுள்ள வர்களை மக்கள் இனம் கண்டு தெரிவு செய்ய வேண்டும் என் பதற்காகவே ஆகும்.

நடைமுறைக்குசாத்தியமான வகையில் மீள்குடியேற்றம், காணாமற்போனவர்கள், சிறை யில் அடைக்கப்பட்டவர் களை விடுவிப்பது அர்த்தமுற்ற வகை யில் பொருளாதாரத்தை வழங் கக் கூடிய திட்டங்களுக்கு முன் னுரிமை கொடுத்து அதில் இரு ந்து இளைஞர்கள் யுவதிகளு க்கு வழங்கக்கூடிய அர்ப்பணி ப்புள்ள பிரதிநிதி களை மக்கள் இனங்கண்டு வாக்களிக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

பாரத நாட்டின் பாரிய பங் களிப்பு இன்றி சர்வதேச சமூக த்தின் உதவியை பெறுவதென் பது கானல் நீராகும் என்பது டன் தற்போது தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினைகள் தொட ர்பாகவோ அல்லது அவர்களின் அன்றாட வாழ்வாதாரப் பிரச் சினை தொடர்பிலோ சர்வதே சத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து சர்வதேசத்தின் நன்மதி ப்பைப்பெற்று முதலமைச்சர் விக்னேஸ்வரனைபாராளுமன்ற தேர்தல் தொடர்பில் மௌனம் சாதிக்க வைத்தவர்கள் மக் களை தமது கட்சிக்கு ஏகோபி த்து வாக்களிக்குமாறு கோரு வது வேடிக்கையான விடயம்.


எனவே, 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளு க்கும் இடையில் மோதல் ஏற் பட ஆயுதப் போராட்டம் வளர் ச்சியடையும் வரை தமிழ் மக் களின் நம்பிக்கைக்குரியவர் களாக இருந்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலை வர்களே ஆவர்.

எனவே எதிர்வரும் பொது த்தேர்தலில் எமது கட்சியின் சின்னமாகிய உதய சூரியனு க்கு வாக்களித்து எமது கட்சி உறுப்பினர்களைத்தெரிவுசெய்து மக்களின் பிரதிநிதிகளாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் மகிந்தவின் குடியுரிமை பறிக்கப்படும்

## சம்பிக்க எச்சரிக்கை



(கொழும்பு)

**சுனாமி நிதியத்தில் மோசடி மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடியுரிமை உரிமை பறிக்கப்படும் என்று நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

சுனாமி நிதியத்தை துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் விடுதலைப் புலிகளுக்கு ராடா நிறுவத்தின் ஊடாக பணம் வழங்கியமை தொடர்பில் அமைச்சரவை பத்திரம் இல்லாமல் அமைச்சரவைக் குறிப்பு ஒன்றை முன்னாள் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார்.

சரியெனில் நிதியமைச்சர் என்ற வகையில் அவர் விடுதலைப்புலிகளுக்கான பணத்தை வழங்கும் போது திறைசேரியிடம் கோரிக்கை விடுத்திருக்கவேண்டும்.

இந்தநிலையில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஜனாதிபதியினால் கூட மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்ற முடியாது போகும் என்று ரணவக்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்புக்கு நிதி வழங்குதலானது அரசியலமைப்பின் 157 ஆவது சரத்தின்கீழ் பாரிய குற்றமாகும்.

எனவே இதற்கான தண்டனையாக 7 வருடங்களுக்கு குடியியல் உரிமை பறிக்கப்படும் என்றும் பாட்டலி சுட்டிக்காட்டியுள்ளார்

மகிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளுக்கு 800 மில்லியன் ரூபாய்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் தலைமையிலான ராடா நிறுவனத்தின் ஊடாக வழங்கியுள்ளார்.

எனினும் பொலிஸார் 169 மில்லியன் ரூபாய்களுக்கான ஆவணங்களையே கண்டுபிடித்துள்ளனர். இதனைதவிர மகிந்த ராஜபக்ஷ 2006 ஆம் ஆண்டு வரை பொய்யான நிறுவனப் பெயர்களில் விடுதலைப்புலிகளுக்கு நிதியளித்து வந்தார்.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவும் அவரின் சகோதரரான பசில் ராஜபக்ஷவும் விடுதலைப்புலிகளின முன்னிலை உறுப்பினரான எமில் காந்தனுடன் இரகசிய சந்திப்புக்களை நடத்திவந்தனர் என்றும் ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சி.பி.ரத்நாயக்கவின் வீட்டில் சடலம் மீட்பு!

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிபி.ரத்நாயக்கவின் வாகன சாரதி சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தற்கொலை செய்துகொண்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

52 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொழும்பு 07 மலலசேகர மாவத்தையில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிபி.ரத்நாயக்கவின் வீட்டில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தற்கொலை செய்து கொள்வதாக கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு அவர் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# வெற்றிலைக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் மகிந்தவைப் பிரதமராக்கும்

## டிலான் நம்பிக்கை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவுக்கு குருநாகலில் போட்டியிடுவதால் ஏனைய மாவட்டங்களில் உள்ள மக்களால் அவருக்கு வாக்களிக்க முடியாது என பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் நாட்டு மக்கள் வெற்றிலைக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராகக் கொண்ட ஐ. ம.சு. மு அரசாங்கத்தை அமைக்க வழங்கும் வாக்குகளாகும் என ஐ. ம. சு. மு. ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஐ. ம. சு. மு. ஏற்பாடு செய்திருந்த ஊடக மாநாடு நேற்று முன்தினம் சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த அவர், ஐ. ம.சு. மு தலைவரான ஜனாதிபதி மைத்திரி



பால சிறிசேனவின் புகைப்படத்தை நாம் பயன்படுத்துவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஜனாதிபதியின் அனுமதியுடன் அவரின் புகைப்படத்தை பயன்படுத்தினால் அது குறித்து கேள்வி எழுப்புகின்றனர். அவர் நடுநிலை வகிப்பதாக கூறியதாலே அவரின் படத்தை பிரசாரங்களுக்கு பயன்படுத்தவில்லை. ஆனால் ஐ. தே. க அவரின் படத்தை பயன்படுத்தியதால் எமக்குள்ள உரிமையாக கருதி நாமும் அதை பயன்படுத்தினோம்.

பாதாள உலகம் குறித்த தகவல் எனக்கு இருப்பதாக கூறி என்னை விரைவில் உள்ளே தள்ளுவதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியிருக்கிறார். என்னை சிறையில் போட்டாலும் எனது குரலை முடக்க முடியாது. மத்திய நெடுஞ்சாலை மோசடி குறித்து பேசியதால் டிலான் பெரேரா திருடனாகி விட்டான். நான் திருடியிருந்தால் 18 ஆம் திகதிக்கு பின்னர் விசாரணை நடத்த முடியும். 14 ஆம் திகதி வரை எனக்கு கட்சி சார்பில் ஆற்றுவதற்கு, வேலையிருக்கிறது. அதனால் அதுவரை எனக்கு வர முடியாது. அச்சுறுத்தல்களுக்கு பயந்து நான் வாய்மூடமாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# இன்று ஒரு தகவல்

## சிலையும் நான்; சிற்பியும் நான்

கோவில்களில் வைத்து நாம் பூஜிக்கும் கருங்கல் சிலைகளைச் செய்கிற சிற்பக்கூடத்திற்குள் ஒருமுறை போய் வந்தால் ஓர் உண்மை புலப்படும். இன்று நாம் மதிக்கும் கல்ஒரு காலத்தில் மிதிக்கும் கல்லாக இருந்திருக்கும். சிலை செய்யும் போது கூடச் சிற்பி அந்தக் கல் மீது கால் படும்படி உட்கார்ந்துதான் சிலை செய்திருப்பார்... அந்தக் கல் எப்படிக் கடவுளாக வணங்கும் பெருமை பெற்றது.

கல்லில் விநாயகர் சிலை செய்வதாக வைத்துக்கொள்வோம். 3 அடி உயரம் உள்ள 2 அடி சுற்றளவுள்ள ஒரு சிலை செய்யவேண்டும் என்றால் சிற்பி 4 அடி உயரம் 3 அடி அகலம் 3 அடி சுற்றளவு உள்ள கருங்கல்லைத் தேர்ந்தெடுப்பார். கொஞ்சம் கொஞ்சமாக வெட்டி வெட்டி செதுக்கிச் செதுக்கிச் சின்னச் சின்னக் கற்துண்டுகளாகப் பெயர்த்தெடுப்பார். மொழு மொழு என்று இருந்த கருங்கல்லில் புள்ளி புள்ளியாகக் கொத்திக்கொத்தி ஓர் உருவம் எழுதிக்கொள்வார்.

மனதுக்குள் விநாயகரை நன்கு கற்பனை செய்து கொண்டு சிற்பி கல்லுக்குள் அவரைக் கொண்டு வருவார். அதாவது அவர் கற்பனையில் இருக்கிற விநாயகர் அந்தக் கல்லுக்குள்தான் இருக்கிறார். அவரைச் சுற்றியிருந்த வேண்டாத கற்துகளைச் சிற்பி நீக்க நீக்க அந்த விநாயகர் உருவாகிறார். விநாயகரின் தந்தத்தைக் கூர்மையாக்கக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிறிய உளியால் செதுக்குகிறார் சிற்பி.

அந்தக்கல்லில் விநாயகரைச் சுற்றியிருந்த வேண்டாத பகுதிகளையெல்லாம் செதுக்கிச் செதுக்கி எறிகிறார் சிற்பி. முடிவில் உள்ளிருந்த விநாயகர் வெளியில் தெரிகிறார். ஒரு கல்லில் இருந்து வேண்டாத பகுதிகளை வெளியேற்றிவிட்டால் மாசுகளை நீக்கி விட்டால் உள்ளிருக்கும் அழகான சிற்பம் வெளிப்படுகிறது.

நம் வாழ்வும் அப்படித்தான். நமது ஆன்மா கடவுள்தான். அதன் மீது உடம்பு மனம், ஆசாபாசங்கள், ஜாதி, குலம், பெயர், பரம்பரை, அகங்காரம் என்று வேண்டாத மாசுகள் மூடிக்கிடக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாக இவற்றை வெட்டிச் செதுக்கினால் வெளியில் எறிந்தால் உள்ளே இருக்கிற கடவுள் தெரிய ஆரம்பிப்பார்.

நம்மை நாமே செதுக்க ஆரம்பித்தால் நம்மில் இருக்கிற இறைவன் நமக்குள்ளிருந்து வெளிப்படுவார். வெங்கட் ரமணன் என்ற பெயரில் திருச்சுழி என்ற ஊரில் கோலி விளையாடிக்கொண்டிருந்த பிராமணச் சிறுவன் திருவண்ணாமலைக்கு வந்தான். அவன் மனத்தைக் குடைந்து கொண்டிருந்த ஒரே கேள்வி நான் யார்?

ரமணன் என்று பெயர் வைக்காமல் குமணன் என்று பெயர் வைத்திருந்தால் நான் ரமணன் இல்லை குமணன். எனவே பெயர் தான் நானா? இல்லை. என்ன பெயர் வேண்டுமானாலும் ஒருவருக்கு வைக்கமுடியும். பெயர் நான் இல்லை. உடம்புதான் நானா? உடம்பு இறந்த பின்னும் பூமியில் கிடக்கும். இறந்துபோன பின்னும் இருக்கிற உடம்பு நான் என்றால் அது ஏன் இறந்ததும் அழிகிறது? உடம்பில் இருந்து இறக்கும்போது எது வெளியில் போனது என்று யோசித்தார். உடம்பு நான் இல்லை என்று முடிவுக்கு வந்தார். மனசு மனசு என்கிறோமே அந்த மனசுதான் நானா என்று ஓயாமல் யோசித்தார். யோசனை நின்று போகிற இடத்தில் மனசு இருக்காது. எனவே மனசு நான் இல்லை என்று முடிவு செய்தார்.

நான் யார் என்ற கேள்வி அவரது உளி. அந்த உளியால் ஓயாமல் செதுக்கித் தள்ளினார். பாறாங்கல்லுக்குள் ஒளிந்திருக்கிற சிற்பத்தைச் சுற்றியுள்ள பகுதிகளைச் செதுக்கித் தள்ளுகிற மாதிரி டங் டங் என்று உளி கல்லில் கொத்துகிற மாதிரி நான்யார், நான் யார் என்று கேட்டுக்கேட்டு ஆன்மாவே நான் என்று ரமணர் கண்டறிந்தார். அதன் பிறகு அவரை உலகம் பகவான் ரமணர் என்று அறிந்து கொண்டது.

நாம் பொழுதுபோக்கிப் பாழாக்கும் ஒவ்வொரு நாளும் மரணத்தை நோக்கி, அழிவை நோக்கி நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடி என்று ஞானிகள் துடித்துவிடுவார்கள். அந்த மரணத்தை வெல்வது பற்றி ஆலோசிப்பார்கள். போத்தல் போத்தலாக விதவிதமான கள், சாராயம், மதுவகைகளைக் குடித்து விதவிதமான கறிவகைகளைச் சுவைத்து, நோய் வந்து,நொந்து மூச்சு இளைத்து வாதம் கபம் வந்து கடூரமாக இருமி இறந்து போகிற மூடத்தனம். வெறி பிடித்த மாதிரி மரணத்தை நோக்கிப் பாய்ந்து ஓடுகிற சிற்றின்ப வேட்டை... இதுதான் வாழ்க்கையா? போத்தல்களை, போதைப்பொருட்களை, சிற்றின்ப வேட்டை யைத் தூக்கி எறிந்துவிட்டு மரணத்தின் பேய் வாயிலிருந்து தப்ப வேண்டாமா?

பகவான் ரமணரைப் பார்க்க வருபவர்கள் கேள்வி கேட்டு அவரிடம் பதில் பெறுவதுண்டு. அவரை எரிச்சல் ஊட்டும் விருப்பத்துடன் கேட்கிற மூடர்களும் உண்டு. ஆனால் பகவான் ரமணர் எரிச்சல் அடைவதில்லை. மௌனமாக இருந்து விடுவார்.

ஒருவர் இவ்வாறு அசட்டுத்தனமாகக் கேட்டார். நீங்கள் எல்லாம் தெரிந்தவர்கள் என்கிறார்கள். குடும்பக்கட்டுப்பாடு பற்றித் தெரியுமா? என்று கிண்டலாகக் கேட்டார். பகவான் மௌனமாகவே இருந்தார். மீண்டும் மீண்டும் குடும்பக் கட்டுப்பாடு பற்றித் தெரியுமா என்று வெறுப்பேற்றிக்கொண்டிருந்தார். பகவான் பளிச்சென்று இறப்புக் கட்டுப்பாடு பற்றி உனக்குத் தெரியுமா என்று கேட்டார். அதைப்பற்றிக் கேட்டால் சொல்கிறேன் என்று மரணத்தில் இருந்து வெளியே வரும் வழி பற்றிக் கூறத் தொடங்கினார்.

கோழிக்குஞ்சுகள் தெருவில் குப்பையை அளையும்போது நரிகள் நாக்கைச் சுழற்றிக்கொண்டு சாப்பிட அலையுமாம். கழுகுகள் பளீர் என்று பாய்ந்து கவ்விக்கொண்டு போகக் காத்திருக்குமாம். அது மாதிரி நோய்களும் மரணமும் நம்மைக் கபளீகரம் செய்ய ஆசை ஆசையாய்க் காத்திருக்கின்றன. இப்படிச் சராசரியாகச் செத்துப் போவது நம்முடைய நோக்கம் அல்ல. நம்மில் இருக்கிற தெய்வத்தை உணர்ந்து மரணம் அடையாத அமரர் ஆவது நமது இலட்சியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் 17 ஆம் திகதி மக்களே வெற்றி பெறுவர்

### முன்னாள் எம்.பி.சந்திரகுமார் தெரிவிப்பு



மக்களை ஏமாற்றும் பல அரசியல் கட்சிகள் தமது தேர்தல் பரப்புரைகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் பணம் கொடுத்து ஆட்களை திரட்டுகின்றனர். ஆனால், எமது தேர்தல் செயற்பாடுகளுக்காக மக்களே முன்வந்து உழைக்கின்றனர். எனவே, இத்தேர்தலில் மக்களே வெற்றிபெறுவர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.


கண்ணகிநகரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்தகால தேர்தல் களத்தைவிட இம்முறைத் தேர்தல் களம் மிக வித்தியாசமானது. அதாவது, தேசியத்தின் பெயரால் மக்களை ஏமாற்றும் அரசியல் தரப்புக்கள் தொடர்பில் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கின்றார்கள். காலம் காலமாக வாக்களித்து தொடர்ந்தும் ஏமாற்றங்களையே எதிர்கொண்ட நிலையில் இம்முறை மக்களுக்காக உழைப்பவர்களுக்கே வாக்களிப்பது என்ற கொள்கையில் மக்கள் திடமாக உள்ளனர். அதனடிப்படையில் மீள்குடியேற்றத்தின் பின்னர் மக்களின் வாழ்நிலைகளிலும், பிரதேசங்களின் அபிவிருத்தியிலும் அர்ப்பணத்துடன் உழைத்தவர்கள் என்ற வகையில், எமக்கு மக்கள் அமோக ஆதரவை வெளிப்படுத்தி 'வருகின்றனர். அதுமட்டுமன்றி, கிராமம் கிராமமாக மக்கள் தாமாகவே ஒன்று திரண்டு எமது கரங்களைப் பலப்படுத்துவதற்காக உழைத்து வருகின்றனர். ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி வெற்றி பெற்றால் மட்டுமே அது மக்களின் வெற்றியாக மாற்றப்படும் என்ற உண்மையை எமது கடந்தகால செயற்பாடுகள் மக்களுக்கு உணர்த்தியுள்ளன. எனவே, இன்னும் பல தேவைகளுடனும், பிரச்சினைகளுடனும் வாழ்ந்துவரும் எமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக நாம் கடந்த காலங்களைப் போன்று உண்மையாக உழைப்பதற்கு தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால், மக்களின் பிரச்சினைகளை தொடர் கதையாக கொண்டு செல்வதற்கே சில சக்திகள் இன்றும் முயற்சிதது வருகின்றன. சர்வதேசத்திற்கு ஒன்றுபட்ட சக்தியை வெளிக்காட்ட வேண்டும் என்றும், சுயாட்சியே தீர்வு என்றும் வழமையான அவர்களின் தேர்தல் உத்திகளை பிரயோகித்து வருகின்றனர். ஆண்டாண்டு காலமாக மக்களை ஏமாற்றி பல ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்த பின்னரும், அவர்கள் மாறவில்லை. பதவி மோகம் அவர்களின் மனங்களில் ஆழப் பதிந்திருக்கும் அளவுக்கு அவர்களின் மனங்களில் மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் பதியப்படவில்லை. தேசியம் என்ற ஒரு பதமே தேர்தலில் வெல்வதற்கு "போதுமான பலத்தைத் தரும் என்ற எண்ணம் அவர்களை விட்டு விலகவில்லை. அதுமட்டுமன்றி, உண்மை யான தேசியத்திற்கு உயிர்கொடுக்கும் பலமும், மனோதிடமும்கூட அவர்களிடமில்லை. எவர் எந்தக் கொள்கையை பிரகடனம் செய்தாலும் அதை நிறைவேற்ற வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். பொய்த் தேசியவாதிகளைப் பொறுத்தவரை சக்திக்கு அப்பாற்பட்ட கொள்கைகளை பிரகடனப்படுத்துவதற்கோ, வாக்குறுதிகளை வாரி இறைப்பதற்கோ அவர்கள் தயங்குவதில்லை. ஏனெனில், அதை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7

# மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை

### முன்னாள் எம்.பி.டக்ளஸ் தெரிவிப்பு



தேவைக்கு அதிகமாகவும் மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாகவும் படையினர் நிலைகொணடிருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்ற எமது நிலைப்பாட்டிலும் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என ஈழ மககள் ஜனநாயகக் கட்சியின செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சுன்னாகத்தில் கண்ணகி மற்றும் சபாபதிப்பிள்ளை நலன்புரி முகாம்களில் வாழும் மக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களது சொந்த இடங்களில் நீங்கள் மீளக்குடியமர வேண்டும் என்பதில் எவ்வளவு விருப்பத்துடன் இருக்கின்றீர்களோ? அதேபோன்று தான் உங்களை உங்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்ற அக்கறை எனக்கும் உள்ளது.

இதனடிப்படையில், கடந்த காலத்தில் எமக்குக் கிடைத்த குறைந்த அரசியல் பலத்தைக் கொண்டும் அரசுடனான இணக்க அரசியலின் ஊடாகவும் குடாநாட்டில் படைத்தரப்பினர் வசமிருந்த 17 ஆயிரத்து 522 ஏக்கர் நிலப்பரப்பை விடுவித்து அங்கு மக்களை மீளக்குடியேற்றியுள்ளோம்.

இது, மக்களிடம் நாம் வழங்கிய வாக்குறுதிகளை செயற்படுத்திக் காட்டியுள்ள தன் வெளிப்பாடு என்றும் தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும், குடாநாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையே காணப்படுகின்றது. இதேவகையில்தான், இங்குள்ள இரு ந்லன்புரி முகாம்களைச் சேர்ந்த மக்களும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலை இருந்து வருகிறது.

இங்குள்ள மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகளையும் துயரங்களையும் நான் நன்கு அறிவேன். அந்த வகையில்தான், இந்நலன்புரி முகாம்களில் வாழும்மக்களின்நலன்களைக் கருத்திற் கொண்டு உடனடியாகவே சேதமடைந்துள்ள குடியிருப்புகளின் கூரைகளைப் புனரமைப்பது, சுத்தமான குடிநீர் வசதியைப் பெற்றுக் கொடுப்பது, மலசலகூடங்களின் வசதிகளை மேலும் பெற்றுக் கொடுப்பது, மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது என்பனவற்றுடன் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படும் வரையிலும் அல்லது தற்போதிருக்கின்ற காணிகளைக் கொள்வனவு செய்து அவற்றை குடியிருக்கும் மக்களுக்கு உரித்தாக்குவது வரையில், அந்த மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பது உள்ளிட்ட விடயங்களில் உரிய கவனம் செலுத்தப்படுமென கூறியதோடு, தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெறுவதைப் போல், நாளாந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எமது அரசியல் முயற்சியாக இருந்து வந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இதனிடையே இக் குடியிருப்புகளில் வாழும் மக்களது சுகாதாரம், பிள்ளைகளின் கல்வி, விளையாட்டு உள்ளிட்ட விடயங்களிலும் குறிப்பாக, சுயதொழில், வேலைவாய்ப்பு உள்ளிட்ட ஏனைய விடயங்களிலும் நாம் மிகுந்த அவதானம் செலுத்தி வருகின்றோம்.

மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்ற எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்றும் சுட்டிக்காட்டிய டக்ளஸ் தேவானந்தா அவர்கள், தேவைக்கு அதிகமாகவும் மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாகவும் படையினர் நிலைகொண்டிருப்பதை நாம் ஏற்றுக கொள்ளப் போவதில்லை என்பதே எம்து நிலைப்பாடு எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# மக்கள் பிரச்சினைகளையும் மனதையும் அறிந்து பேசுபவர்களே நாட்டுக்கு தேவை

### வேட்பாளர் அங்கஜன் தெரிவிப்பு



மக்கள் பிரச்சினைகளையும் மக்கள் மனதையும் அறிந்து பேசும் அரசியல்வாதியால் மட்டுமே மக்களுக்கு நல்லது செய்ய முடியும். அவர்களே நாடாளுமன்றத்திற்கும் தேவையானவர்கள் என யாழ். மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரதம வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

காலத்துக்கு காலம் தேர்தல் வரும்போது உங்கள் பிரதேசங்களுக்கு வந்து தேர்தல் மேடைகளில் வாக்குறுதிகளை அள்ளி வீசிச் செல்லும் சில அரசியல்வாதிகள் போல் நான் என்றும் இருந்ததில்லை. இருக்கவும் மாட்டேன். அவ்வாறான அரசியல்வாதிகள் தேர்தலின் பின் மக்களை ஏறெடுத்துப் பார்ப்பதும் இல்லை. இந்நிலையை மாற்றுவோம் எமது பிரதேசங்களில் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம்.

மக்களின் பிரச்சினையை அறிய உங்கள் மனங்களை அறிய நானும் உங்களுடன் இருந்தே உங்கள்மனங்களை அறிய முடியும். அதுவே எனக்கு தேவை. மேடைப் பேச்சு பேச நான் வரவில்லை. மேடை அரசியல்வாதியாக இருக்கவும் விரும்பவில்லை. உங்கள் குறைகளையும் உங்கள் மனங்களையும் அறியும் அரசியல்வாதியாக இருக்க விரும்புகின்றேன்.

எமது எதிர்கால இளைஞர் சமுதாயத்தை திறன் படைத்த சமுதாயமாக மாற்றி வீட்டிற்கும் நாட்டிற்கும் பயனுள்ள பிரஜைகளாக திகழ வழி செய்ய வேண்டும். எனது ஆதங்கத்தை புரிந்துகொள்ளுங்கள். மறுபடியும் மறுபடியும் சிந்தித்து ஒவ்வோர் தடவையும் விழுவது போல் அல்லாது இம்முறையேனும் புதிய நாடு- புதிய தலைவர் - புதிய தலைமுறையென ஒரு புதிய மாற்றத்தினை ஏற்படுத்தி ஓர் புதிய யாழினை நோக்கி விரையுங்கள். வருங்கால சமுதாயத்துக்காக சிந்தித்து வாக்களியுங்கள்.

தமிழர் பிரதேசங்களில் எதிர்கால அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் சக்தியினால் கட்டியெழுப்பப்பட்ட பாராளுமன்றம் அவசியமானதொன்றாகும் அதனடிப்படையில் தான் மக்கள் முழுமையமான அரசியல் பலத்தை தரும் பட்சத்தில் மக்கள் நலன சார்ந்த பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க நாம் தயாராகவிருக்கின்றோம்.

குறிப்பாக சுயதொழில், வேலைவாய்பபு உள்ளிட்ட விடயங்களில் நாம் மிகுந்த கவனம் செலுத்தவுள்ளோம். இது தவிர வீடு இல்லாதவர்களுக்கு வீடு மற்றும் விவசாயிகளுக்கு விவசாய நிலம், மீனபிடி சார்ந்த அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி திட்டங்கள், சிறு கைத்தொழில் அபிவிருத்தி திட்டங்கள் போன்ற திட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன். எமது பிரதேசம் தற்போது அபிவிருத்தியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் நாமும அதற்கு உந்து கோலாக இருந்து செயற்பட வேண்டும். குறிப்பாக மக்களை ஒருங்கிணைத்து அந்தந்த கிராமங்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதே எமது பிரதான நோக்கமாகும். இவ்வாறு கிராமங்கள் முன்னேற்றம் அடையும் போது நகரங்கள் மாவட்டங்கள் என அபிவிருத்தி அடைந்து செல்லும். நானும் எமது உரிமைக்காய் குரல் கொடுக்கின்றேன். நான் அதற்கு புறம்பனவன் இல்லை ஆனால இன்று எமக்கு எது உடனடியாக தேவையானது என்பதை புரிந்து கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-2)

## தேர்தல் வியூகம்

# அரசில் பங்காளிகளாக மாறும் வகையில் அரச ஊழியர்கள் வாக்களிக்க வேண்டும்

### முன்னாள் எம்.பி.விஜயகலா கோரிக்கை



அரசாங்க ஊழியர்கள் சிந்தித்து நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக வாக்களிக்க வேண்டும். எமது அரசாங்கம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. புதிய அரசாங்கத்தில் இன்னும் பல நலன்புரித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதனால் யாழ்.மாவட்ட அரசாங்க ஊழியர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனவரி மாதம் வரை அரசாங்க ஊழியர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். அவர்களுக்குப் போதியளவு சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை. ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சியமைத்த எமது அரசாங்கம், அரசாங்க ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்கியது.

யாழ்.மாவட்டத்திலும் முன்னயை அரசாங்க காலத்தில் அரசாங்க ஊழியர்கள் கட்டுப்படுத்தப்பட்டனர். தமது கடமைகளை சரிவரச் செய்ய முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் இன்று அரசாங்க ஊழியர்கள் சுயாதீனமாகச் செயற்படும் நிலைமை உருவாகியிருக்கிறது. எதிர்வரும் 17 ஆம் திகதிக்குப் பின்னரும் நாட்டில் நல்லாட்சி இடம்பெற வேண்டுமானால் அரசாங்க ஊழியர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நல்லாட்சியை நோக்கமாகக் கொண்டே அரசாங்க ஊழியர்கள் வாக்களிப்பார்கள் என்பது திண்ணம். இந்த நேரத்தில் சிந்தித்து அரசாங்க ஊழியர்கள் வாக்களிக்க வேண்டும். யாழ். மாவட்டத்தில் எமது பிரதி நிதித்துவம் அதிகரித்தால் தான் வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்கு புதிய அரசாங்கத்தில் தீர்வு காணுும நிலை ஏற்படும். எனவே வாக்களிக்கும் அனைவரும் சிந்தித்துச் செயற்படுமாறு அன்பாகக் கேட்டுக்கொள் கின்றேன். என அவர் மேலும் தெரிவித்துள்ளார் (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தின் எதிர்பார்ப்பிலிருந்து பிரதமர் ரணில் தோல்வி கண்டுள்ளார்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

(கொழும்பு)

**இலங்கையில் போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச அறிக்கை எதிர்வரும் செப்டெம்பரில் வெளியாகவுள்ளது. எனினும் ஐக்கிய நாடுகள் போர்க்குற்ற விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அழைத்து விசாரணைகளை மேற்கொள்வதிலும் நல்லிணக்க எதிர்பார்ப்பிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தோல்வி கண்டுள்ளார் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

இதன்மூலம் ரணில் விக்கிரமசிங்க தமது பொறுப்புக்கூறலில் இருந்து விலகியுள்ளார் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வீ.ருத்திரகுமாரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த 7 மாதகால அரசாட்சியின்போது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திடம் இருந்து தமிழ் மக்கள் நம்பிக்கையை எதிர்பார்த்தனர்.

அத்துடன் நல்லிணக்கம் மற்றும் நிரந்தர அமைதி என்பவற்றுக்கும் மக்கள் மத்தியில் எதிர்ப்பார்ப்பு இருந்தது.

எனினும் ரணில் விக்கிரமசிங்க, அந்த நம்பிக்கையை வழங்கவில்லை என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (இ-7)

# தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுப்பு

## முன்னாள் அமைச்சர் அஸ்வர் முறைப்பாடு



மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்த்து வெட்டிக் கொலை செய்யப்படுவாய் என எனக்கு தொலைபேசி மூலம் மரண அச்சுறுத்தல் விடுப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

தேசத்தை பாதுகாக்கும் ஒன்றியம் நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டி பேர்ல் சிட்டி ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கூறுகையில்,

வெலிகம பகுதியில் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு விட்டு அவருடன் தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்துக்கு சென்றேன்.

அந்த நேரத்தில் என்னுடைய கைபேசிக்கு 075 226 6588, 071 862 8364, 075 838 8276 போன்ற இலக்கங்களில் இருந்து அழைப்புகள் வந்தன.

அதில் அவர்கள் மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்த்து என்னை வெட்டிக் கொலை செய்வதாகவும் இறந்து போன என்னுடைய பெற்றோர்களை தூஷித்தும் மிரட்டினர்.

உடனே இது தொடர்பான முறைப்பாட்டை ஆரம்பத்தில் தங்காலை பொலிஸில் பதிவு செய்தேன். அத்துடன் பொலிஸ்மா அதிபருக்கு அறியப்படுத்தினேன்.

தற்போது பாதாள கோஷ்டியினர் பரவலாக சுற்றித் திரிகின்றனர்.

நான் ஒருபோதும் மரணத்துக்கு அஞ்சவில்லை. இஸ்லாத்தைப் பற்றி முழுமையாக அறியாத அறிவில்லாத சிலரே இவ்வாறான காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

மேலும் இவர்கள் முஸ்லிம் எனக் கூறிக்கொண்டு ஒரு மனிதனை கொலை செய்வதாக கூறுவது மிகப்பெரிய பாவமாகும்.

இவர்கள் என்னதான் அச்சுறுத்தல் விடுத்தாலும் என்னுடைய மரணம் அல்லாஹ்வின் நாட்டம்படியே இடம்பெறும்.

சிலவேளை எனக்கு முன் இவர்களை அல்லாஹ் நாடினால் மரணிக்கச் செய்வான் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரியின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுவதற்கு மகிந்த தயார்-டிலான்

பொதுத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு அவரின் கீழ் வேலை செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கம் வெளியிட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஊடக பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என டிலான் பெரேராவிடம் சிங்கள ஊடகமொன்று கேள்வியெழுப்பியதற்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக செயற்பட்ட போது, மகிந்த ராஜபக்ஷ பிரதமராக ஒற்றுமையுடன் செயற்பட்டதனை போன்று செயற்படவுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இணக்கப்பாட்டில் முன்னணியினால் முன்வைக்கப்பட்டுள்ள "எதிர்காலத்திற்கு சான்றிதழ்" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தை வெற்றியுடன் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என டிலான் பெரேரா மேலும் தெரிவித்தார். (இ-7)

### நாட்டை ஆளப்போவது யார் மக்கள் சிந்திக்க வேண்டும்

தேர்தலுக்கு பின்னர் நாட்டை ஆட்சி செய்யப் போவது நாட்டை பாதுகாக்கும் நபர்களா? என்பது குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும் என சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தால், நாடு பிளவுபடும் எனவும் அவர் ஏற்கனவே நாட்டை பிளவுபடுத்தும் உடன்படிக்கையை செய்து கொண்டவர் எனவும் ஒன்றியத்தின் உறுப்பினரான பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார். (இ-7)

# யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம்?

## புதிய ஆய்வுத் தகவல் வெளியீடு

பொதுத் தேர்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு ஆய்வு அறிக்கைக்கு அமைய ஐக்கிய தேசிய முன்னணி 12 மாவட்டங்களில் வெற்றி பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 08 மாவட்டங்களில் வெற்றி பெறும் எனவும், தமிழ் தேசிய கூட்டமைப்பு மேலதிக மாவட்டங்களில் பெரும்பான்மையை பெறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்விற்கமைய மேல் மாகாணத்தில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி எனவும் களுத்துறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெறும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பலத்த போட்டியின் பின் முன்னணி வெற்றி பெறும். மத்திய மாகாணத்தில் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய 3 மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெறும் எனவும், குருநாகல் மாவட்டத்தில் பலத்த போட்டி ஒன்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தை ஐக்கிய தேசிய முன்னணியும், மொனராகலையில் முன்னணியும் வெற்றி பெறும்.

கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மற்றும் திருகோணமலையில் ஐக்கிய தேசிய முன்னணியும், மட்டக்களப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெறும். சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியும், இரத்தினபுரி மாவட்டத்தில் முன்னணியும் வெற்றி பெறும்.

வவுனியா மற்றும் மன்னாரில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு சாதகமான நிலை காணப்படுவதாகவும், வடக்கின் அதிகாரத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலைமையினுள் 113 ஆசனங்களை பெற்று கொள்வதற்கான வாய்ப்புகள் ஐக்கிய தேசிய கட்சிக்கு இருந்தாலும், மக்கள் விடுதலை முன்னணி உட்பட ஏனைய கட்சிகளுக்கு கிடைக்கும் வாக்குகளுக்கமைய அவற்றில் மாற்றம் ஏற்பட வாய்ப்புகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# வெற்றிலைக்கு வாக்களிப்பதற்கு மிருகத்திற்கு வாக்களிக்கலாம்


## சந்திரிகா காட்டம்

இம்முறை பொதுத் தேர்தலில் வெற்றிலைக்கு வாக்களிப்பதில் எவ்வித பயனும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வெற்றிலைக்கு வாக்களிப்பது ஒரு மிருகத்திற்கு சமம் என முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் ஜனநாயக ஆட்சி காணப்படுவதாகவும் தொடர்ந்து அதனை கொண்டு செல்ல கூடிய கட்சிக்கு வாக்களிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 17ஆம் திகதி கைக்கு அல்லது வெற்றிலைக்கு வாக்களிப்பதில் எவ்வித பிரயோஜனமும் இல்லை என்பதனால் மாறாக மிருகத்திற்கு வாக்களிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)





ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு புதிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடமொன்றை உருவாக்குதல் தொடர்பாக விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்கடிக்கப்பட்ட எந்தவொரு தலைவரும் 6 மாதங்களில் தேர்தலில் வெற்றி பெற முடியாது



இலங்கைத் தேர்தல் வரலாற்றின் பிரகாரம், தோற்கடிக்கப்பட்ட எந்தத் தலைவர்களும் அல்லது தோற்கடிக்கப்பட்ட எந்தவொரு அரசாங்கமும் தோற்கடிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள் மீண்டும் தேர்தலில் வெற்றி பெறவில்லை என்பதே உண்மையாகும்.

1994 இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியுற்ற பின்னர், இதற்கு சில மாதங்களின் பின்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் காமினி திஸநாயக்க போட்டியிடத் தீர்மானித்தார். இது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

காமினி முட்டாள்தனமான தீர்வை எடுத்ததாக பலர் சுட்டிக் காட்டினர். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெறுவேன் என காமினி நம்பிக்கை கொண்டிருந்தார். காமினி செல்கின்ற இடமெல்லாம் மக்கள் ஒன்றுகூடினர்.

17 ஆண்டுகளாக இலங்கையை ஆட்சி செய்து தோல்வியுற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களே காமினிக்குத் தமது ஆதரவை வழங்கினர். தோற்கடிக்கப்பட்ட கட்சியை ஜனாதிபதித் தேர்தலில் காமினி வெற்றி பெறச் செய்வார் என ஐ.தே.க ஆதரவாளர்கள் கருதினர்.

இத்தோல்வியின் வலியே மக்கள் காமினியைச் சூழ்ந்து கொண்டதற்கான ஒரு காரணமாக இருக்கலாம். 'ரவுடிகளைக்' கைதுசெய்வதிலும் புதைகுழிகளைத் தோண்டுவதிலும் நேரத்தை வீணாக்கியது தவிர பொதுஜன ஐக்கிய முன்னணி வேறு எதைச் சாதித்துள்ளது என காமினி, மக்களிடம் வினவினார்.

தற்போது மைத்திரி மற்றும் மகிந்தவிற்கு இடையில் ஏற்பட்டுள்ள பிணக்குப்போன்றே காமினி மற்றும் ரணிலுக்கு இடையிலும் அப்போது முரண்பாடு ஏற்பட்டிருந்தது. காமினி - ரணில் பிணக்கின் போது ரணிலுக்கு ஆதரவு வழங்க விரும்பிய ஓசி அபேகுணசேகர பின்னர் காமினிக்கு தனது ஆதரவை வழங்கினார்.

இந்த நிலையானது, முதலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் பின்னர் அவரைத் தனது கடவுளாகக் கருதி வணங்கிய ஜனக பண்டார தென்னக்கோனின் நிலைப்பாட்டிற்கு ஒத்ததாகும். காமினி மீண்டும் ஐ.தே.கவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். இது சந்திரிகா குமாரதுங்கவிற்கு அச்சத்தை ஏற்படுத்தியது. காமினியைச் சூழ்ந்து கொண்ட மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மட்டுமே. சந்திரிகாவிற்கு எதிராக மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தியிருந்தார் காமினி. இவர் சந்திரிகாவின் ஒளிப் படங்களில் அவரது நெற்றியில் பொட்டு வைத்து அவமானப்படுத்தினார்.

சந்திரிகாவிற்கும் பிரபாகரனிற்கும் இடையில் இரகசிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது நாட்டிற்குத் துரோகமிழைப்பதாகவும் காமினி அறிவித்தார். காமினி படுகொலை செய்யப்பட்ட பின்னர், காமினியால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு உண்மையானது என்பதை நம்பவைப்பதற்கு ஐ.தே.க முயற்சித்தது.

**சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி**

ஆனால் அதன் பின்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 62 சதவீத வாக்குகளால் சந்திரிகா வெற்றி பெற்றார். தோற்கடிக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தின் அல்லது தோற்கடிக்கப்பட்ட ஜனாதிபதியை ஒரு சில மாதங்களிற்குள் மீளவும் தேர்ந்தெடுப்பதற்கு மக்கள் ஒருபோதும் முன்வருவதில்லை என்பதே இதற்கான காரணமாகும்.

1994 பொதுத்தேர்தலில், சந்திரிகா 48.94 சதவீத வாக்குகளைப் பெற்றார். ஆனால் இந்த வீதமானது ஜனாதிபதித் தேர்தலில் 62 ஆக அதிகரித்தது. ஆனால் நாட்டின் அதிகாரத்தைக் [illegible] ந்த வெற்றி பெறுவோம் என [illegible] உளத்திடத்துடன் காணப்பட்ட ஐ.தே.க இத்தேர்தலில் 44.04 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தது. இதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் இந்தக் கட்சியானது 35.91 சதவீத வாக்குகளை மட்டுமே தனதாக்க முடிந்தது.

இதையொத்த மாற்றமானது 1988 ஜனாதிபதித் தேர்தலிலும், 1989 பொதுத்தேர்தலிலும் ஏற்பட்டது. கிளர்ச்சியின் மத்தியிலும்,' பிறேமதாஸ, ஜனாதிபதித் தேர்தலில் 50.43 சதவீத வாக்குகளைப் பெற்றார். திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க 44.95 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

1989 பொதுத்தேர்தல் இடம்பெற்ற போது கிளர்ச்சியானது மிகவும் குறைவாகக் காணப்பட்டது. திருமதி பண்டாரநாயக்க மற்றும் அவரது மகனான அனுரா ஆகியோர் தாம் பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியும் எனக் கருதினர்.



ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது இத்தேர்தலில் 31.8 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றது. இதில் ஐ.தே.க 50.7 சதவீத வாக்குகளைப் பெற்றது.

இதையொத்த நிலையே 2010 இல் ஏற்பட்டது. 2010 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ 57.88 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். சரத் பொன்சேகா 40.15 வாக்குகளைப் பெற்றார். தனது கட்சியே இதில் வெற்றி பெறும் என ரணில் தப்புக் கணக்குப் போட்டிருந்தார்.

ஆனால் ஐ.தே.க 2010 ஜனாதிபதித் தேர்தலில் 29.39 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றது. இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 60.33 சதவீத வாக்குகளைப் பெற்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் இடையில் மூன்று மாத இடைவெளியே காணப்பட்டது.

[illegible] இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா பொதுத்தேர்தலைப் பற்போடுவதெனத் தீர்மானித்தார். இதனால் இவர்தான் ஜனாதிபதியாக வெற்றி பெற்று ஒரு ஆண்டின பின்னரே பொதுத்தேர்தலை நடத்தினார். இக்காலப்பகுதியில் ஐ.தே.க மக்கள் மத்தியில் தனக்கான ஆதரவை மீளப் பெற முடிந்தது.

இதன்பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆனையிறவு கைப்பற்றப்பட்டது. யாழ்ப்பாணத்தை புலிகள் வசம் இழக்கும் அபாயம் சந்திரிகாவிற்கு ஏற்பட்டது. வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. சந்திரிகாவால் சமாதானத்தைத் தொடர்ந்தும் நிலைநாட்ட முடியவில்லை.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் டிக்சன் ஜே.பெரேரா எதிர்க்கட்சிக்குத் தாவினார். சமாதான உடன்படிக்கை தோற்றுப்போனதால், சந்திரிகா நாடாளுமன்றைக் கலைத்தார். இதன்போது ஐ.தே.க கொழும்பில் தனக்கான ஆதரவாளர்களை மேலும் ஒன்றிணைத்தது.

எனினும் ஐ.தே.க பொதுத்தேர்தலில் தோல்வியுற்றது. சந்திரிகாவைக் கொல்வதற்கு ஐ.தே.க புலிகள் அமைப்புடன் இணைந்து சதி செய்வதாக மக்கள் நம்பினர். அதாவது கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பொன்றில் சந்திரிகா தனது கண் ஒன்றை இழக்க நேரிட்டது. இது புலிகளுடன் ஐ.தே.க இணைந்து மேற் கொண்ட சதி என நம்பப்பட்டது.

இதனால் அந்த தேர்தலில் ரணில் 42.71 சதவீத வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. இதன் பின்னர் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க 40.22 சத வீத வாக்குகளைத் தனதாக்கியது.

சந்திரிகாவிற்கு அவரது இரண்டாவது ஆட்சிக்காலத்தில் மக்கள் தாம் வழங்கிய ஆணைய்யை மாற்ற விரும்பவில்லை என்பதையே இத்தேர்தல் முடிவு வெளிப்படுத்தியது.

இலங்கையின் தேர்தல் முறைமை தொடர்பாக சரியாக ஆராய்ந்தால், மகிந்த மீண்டும் இடம் பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவார் என்பது கடினமான செயலாகும். இந்த நாட்டு மக்கள் கடந்த ஜனவரியில் புதிய ஜனாதிபதியை மட்டும் தேர்ந்தெடுக்கவில்லை, புதிய அரசாங்கத்தையும் தேர்ந்தெடுத்தனர்.

மைத்திரி தேர்தலில் வெற்றி பெற்றால் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என 'அன்னம்' கூட்டணி தெரிவித்துள்ளது. மக்கள் 'அன்னம்' சின்னத்திற்கு தமது வாக்குகளை வழங்கியிருந்தனர். ஆகவே இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்கு மக்கள் இவ்வளவு விரைவாகக் கருதுவார்கள் என எடைபோட முடியாது.

1989 இல் திருமதி பண்டாரநாயக்க, 1994 இல் காமினி மற்றும் 2010 இல் ரணில் ஆகியோர் உணர்ந்த அதே தேர்தல் 'காய்ச்சலையே' தற்போது மகிந்தவும் உணர்கிறார் எனக் கூறமுடியும்.

ஒரு ஆண்டுகாலம் பிரதமராகவும் இரண்டு தடவைகள் தொடர்ச்சியாக ஜனாதிபதியாகவும் பணியாற்றிய மகிந்த ராஜபகஷ மீண்டும் பிரதமரானால் நாட்டில் என்ன நடக்கும் என்பதை மக்கள் ஊகிக்கத் தவறவில்லை.

மூன்றாவது தடவையாகவும் மகிந்த ஜனாதிபதியாவதை இந்த மக்கள் தடுத்துள்ளனர். இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருநதது போதும் எனக் கூறி மக்கள் அவரை வீட்டிற்கு அனுப்பினார்கள்.

தற்போது மகிந்த மக்களின் ஆணைக்கமைய வீட்டிற்குச் செல்லாது அடுத்த பிரதமராக முயற்சிக்கிறார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சாரார் மகிந்த மீண்டும் ஆட்சிபீடம் ஏறவேண்டும் எனக் கோருகின்றனர்.

இலங்கை தேர்தல் வரலாற்றின் பிரகாரம், தோற்கடிக்கப்பட்ட எந்தத் தலைவர்களும் அல்லது தோற்கடிக்கப்பட்ட எந்தவொரு



அரசாங்கமும் தோற்கடிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள் மீண்டும் தேர்தலில் வெற்றி பெறவில்லை என்பதே உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த அரசியல்வாதி பிரதமர் ரணில் மட்டுமே

## ரோசி புகழாரம்

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து நாட்டை முன்கொண்டு செல்வதற்கான சிறந்த அரசியல்வாதி ரணில் விக்கிரமசிங்கவே என்று பிரதியமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் இதனை அவர் தெரிவித்தார்.

இந்த இரண்டு தலைவர்களும் இணைந்து நல்லாட்சியை முன்கொண்டு செல்ல முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஊழல் செய்யாத அரசியல்வாதி என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவே பேசப்படுகிறார்.

எனவேதான் ஜனவரி 8 ஆம் திகதியன்று நாட்டு மக்கள் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக தெரிவுசெய்ததாக ரோசி சேனாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் இருந்து அகன்று போயிருந்த ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகை மீண்டும் கிடைக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




## தேர்தலை சீர்குலைக்க முயற்சித்தால்

# உச்சளவு அதிகாரத்தை பயன்படுத்த பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவு

(கொழும்பு)

**தேர்தலை சீர்குலைக்க முயற்சிக்கும் வாக்குப்பெட்டிகளை பலவந்தமான முறையில் எடுத்துச் செல்ல முயற்சிக்கும் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக பொருத்தமான வகையில் உச்சளவு அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு பொலிஸாருக்கு பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.**

குற்றவியல் சட்டத்தில் எவ்வாறான அதிகாரத்தைப் பிரயோகிப்பது என்பது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், ஏதேனும் ஓர் தரப்பிற்கு சார்பான முறையில் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தல் நடைபெறும் தினமன்று, வேட்பாளர், அவரது ஆதரவாளர் மற்றும் வெளி நபர் ஒருவர் வாக்குச் சாவடி அமைந்துள்ள 500 மீற்றர் பரப்பிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாட்டினை விட்டு வெளியேறும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்!

## மகிந்த குற்றச்சாட்டு

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் நிலவி வரும் மோசமான சூழ்நிலையே இதற்கான காரணமாகும். உள்நாட்டு முதலீட்டாளர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் காத்திருக்கின்றார்கள். முதலீட்டாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறிச் செல்கின்றனர். நாட்டை விட்டு தப்பிச்சென்றிருந்த பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

நீதிமன்றில் வழக்கு விசாரணை செய்து தண்டிக்கும் முறைமைக்கு பதிலாக, தண்டனை விதித்து வழக்கு விசாரணை செய்யும் முறைமை நாட்டில் காணப்படுகின்றது. நல்லாட்சியினால் ஸ்தம்பிதமடைந்துள்ள அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் மீள ஆரம்பிக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (இ-7)

# விருப்புவாக்கு குறித்த சர்ச்சைகளை தடுக்க புதிய நடைமுறை அறிமுகம்

(கொழும்பு)

விருப்பு வாக்கு தொடர்பான சர்ச்சைகளை தடுக்க புதிய நடைமுறையொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இம்முறை பொதுத் தேர்தலில் ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை விருப்பு வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள் அதிகளவில் அனுமதிக்க தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தீர்மானித்துள்ளார்.

விருப்பு வாக்கு எண்ணுதல் தொடர்பிலான நம்பிக்கையை கட்டியெழுப்பும் நோக்கில் இவ்வாறு அதிகளவானவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதன்படி, கூடுதல் ஆசனங்களைக் கொண்ட மாவட்டங்களில் கூடுதலான கட்சிப் பிரதிநிதிகளை விருப்புவாக்கு எண்ணுவதனை பார்வையிட அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூடுதலான ஆசனங்களைக் கொண்ட மாவட்டங்களில் ஆசனம் வென்ற அரசியல் கட்சியின் சார்பில் பார்வையிட அனுமதிக்கும் பிரதிநிதிகளின் தொகை 7 இலிருந்து 10 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குறைவான ஆசனங்களைக் கொண்ட மாவட்டங்களில் ஆசனம் வென்ற அரசியல் கட்சியின் சார்பில் பார்வையிட அனுமதிக்கும் பிரதிநிதிகளின் தொகை 5 இலிருந்து 7 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வேட்பாளர்கள், கட்சி செயலாளர்கள், அதிகாரம் பெற்ற கட்சிப் பிரதிநிதிகள் விருப்பு வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவர்.

ஆசனம் பெற்றுக்கொள்ளாத அரசியல் கட்சி மற்றும் சுயாதீன கட்சிகளின் பிரதிநிதிகள் விருப்பு வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என தேர்தல் ஆணையாளர் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார். (இ-7)

# கேட்க வேண்டிய கேள்விகளை ஊடகங்களுக்கு அனுப்பும் மகிந்த

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட முதன்மை வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ, தான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தன்னிடம் கேட்க வேண்டிய கேள்விகளை தயார் செய்து தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



இதேவேளை மகிந்த ராஜபக்ஷ நேற்று தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார்.

தன்னிடம் கேட்க வேண்டிய கேள்விகளை அவர் குறித்த தொலைக்காட்சிக்கு அனுப்பியிருந்தார்.

அத்துடன் தன்னிடம் கேள்விகளை கேட்க தில்கா சமன்மலி என்ற ஊடகவியலாளரை அனுப்ப வேண்டும் எனவும் மகிந்த தெரியப்படுத்தியிருந்தார்.

குறித்த பெண் ஊடகவியலாளர் பிரசவ விடுமுறையில் இருப்பதால், வேறு ஒருவரை அனுப்புவதாக தொலைக்காட்சி நிறுவனம் பதில் வழங்கியிருந்தது. எனினும் அதனை நிராகரித்துள்ள மகிந்த, தில்கா சமன்மலியே அனுப்பி வைக்க வேண்டும் என அடம்பிடித்துள்ளார்.

இதனையடுத்து விடுமுறையில் இருந்த ஊடகவியலாளரை அழைத்து மகிந்தவிடம் தொலைக்காட்சி நேர்காணலை நடத்தியுள்ளது.

தன்னிடம் கேட்க வேண்டிய கேள்விகளை ஊடகங்களுக்கு அனுப்பி, ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நடந்ததைப் போன்றே ஊடகங்கள் மீது தொடர்ந்தும் பலவந்தத்தை பிரயோகித்து வருகிறார் என சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# மகிந்தவை குருநாகல் மக்கள் வரவேற்கவில்லை

## நளின் பண்டார

(கொழும்பு)

தமது மாவட்டத்தின் மூலம் மகிந்த ராஜபக்ஷ அரசியலுக்கு மீண்டும் வரவேண்டும் என்று குருநாகல் மாவட்ட மக்கள் கோரவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் பிங்கிரிய தொகுதி வேட்பாளர் நளின் பண்டார இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.


எனினும் மகிந்த ராஜபக்ஷவின் தரப்பினர் மக்களின் கோரிக்கைக்கு ஏற்பவே தாம் போட்டியிடுவதாக கூறுவதாக பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் குருநாகலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என்றும் நளின் பண்டார நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக அணிதிரண்டு வாக்களிக்க வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிக்கை



**நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை முழுமையாக பிரசுரிக்கப்படுகின்றது.**

எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இளைஞர்களே, யுவதிகளே!

தேர்தலுக்கு இன்னமும் சில நாட்களே உள்ள நிலையில் யாருக்கு வாக்களிப்பது, யாரை தெரிவு செய்தால் உங்களையும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் அவர்கள் வாழவைப்பார்கள் என்பது குறித்து நீங்கள் ஓர் தீர்மானத்திற்கு வந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். உங்களது தீர்மானத்தில் நான் எந்தவொரு செல்வாக்கினையோ அல்லது தலையீட்டினையோ செய்யப் போவதில்லை. இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பக்கச்சார்பற்ற நடுநிலைத் தன்மை என்ற எனது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாகவுள்ளேன். ஆரோக்கியமான அகமுரண்பாடுகள் அவசியமானவையாயினும் கூட, ஒரே கட்சிக்குள் இருந்து கொண்டு ஒரே கொள்கைக்காகத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொண்டும், வசைபாடிக் கொண்டும், அரசியல் நாகரிகம் அற்ற முறையில் ஒருவர் மற்றவருக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையினைக் காணும் போது பக்கச் சார்பற்ற நடுநிலைத் தன்மை என்ற எனது முடிவு சரியானது என்றே நான் கருதுகின்றேன்.

வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு செப்டெம்பர் மாதம் 2013இல் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட வாக்குறுதிகளை பலத்த சவால்களுக்கு மத்தியிலும் நிறைவேற்றுவதற்காக நான் இதயசுத்தியுடன் செயற்பட்டேன், செயற்பட்டு வருகிறேன்.

இதனைத் தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுக்க எதிர்காலத்தில் எனது மக்களின் பாரிய ஒத்துழைப்பும் பங்களிப்பும் மென்மேலும் அவசியம். மக்கள் நலனை முதன்மைப்படுத்திய எனது வேலைத்திட்டங்களையும், அது சார்ந்த உள்நாட்டு வெளிநாட்டுச் சந்திப்புக்களையும் வடமாகாண சபைத் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைவாகவே முன்னெடுக்கின்றேன். தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் மக்கள் நலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது எனது பொறுப்பென உணர்கின்றேன். அந்தப் பொறுப்பைப் பற்றுறுதியுடன் பற்றிக் கொள்ளவே நான் விரும்புகின்றேன். இதற்காக நான் எத்தகைய அர்ப்பணிப்பையுஞ் செய்யத் தயாராக இருக்கின்றேன்.

போரின் போது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பு எமது இனத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு கட்டமைப்புகளை சிதைத்துள்ளது. இவற்றை நாங்கள் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு அமைவாக ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களைப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாக மேற்கொள்ளும் வாய்ப்பு நான் முதலமைச்சராக பதவியேற்ற பின் கிடைத்தது. அதனை, மிக ஆழமாக ஆராய்ந்து பார்த்த பின்பே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நடுநிலை வகிப்பதென்ற முடிவையெடுத்தேன்.

இது சம்பந்தமாக அண்மையில் நான் வெளியிட்டசெய்தி பலவிதமான மாறுபட்ட கருத்துக்களை முன் கொண்டு வந்துள்ளதாக அவதானிக்கின்றேன். எனினும் அது பலரைச் சிந்திக்க வைத்துள்ளமை புலப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் நான் தற்போது அரசியலில் இருக்கும் அதேநேரம், அரசியலுக்கு வர முன்பிருந்தே சமூக சேவையிலும் சமூக மறுமலர்ச்சியிலுந் தொடர்ந்து ஆர்வம் காட்டி வந்துள்ளேன் என்பதை அறியத்தர வேண்டியுள்ளது. எம்மக்களின் சேவையிலும் மறுமலர்ச்சியிலுந் தொடர்ந்து ஈடுபட அரசியல் எனக்கு ஒரு கருவியே ஒழிய எனது முழு நேரத் தொழில் அல்ல. சென்ற 22 மாதங்களில் நான் என் மக்களிடம் இருந்து தெரிந்து கொண்ட பாடங்கள் சில உண்டு.

ஒன்று - அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் பேசுபவற்றை தேர்தல் முடிந்ததும் காற்றில் பறக்க விட்டு விடுகின்றார்கள் என்பது. எனவே இதனால் மக்கள் மனக் கிளர்ச்சியுந் தளர்ச்சியும் அடைகின்றார்கள்.

இரண்டு- தேர்தல் முடிந்ததும் மக்களிடம் இருந்து அரசியல்வாதிகள் விலகிச் செல்கின்றார்கள். அவர்களின் பிரச்சினைகளை, ஏக்கங்களை, தேவைகளைப் புறக்கணிக்கின்றார்கள். தமக்கும் தமக்கு அண்மித்தவர்களுக்கும் மட்டும் சலுகைகள் செய்கின்றார்கள், கரிசனை காட்டுகின்றார்கள், உதவிகள் புரிகின்றார்கள் என்பது.

மூன்று- கொடுத்த தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளுக்கு மாறாக சுயநலத்துடன் நடக்க எத்தனிக்கின்றார்கள். முக்கியமாகத் தெற்கத்தைய அரசியல்வாதிகளுடன் சேர்ந்து நடக்க வேண்டும். இல்லையேல் விமோசனம் இல்லை என்ற எண்ணத்தில், உணர்ச்சியுடன் தமிழ் மக்களிடையே தேர்தல் மேடைகளில் பேசிய வசனங்களை மறந்து, தெற்கத்தையவர்களின் மனங் கோணாமல் நடந்து கொள்ள எத்தனிக்கின்றார்கள். அவ்வாறு செய்வதானால் அதை முன்கூட்டியே தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்டிருக்க வேண்டும என்பதை மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இவ்வாறு பலதையும் மக்கள் கூறுவதை நான் கேட்டுள்ளேன். இதுபற்றி அரசியல் வாதிகளிடங் கேட்டால் தமது கட்சியின் பெயரைக்கூறி அதில் குளிர்காயப் பார்க்கின்றார்கள்.

இதனால்தான் நான் கட்சிக்கு அப்பால், கொள்கை நிலை கொண்ட நேர்மையான, பற்றுறுதி கொண்ட, விலைபோகாத, தூர நோக்குப் பார்வை கொண்ட, கரிசனையுடைய பிரதிநிதிகளை அடையாளங் காணுங்கள் என்றேன்.

எனினும் நான் என் முன்னைய செய்தியில் இன்னொன்றைக் கூறியதையும் எம் மக்கள் மறக்கக் கூடாது. நாம் தேர்ந்தெடுப்பவர்கள் தமிழ் மக்களின் தனித்துவத்தையும் அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் உறுதிப்படுத்தி, எம்மக்களின் உரிமைகளையும் அவர்களுக்கான நீதியையும் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்றுங் கூறியிருந்தேன். போட்டியிடும் பல கட்சிகள் எமது மக்களின் தனித்துவத்தையுஞ் சுய நிர்ணய உரிமைகளையும் மதியாத வகையில்தான் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களைத் தயாரித்துள்ளார்கள். அக் கட்சிகளுள் தரம் மிக்கவர்கள் இருந்தால்கூட (நான் இருக்கின்றார்கள் என்று கூறவில்லை) அவர்களின் தார்ப்பரியம் வேறு என்பதை நாங்கள் மனதில் நிலை நிறுத்த வேண்டும். அவர்களால் எமது வடக்கு கிழக்கு வாழ்மக்கள் நிரந்தரமான நன்மைகளைப்பெற முடியாது என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. மேலும் தாயகம், தனித்துவம், தமிழர் சுயநிர்ணயம் போன்ற கருத்துக்களை 2009ஆம் ஆண்டு மே மாதந் தொடங்கியாவது இக்கட்சிகள் உலகிற்குப் பறைசாற்றி வந்திருக்க வேண்டும். காளான்கள் காரியவாதிகள் ஆக முடியும். ஆனால் காவலர்கள் ஆக முடியாது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் வடகிழக்கு மாகாணங்களில் ஒரு சிறந்த அப்பளுக்கற்ற அரசியல் கலாசாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய கடப்பாடு எம் எல்லோருக்கும் எழுந்துள்ளது. தெற்கில் பூதவடிவம் பெறப்பார்க்கும் இனவெறுப்புடனான அரசியல் சிந்தனைகளை நாம் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். எம்முடன் கைகோர்த்து வரச்சம்மதித்திருக்கும் மேற்கத்தைய நாடுகளுடனான உறவை நாம் பலப்படுத்த வேண்டும். இவ்வாறுசெய்வதால் எமக்கொரு நிரந்தர அரசியல் தீர்வை நாங்கள் பெற வழி அமைக்கலாம். இதை மனதில் வைத்துத் தான் நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளின் தரம், தகைமை, தகுதி எவ்வாறுஅமைய வேண்டும் என்று மக்களை நோக்கிய எனது முன்னைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதை விட மத்தியில் உள்ளோர், நல்லாட்சிக்கானதும், நீதி, சமத்துவம் போன்ற கொள்கையின் அடிப்படையிலானதுமான ஒரு ஆட்சியை அமைக்க முன்வர வேண்டும் என்று கேட்டிருந்தேன். அத்துடன் எமது சர்வதேச பரிமாற்றங்கள் எமக்கு நன்மை அளிப்பனவாக அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

தேர்தல் நெருங்கி விட்டிருக்கும் இந்த நேரத்தில் எனது இனிய சகோதர சகோதரிகளுக்கும் இளைஞர்கள் யுவதிகளுக்கும் நான் ஒன்றுகூறக் கடமைப்பட்டுள்ளேன். தேர்தல் விரைவில் முடிந்து விடும். பழைய வாழ்க்கை மீண்டும் திரும்பி விடும். ஆனால் உங்கள் இனிவரும் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படவேண்டுமானால் உங்களுக்கான கட்சியை நீங்கள் தேர்ந்தெடுத்தால் போதாது. அக்கட்சியில் போட்டியிடும் திறமான வேட்பாளர்களை அடையாளம் கண்டால் போதாது. நீங்கள் அனைவரும் திரண்டெழுந்து சென்று ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி காலையில் வாக்களிப்பது மிக முக்கியம். வீட்டில் முடங்கிக் கிடக்காதீர்கள்! உங்கள் பொன்னான வாக்குகளை அன்று காலையே வாக்குச்சாவடிகளுக்கு சென்று அளியுங்கள். அது மட்டுமே உங்களுக்குள்ள ஒரேயொரு திடமான ஜனநாயக உரித்து. நீங்கள் வாக்களிக்காது விட்டால் முன்னர் 25 வாக்குகளுடன் பாராளுமன்றம் சென்றவர்களைப் போல் குறைந்த வாக்குகளுடன் குறையுள்ள வேட்பாளர்கள் உங்கள் குறை கேட்கும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆகி விடுவார்கள். நீங்கள் வாக்குகளை இடாவிடில் வேறு வழிகளில் உங்கள் வாக்குகளைப் பாவிக்க சில கூட்டங்கள் தயார் நிலையில் இருக்கக்கூடும். அவ்வாறானவர்களின் தவறான நடவடிக்கைகளுக்கு இடம் அளிக்காதீர்கள்.

"செய்தக்க செய்யாமையானுங் கெடும்" என்று வள்ளுவன் கூறியது போல நீங்கள் செய்யவேண்டிய உங்களது கடமையை செய்யாது போனால் அது உங்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் கேடு தருவதாய் அமைந்து விடும் என நான் அஞ்சுகின்றேன்.

எனவே எனது வடக்குக் கிழக்கு மாகாண அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! இளைஞர்கள், யுவதிகளே! தேர்தலில் வாக்களிப்பதென்ற உங்களது ஜனநாயகக் கடமையினை நிறைவேற்ற முன்வருவதோடு தமிழ் பேசும்மக்களின் நலனுக்காய் அணிதிரண்டு சென்று வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இம் மாதம் 17 ஆம் திகதி காலையில் எந்தக் கட்சிக்கு நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள் என்பதை முதலில் மனதில் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அக்கட்சி எமது தனித்துவத்தையும் சுயநிர்ணயத்தையும் உறுதிப்படுத்தும் கட்சியாக இருக்க வேண்டும். முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னுந் தாயகம், தனித்துவம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்ற கட்சியாக இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனஅழிப்புக்கு நீதி தேடுவதற்குப் பின்னிற்காத கட்சியாக, சுதந்திரமான சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் உறுதியுடன் உள்ள கட்சியாகத் திகழவேண்டும். தமிழ் மக்களின் கௌரவம், சமத்துவம், பாதுகாப்பு போன்ற விடயங்களில் சமரசம் செய்யாத கட்சியாக இருக்க வேண்டும். போருக்குப் பின்னரான இந்தச் சூழலில், செயற்றிறன் மிக்க புனருத்தாரண பணிகளை முன்னெடுக்கின்ற கட்சியாக இருக்க வேண்டும். காணாமல் போகச் செய்யப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிவதற்காகவும், அரசியல் கைதிகள் விடுதலைக்காகவும் இதய சுத்தியுடன் செயற்படுகின்ற கட்சியாகவும் இருக்க வேண்டும்.

சரணாகதியடையாமல், எமது தனித்துவத்தையுஞ் சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தி வரும் கட்சியை அடையாளங் காணுவது உங்களுக்குச் சிரமம் அளிக்காது என்று எண்ணுகின்றேன். அடிப்படைக் கோட்பாடுகளில் உறுதியாக இருக்கும் கட்சியில் இருக்கும் நேர்மையான, கொள்கையில் உறுதியுடைய, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய, தூரநோக்குப் பார்வைகொண்ட, எத்தருணத்திலும் விலைபோகாத மனோதிடம் கொண்ட வேட்பாளர்களை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அதாவது அவர்களின் இலக்கங்களை மனதில் பதிந்து வைத்திருங்கள். அன்றைய தினம் காலை ஏழு மணிக்கே தேர்தல்களம் செல்லுங்கள். தவறாது வாக்களியுங்கள். வடகிழக்கு மாகாணங்களில்தான் மிகச்சிறந்த வாக்காளர் பங்குபற்றல் நடைபெற்றதென்ற நற்செய்திக்கு வலுவூட்டுங்கள்.

வடகிழக்கு மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்துவேட்பாளர்களும் மக்கள் நலனே முதன்மையானது என்ற இலக்கினால் ஒன்றுசேர்ந்து, ஒரு குடைக்குக் கீழ் ஒற்றுமையாய் வடகிழக்கு மக்களின் நலன் கருதி செயலாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உங்கள் ஒவ்வொருவருக்கும் இறைவனின் இடைவிடாத ஆசிகள் கிடைக்க வேண்டும் என்று இறைவனை இறைஞ்சி விடைபெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ராணுவத்துடன் இந்திய எல்லையில் சீனா போர்ப்பயிற்சி



சமீபத்தில் பிரச்சினைக்குரிய தென்சீன கடலில் சீனா போர்பயிற்சி மேற்கொண்டது.

அதில் 100 கடற்படை கப்பல்கள், ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இந்த நிலையில் தற்போது திபெத்தில் சீன- இந்திய எல்லையில் போர் பயிற்சி நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி சிசுவான் மாகாணத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் சீனாவின் மக்கள் விடுதலை படை என்ற ராணுவம் ஈடுபட்டுள்ளது.

இதற்கு '2015 டி கூட்டு நடவடிக்கை' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த பயிற்சியில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் அடங்குவர். இவர்கள் 140 இராணுவ முகாம்களை சேர்ந்தவர்கள்.

இது வழக்கமான போர் பயிற்சி தான் என்றும், படை திறனை சோதிக்கும் பயிற்சி முகாம் என்றும் சீன இராணுவம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் ராணுவத்தின் திறனை அறிய முடியும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (3-7)

# ஷண்டாய் அணு உற்பத்தியை மீண்டும் ஆரம்பித்தது ஜப்பான்

நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட ஷண்டாய் அணு உற்பத்தி நிலையத்தை ஜப்பான் நேற்றுக் காலை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜப்பானின் புக்குஷிமா பிரதேசத்தை தாக்கிய நில அதிர்வு மற்றும் சுனாமி தாக்கம் காரணமாக அந்நாட்டு முதலாவது அணு உற்பத்தி நிலையமான ஷண்டாய் அணு உற்பத்தி நிலையம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் இருந்த பல அணு உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டன.

தற்போது புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளின் பின்னர் ஷண்டாய் அணு உற்பத்தி நிலையம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (3-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1213



## எப்படி கண்டுபிடிச்ச?

அரபு நாட்டை விரோச்சன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு நம்பிக்கையான தூதர் ஒருவர் தேவைப்பட்டார்.

"அறிவு நிரம்பியவனாகவும், பொறுப்பு உள்ளவனாகவும் தூதர் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவனை எப்படிக் கண்டுபிடிப்பது" என்று சிந்தித்தார்.

அரண்மனையில் நீண்ட காலம பணி புரிந்த நான்கு பேர் அரசரிடம் வந்தனர்.

"அரசே! தூதன் வேலையை எங்களுக்குத் தர வேண்டும்," என்று வேண்டினர்.

"எனக்குத் தூதர் ஒருவர்தான் தேவை. சோதனை வைத்து உங்களில் ஒருவரைத் தேர்ந்து எடுக்கிறேன்," என்றார் அரசர்.

"என்ன சோதனை?" என்று அவர்கள் ஆர்வத்துடன் கேட்டனர்.

"நீங்கள் யாரும் தலை நகரத்தை விட்டு வெளியே சென்றது இல்லை. உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் ஓர் ஓலை தருகிறேன். நீங்கள் மதுரைக்குச் சென்று நம் தூதரிடம் அந்த ஓலையைத் தர வேண்டும். அவர் தரும் பதில் ஓலையை வாங்கி வர வேண்டும்.

"மதுரைக்கு எப்படிச் செல்வது என்பது உங்களுக்குத் தெரியாது. தலை நகரத்தில் இருந்து வடக்கே செல்லும் சாலையில் பத்துக் கல் செல்லுங்கள். நான்கு சாலை சந்திப்பு வரும்.

"அதில் ஒரு சாலை மதுரைக்குச் செல்லும். இன்னொரு சாலை கருவூருக்குச் செல்லும் மற்றொரு சாலை காஞ்சிக்குச் செல்லும். வழி கண்டு பிடிப்பதில் உங்களுக்கு எந்த தொல்லையும் இருக்காது.

"அங்கே கை காட்டி மரம் இருக்கும். அது எந்த ஊருக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்று காட்டும். இப்போதே செல்லுங்கள். பதில் ஓலையுடன் விரைவில் திரும்புங்கள்," என்றான் அரசர்.

ஓலையுடன் அவர்கள் நால்வரும் தங்கள் குதிரையில் அமர்ந்து வேகமாகச் சென்றனர்.

நான்கு சாலை சந்திப்பு வந்தது. கை காட்டி மரத்தைப் பார்த்த அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

கை காட்டி மரத்தின் அடிப்பகுதி வெட்டப்பட்டு கைகாட்டி மரம் சாய்ந்து கிடந்தது. இதைப் பார்த்த அவர்களுக்கு எப்படி வழி கண்டுபிடிப்பது என்று புரியவில்லை.

அவர்களில் ஒருவன் மட்டும் கன்னத்தில் கை வைத்தபடி சிந்தனையில் ஆழ்ந்தான்.

மற்ற மூவரும் ஒன்றாக அமர்ந்தனர்.

"நான்கு சாலைகளுள் ஒன்று நாம் வந்த சாலை. மற்ற மூன்று சாலைகளுள் ஒன்றுதான் மதுரைக்குச் செல்லும் சாலை.

மற்ற மூன்று சாலைகளில் நாம் மூவரும் பிரிந்து செல்வோம். யாருக்கு நல்ல வாய்ப்பு உள்ளதோ அவர் மதுரையை அடையட்டும். ஓலை பெற்றுத் திரும்பட்டும்," என்றான் அவர்களில் ஒருவன்.

அவர்கள் மூவரும் மூன்று சாலைகளில் விரைந்து சென்றனர்.

சிந்தித்துக் கொண்டிருந்த அவனுக்கு நல்ல வழி ஒன்று தோன்றியது. கீழே கிடந்த கை காட்டி மரத்தை நன்கு கவனித்தான்.

ஏதோ முடிவுக்கு வந்தவனாகத் தன் குதிரையில் ஏறி அமர்ந்தான். ஒரு சாலையில் அதை வேகமாக விரட்டினான்.

என்ன வியப்பு! அவன் மதுரையை அடைந்தான். தூதரிடம் ஓலை பெற்றுத் தலை நகரம் திரும்பினான்.

ஓலையுடன் வந்திருந்த இருவரும் அரசனை வணங்கினார். ஓலையைத் தந்தனர்.

"எப்படி வழி கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டார் அரசர்.

மதுரைக்குத் தான் குருட்டாம் போக்காக வழி கண்டுபிடித்ததைச் சொன்னான் முதலாமவன்.

"உன்னைப் போன்ற முட்டாளுக்கு இங்கே வேலை இல்லை," என்று அவனை விரட்டினார் அரசர.

மதுரைக்கு வழி கண்டுபிடித்த முறையை விளக்கமாகச் சொன்னான் இரண்டாமவன்.

அவன் அறிவுக் கூர்மையை பாராட்டிய அரசர், இன்றே தூதராக வேலையில் சேர்ந்துவிடு," என்றார். அப்படியானால் இரண்டாமவன் மதுரைக்கு எப்படி வழி கண்டு பிடித்து இருப்பான்?

விடை:

தரையில் கிடந்த கை காட்டி மரத்தைத் தூக்கி நிற்க வைத்தான் அவன். தலை நகரத்தின் பெயரைக் காட்டும் பலகையை, தான் வந்த சாலையைப் பார்க்குமாறு கை காட்டியின் அடி மரத்தைத் திருப்பினான். கை காட்டி மரத்தில் மதுரை என்ற பெயர் எழுதிய பலகை மதுரை செல்லும் சாலையைக் காட்டியது. அந்தச் சாலை வழியே சென்று மதுரையை அடைந்தான் அவன்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 3114 - மாயா நாட்காட்டி தொடங்கப்பட்டது.
- 1415 - நூறு ஆண்டுப் போர்: இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றி மன்னன் 8000 பேருடன் பிரான்சை அடைந்தான்.
- 1516 - புனித உரோமப் பேரரசன் ஐந்தாம் சார்ல்ஸ் நேப்பில்சையும் பிரான்சின் முதலாம் பிரான்சிஸ் மிலானையும் உரிமை கொண் டாட இரு நாடுகளுக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1536 - ஜப்பானில் கியோட்டோவில் உள்ள என்றியாக்கு கோயிலின் பௌத்த மதகுருக்கள் கியோட்டோவிலிருந்த 21 நிச்சிரன் கோயில்களைத் தீக்கிரையாக்கினர்.
- 1849 - யாழ்ப்பாணம் பதில் மறை மாவட்டம் நிறுவப்பட்டது.
- 1913 - ஹரி பிறியர்லி துருப்பிடிக்காத எஃகுவைக் கண்டுபிடித்தார்.
- 1920 - போலந்து - சோவியத் ஒன்றியம் போர் ஆரம்பமாயிற்று. ஆகஸ்ட் 25 இல் முடிவடைந்த இப்போரில் செம்படையினர் தோற்றனர்.
- 1937 - ஷங்காய் சமர் ஆரம்பமானது.
- 1954 - பாகிஸ்தான் தனது தேசிய கீதத்தை முதன் முறையாக வானொலியில் ஒலிபரப்பியது.
- 1960 - மத்திய ஆபிரிக்கக் குடியரசு பிரான்சிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1961 - ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு பேர்லினின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளை மூடி கிழக்கு ஜேர்மனியினர் தப்பிச் செல்லா வண்ணம் பேர்லின் சுவரைக் கட்ட ஆரம்பித்தது.
- 2004 - கறுப்பு வெள்ளி: மாலைதீவுகள் தலைநகர் மாலேயில் இடம்பெற்ற அமைதியான அரச எதிர்ப்புப் போராட்டம் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது.
- 2004 - புருண்டியில் கடும்பா அகதிகள் முகாமிலிருந்த 156 டூட்சி இன அகதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2004 - 28 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஏதென்ஸில் ஆரம்பமாயின.
- 2006 - யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி தேவாலயத்தின் மீது இலங்கை இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1899 - ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக், ஆங்கிலத் திரைப்பட இயக்குனர் (இ. 1980)
- 1924 - டி. கே. மூர்த்தி, கருநாடக இசை மிருதங்க வித்துவான்
- 1926 - ஃபிடெல் காஸ்ட்ரோ, கியூபாவின் புரட்சியாளர், ஜனாதிபதி
- 1933 - வைஜெயந்திமாலா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை.

### இறப்புகள்


- 1910 - புளோரென்ஸ் நைட்டிங்கேல், ஆங்கிலத் தாதி (பி. 1820)
- 1917 - எடுவர்டு பூக்னர், ஜேர்மனிய வேதியியல் அறிஞர் (பி. 1860)
- 1946 - எச். ஜி. வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி. 1866)

### சிறப்பு நாள்

- அனைத்துலக இடக்கையாளர் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டு இடதுகை பழக்கமுடையோர் நாள்



பன்னாட்டு இடதுகை பழக்கமுடையோர் நாள் ஆகஸ்ட் 13 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. "பன்னாட்டு இடக்கை பழக்கத்தவரின் நிறுவனம்" இந்நாளைக் கொண்டாடி வருகின்றது. இது முதன் முத லில் 1976 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட் டது.

உலகளாவிய ரீதியில் மொத்த மக்கள் தொகையில் 7-10 விழுக்காட்டினர் இடதுகை பழக்கமுள்ளவர்கள் என கணிப்பீடுகள் குறிப்பிடுகின்றன. இந்த இடதுகை பழக்கமுடையவர்கள் சிறுபான்மையாளராக இருப்பத னால் சமூகத்தில் பல்வேறுபட்ட சிரமங்களை அவர்கள் எதிர் நோக்க வேண்டி ஏற்படுகின்றது.

இந்த இடதுகைப் பழக்கம் பிறப்பிலே சிலருக்கு ஏற்படுகின்றது. மூளையானது மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை: மூளையம், மூளி சிறுமூளை மற்றும் நீள்வளைய மைய விழையம். இவற்றில் மூளையம் (பெருமூளை) இரண்டு அரைக்கோள வடிவில் உள்ளது.

இடதுபக்க அரைக்கோளம் உடலின் வலதுப்பக்க உறுப்புகளையும், வலதுப்பக்க அரைக்கோளம் உடலின் இடப்பக்க உறுப்புகளையும் இயக்குகின்றன. இதில் பெரும்பாலானோருக்கு இடப்பக்க அரைக்கோளம் சற்று மேலோங்கியதாக இருக்கும். இதனால் அவர்களுக்கு வலப்பக்க உறுப்புகள் சிறப்பாக செயறபடுகின்றன. ஆனால் ஒரு சிலருக்கு வலப்பக்க அரைக்கோளம் மேலோங்கி செயறபடுவதால் இடது கை பழக்கம் ஏற்படுகிறது.

இடக்கைப் பழக்கமுள்ள குழந்தைகளை சில பெற்றோர்கள் குழந்தைப் பருவத்திலேயே வலக்கைக்கு மாற்றுவதற்கான பிரயத்தனங்களை மேற்கொள்வர். இந்தப் பழக்கத்தை இவர்கள் மாற்ற முயற்சி செய்தால் பேச்சிலும், பார்வையிலும் குறைபாடுகள் ஏற்படலாம் என்கிறது அறிவியல்.

# வலம்புரி செய்தியை அடுத்து பயனாளிகளுக்கு வங்கிச்சிட்டைகள்

## யு.என்.ஹபிராட் நிறுவனம் வழங்கியது

(முள்ளியவளை)

வலம்புரி செய்தியையடுத்து முள்ளிய வளை வற்றாப்பளைக் கிராமத்தில் இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட பயனாளிக ளினால் கட்டப்பட்டுவரும் வீடுகளில் உரிய கட்டடங்கள் பூர்த்தி செய்யப்பட்டும் கொடுப் பனவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டவர்க ளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற் கான வங்கிச் சிட்டைகள் கடந்த 10ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

வலம்புரி பத்திரிகையில் கடந்த 9 ஆம் திகதி "பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங் குவதில் இழுத்தடிப்பு" எனும் தலைப்பில் செய்தி வெளியானது.

இதனையடுத்து வற்றாப்பளைக்கு நேரடி யாகச் சென்று வீடுகளைப் பார்வையிட்ட யு. என்.ஹபிராட் நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் எந்திரி மாறனின் பணிப்பிற்கு அமைய ஹபிராட் நிறுவனத்தின் வற்றாப்பளை கிராமத்திற்கான தொழில் நுட்ப அலுவலரினால் வங்கிச் சிட்டைகள் பயனா ளிக்ளுக்கு வழங்கப்பட்டுள்ளது. (2-302)

# பிள்ளைகளை மீட்டுத்தருமாறு கோரி வவுனியாவில் உறவுகள் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படத்தில் காணாமற்போன தமது பிள்ளைகள் இருப்பதாகவும் அதனை மீட்டுத் தருமாறு கோரியும் வவுனியாவில் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

வவுனியா கந்தசாமி ஆலய முன்றலில் ஒன்றுகூடிய காணாமற் போனவர்களின் உறவுகள் கையில் புகைப்படங்களை ஏந் தியவாறு அமைதியான முறையில் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் தமது காணாமற் போன பிள்ளைகள் காணப்படுவதாக தெரி வித்து அப் புகைப்படத்துடன் பெற்றோர்கள் நால்வரும் இப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்.வந்த போது காணாமற்போன பெண் ஒருவரின் தாயார் இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடம் நேரடியாக புகைப்படத்தை காட்டி தெரிவி த்திருந்தமையும் தேர்தல் முடிவடைந்ததும் அது கண்டுபிடித்து தருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

காணாமற்போனோர் தொடர்பில் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை அரசியல் வாதிகள் மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தனர். (2)



கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் கலைவிழாவும் கடந்த 8 ஆம் திகதி பிற் பகல் 2 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றபோது. (படங்கள்-கிளிநொச்சி-1 செய்தியாளர்)




# 'ஜனநாயகத்தின் முகவரி தேடும் இளைஞர்களின் சங்கமம்'

## இளைஞர், யுவதிகளுக்கு நடைபெற்ற ஒன்றுகூடல்

இளைஞர்கள், யுவதிகள் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடி நிகழ்வொன்றை அண்மையில் நடத்தினர்.

மனிதவுரிமைகள் இல்லம் 'ஜனநாயகத் தின் முகவரி தேடும் இளைஞர்களின் சங்கமம்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் சுமார் 2 ஆயிரத்து 0 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண் டனர்.

இதில்யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம் பாறை, திருகோணமலை மற்றும் நுவரெ லியா என வடக்கு கிழக்கு மற்றும் மலையக த்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் இந் நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

பங்கேற்புடனான ஜனநாயகத்தில் இளை யோர்களின் பங்கு மற்றும் தகவலறிந்த சிறந்த தெரிவுக்கான உத்திகள் ஆகிய இர ண்டு பிரதான விடயங்கள் தொடர்பில் இளை ஞர் யுவதிகளுக்கு இடையேயான கலந்தா ய்வும் கருத்தூட்டலும் இந் நிகழ்வினூடாக முன்னெடுக்கப்பட்டன.

"தெரிவுகள் எம்மிலிருந்து..." என்ற தலைப்புடன் ஒன்பது மாவட்டங்களிலி ருந்தும் ஜனநாயகத்தின் முகவரி தேடி பவ னியினை மேற்கொண்ட 2750ற்கும் அதி கமான இளைஞர் யுவதிகள் போரின் வடுக் களையும், ஆயிரமாயிரமாய் உயிர் துறந்த ஆத்மாக்களின் நினைவுகளையும் இன் னும் தன்னில் தாங்கி நிற்கும் கிளிநொச்சி நகரிலே சங்கமித்து தமக்கிடையேயான அரசியல் கருத்துப் பகிர்வை மேற்கொ ண்டதோடு, சிறந்த பிரதிநிதிகளின் தெரிவுக் கான அறிவூட்டலையும் பெற்றுக் கொண் டனர்.

எல்லாவற்றிற்கும் மகுடமாக, 25 கோரி க்கைகளை முன்வைத்து இளையோர் பிரகடனம் ஒன்றும் இச்சங்கமத்தினூடாக மேற்கொள்ளப்பட்டது.

தமது பிரகடனத்தில் முன்மொழியப்பட்ட விடயங்கள் யாவற்றையும் ஏற்றுக்கொண்டு செயற்படுத்தப் போகின்றவரையே நாங்கள் பாராளுமன்றத்துக்கான எமது பிரதிநிதியாக தெரிவுசெய்வோம் என்ற உறுதிமொழி நிகழ்வின் இறுதியில் எடுக்கப்பட்டது. (2)



முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் முள்ளியவளை நெல் சந்தைப்படுத்தும் சபை ஈடுபட்டு வருவதைப் படத்தில் காணலாம்.
(படம் : முள்ளியவளை செய்தியாளர்)

# போக்குவரத்து பாதை சீரின்மையால் மழைகாலங்களில் அவதியுறுகின்றோம்

## குறைகேள் சந்திப்பில் கர்ணன் குடியிருப்பு மக்கள் சுட்டிக்காட்டு


(முல்லைத்தீவு)

பாதை சீரின்மையால் மழை காலங் களில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள் வதாக புதுக்குடியிருப்பு கர்ணன் குடியிருப்பு மக்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து மக்கள் குறைகேள் சந்திப்பொன்று புதுக்குடியிருப்பு பிர தேசத்து க்குட்பட்ட கோம்பாவில்.கர்ணன் குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வடமாகாணசபை உறுப்பினர் மதிப்புக் குரிய ரவிகரனினால் ஏற்படுத்தப்பட்ட இச்சந் திப்பில் மக்கள் பலரும் கலந்துகொண்டு தமது கிராமம் தொடர்பான பல்வேறு குறை களை முன்வைத்திருந்தனர்.

அவற்றுள் முக்கியமாக கோம்பாவில் கிராமத்தில் உள்ள கர்ணன் குடியிருப்பு வீதியில் தற்போது புனரமைக்கப்படவுள்ள பாலத்துக்கு அண்மையில் சில குடியிருப்பா ளர்கள் சென்றுவரக்கூடிய பாதையானது



சேதமடைந்துள்ளதாகவும் மழைகாலத்தில் இப்பாதைச்சீர்கேட்டால் தாம் தனித்து விடப்பட்டவர்களாக உள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

மக்களின் முறைப்பாடுகளை உள்வாங் கிய வடமாகாணசபை உறுப்பினர் சந்திப் பின் நிறைவில் குறித்த பாதைச்சீர்கேட்டை பார்வையிட்டு அதனை உறுதிப்படுத்திய தோடு அண்மையில் புனரமைக்கப்படவிரு க்கும் வீதியையும் சுட்டிக்காட்டி நிச்சயமாக இக்குறைபாட்டை புதுக்குடியிருப்பு பிரதேச சபையினருடன் கதைத்து குறித்த பாதையை சீர்செய்வதற்கான வழிவகைகளை மேற் கொள்வதாகவும் தெரிவித்தார். (2)

# வாகன விபத்தில் சிக்கிய சாரதி ஆறு மணித்தியாலங்களின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்

(மன்னார்)

மன்னார் பேசாலையில் இருந்து கொழும் புக்கு மீன்களை ஏற்றிக்கொண்டு பயணித்த லொறி விபத்துக்குள்ளானதில் சாரதி காயம் அடைந்து ஆறுமணித்தியாலத்தின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை ஆனமடுவ-நவகத்தேகம வீதியில் உஸ் வெள பொத்திக்கட்டுவ வளைவில் உள்ள பாலத்தில் இடம்பெற்றது.

இவ்விபத்தில் வாகனசாரதியான சுப் பையா பத்மநாதன் என்பவரே காயமடைந் தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, கொழும்புக்கு மீன்களை ஏற்றிக்கொண்டு பயணித்த லொறி குறித்த பாலத்தை அண் மித்த வேளை கீழே விழுந்து விபத்துக்குள் ளானது.

இந்த விபத்தில் சிக்கிக்கொண்ட லொறி யின் சாரதி, மயக்கமுற்ற நிலையில் சாரதி ஆசனத்துக்குள்ளேயே சிக்கியிருந்துள்ளார்.

படுகாயமடைந்திருந்த சாரதியை, பொலி ஸாரும் பொதுமக்களும் இணைந்து மேற் கொண்ட முயற்சியின் பயனாக ஆறுமணி நேர த்துக்கு பின்னர் அவர் உயிருடன் மீட்கப்பட்டார்.

காயமடைந்த அவரை வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.பி.எல். வெற்றிக்கிண்ணம் விங்ஸ் முதலாவது வெற்றி



யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக யூ.ஆர்.பவுண்டேசன் 3வது ஆண்டாக நடத்தும் 20பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் விங்ஸ் அணி சிறிகாமாட்சி அணியை 5 இலக்குகளால்வெற்றிபெற்றுதனதுமுதலாவதுவெற்றியைபதிவுசெய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 20 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களை பெற்றது. தீபன்-26, அரவிந்தன்-13, துவாரகன்-20, கஜீபராஜ்-25, யாதவன்-18, பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 20ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களை பெற்றது. எட்வின்-48, ஜீபராஜ்-31 ஓட்டங்களை பெற்றனர்.

சுதர்சன்-02, எட்வின்-48, ஜெபராசி-31ஓட்டங்களை பெற்றனர். எட்வின்-48, ஜெபராசா-01, சுதர்ஸன்-02, சுவேதன்-01, தீபன்-02 இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 3வது ஆண்டாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்வில் விங்ஸ் அணி 4.45 புள்ளிகளையும் சிறிகாமாட்சி அணி 1.93 புள்ளிகளையும் பெற்றனர். (கு)



## இணுவில் கலைஒளி சம்பியன்



தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது.

இறுதிப்போட்டி கடந்த திங்கட் கிழமை வல்வெட்டித்துறை யங் கம்பன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில்இணுவில்கலையொளியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் மோதியது.



இப்போட்டியில் ஊரெழு றோயல் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை இணுவில் கலை ஒளி அணி பெற்றது. (கு)

# உதயசூரியன் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## கலைவாணி, றேஞ்சஸ்வெற்றி



உதயசூரியன் விளையாட்டுக் கழக உதைபந்தாட்டப்போட்டி முடிவுகள் வருமாறு, கலைவாணி வி.கழகம் மற்றும் சென்.அன்ரனிஸ் வி.கழகம் ஆகியன மோதின. இரண்டு அணியினரும் 1:1 என்ற அடிப்படையில் சமனிலை பெற்றனர். பின்னர் 4:2 தண்ட உதைமூலம் கலைவாணி வி.கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. மேலும் கலைவாணி வி.கழக வீரர் நிஸ்யந்தன் ஆட்டநாயகனாக தெரிவானார். இவருக்கான வெற்றிக்கேடயத்தை ந.புவனேஸ்வரன் வழங்கிவைத்தார்.

இறுதியாக இடம்பெற்ற போட்டியில் மருதங்கேணி கணேசானந்தா வி.கழக மற்றும் கொற்றாவத்தை றேஞ்சஸ்வி.கழகம் ஆகியனமோதின. இதில் றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. மேலும் இப்போட்டிக்கான ஆட்டநாயகனாக சுதர்சன் தெரிவானார். இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமாக வெற்றி கேடயத்தை தி.சிவராசா வழங்கி வைத்தார். (கு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் துதி பாடுகிறவர்களை விட என்னைக் கடுமையாக விமர்சிப்பவர்களால்தான் நான் அதிகம் நன்மை பெற்றுள்ளேன். - காந்தியடிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடபுலத்துத் தேர்தல் தேவலோகத்தில் மாநாடு

பாராளுமன்ற தேர்தல் தொடர்பில் அவ்வப்போது தேவலோகத்தில் மாநாடு நடப்பதாகக் கற்பனை செய்திருந்தோம்.

கற்பனையின் முற்பகுதி ஏற்கெனவே இவ்விடத்தில் வெளிவந்திருந்தது. இப்போது வடபுலத்தின் தேர்தல் தொடர்பில் தேவலோகத்தில் மாநாடு நடப்பதாகக் கற்பனை.

இந்திரன் தலைமையில் தேவலோகத்து மாநாடு ஆரம்பமாகியது. தேவலோகத்து புலனாய்வாளர்கள் இலங்கையின் வடபுலத்துக்குச் சென்று அங்கு சில காலம் தங்கியிருந்து நிலைமைகளை நேரில் அறிந்து வந்து சித்திரகுப்தனிடம் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

தேவலோகத்து புலனாய்வுத் துறையினர் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் தெய்வேந்திரன் தலைமையில் மாநாடு கூடியது.

**இந்திரன்:**சித்திரகுப்தா! நம் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையின் வடபுலம் தொடர்பில் சமர்ப்பித்த அறிக்கையை மாநாட்டில் முன்வைக்கலாம்.

**சித்திர:**அனைவருக்கும் தாழ்மையான வணக்கம். சுவாமி வடபுலத்தில் பாராளுமன்றத் தேர்தலில் என்று என்றுமில்லாத அளவில் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் களமிறங்கியுள்ளன.

எனினும் தேர்தல் தொடர்பில் பொதுமக்கள் அக்கறை இல்லாதவர்களாக இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிரம்மா:**சித்திரகுப்தா வடபகுதி மக்கள் தேர்தலில் ஆர்வம் கொள்ளாததன் காரணம் என்ன?

**சித்திர:**சுவாமி புலனாய்வாளர்களின் அறிக்கையின்படி தமிழ் மக்களுக்கு தேர்தலில் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. கடந்த காலங்களில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் தமிழ் மக்களின் மனநிலையை உணர்ந்து செயற்படவில்லை.

தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் சீவனோபாயத்துக்காக திண்டாடுகின்றனர். நிரந்தர தொழிலின்மை அவர்களை வாட்டி வதைக்கிறது. இந்நிலையில் தேர்தல் பற்றி அவர்கள் கவனம் கொள்வதற்கு எந்தத் தேவையும் இல்லை.

**இந்திரன்:**ஈழத்தமிழ் மக்களின் நிலைமை பரிதாபத்துக்குரியது. கடந்த காலங்களிலும் தமிழ் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்துள்ளனர்.

அரசியல் தலைமைகளை நம்பி அவர்கள் ஏமாற்றம் அடைந்ததால், தேர்தல் வெறுப்பு நோய்க்கு அவர்கள் ஆளாகியுள்ளனர் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

**யமன்:**சித்திரகுப்தா தேர்தலில் வெற்றி யாருக்கு வாய்ப்பாகவுள்ளது?

**சித்திர:**சுவாமி எமது புலனாய்வாளர்களின் கருத்துப்படி தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் தமக்கு ஆசனம் கிடைக்கும் என நம்புகின்றனர்.

**இந்திரன்:**நம்பிக்கை அவசியமாயினும் வெற்றி என்பது எல்லோருக்கும் சாத்தியமானதல்ல.

**பிரம்மா:**சித்திரகுப்தா வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் நிலைப்பாடு என்ன?

**சித்திர:**சுவாமி வடக்கின் முதல்வர் எத்தகைய எதிர்பார்ப்புடன் அரசியலுக்குள் வந்தாரோ அந்த எதிர்பார்ப்புக்கள் நொருங்கி விட்டன.

நேர்மையான அரசியல்வாதிகள் யாரையாவது கண்டீர்களா? என்று வீதியில் நின்று விளக்குப் பிடித்துப் பார்க்கிறார். அந்தளவுக்கு அவரின் மனம் நொந்து போயுள்ளது.

எனினும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாகக் கேள்வி.

**இந்திரன்:**அப்படியா? முதலமைச்சரின் அறிக்கையை நான் வாசிப்பதற்கு ஆவன செய்யுங்கள்.

**யமன்:**சுவாமி வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களின் அறிக்கை மிகவும் இறுக்கமான பொருள் கொண்டதாக இருக்கும் என்பதால், அவரின் அறிக்கை பற்றி நாளைய தினம் மாநாட்டில் ஆராய வேண்டும் என தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**இந்திரன்:**அப்படியே ஆகட்டும். நாளையதினம் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அறிக்கை ஆராயப்படும். இப்படி இந்திரன் கூற தேவலோகத்து மாநாட்டின் முதலமர்வு நிறைவு பெற்றது.

# அமைதி பேணும் நோக்கில் கஞ்சா வழக்கு பிணை ஒத்திவைப்பு

## நீதிபதி இளஞ்செழியன் வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டத்திலான க.பொ.த உயர்தரப் பரீட்சை 4ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்ற பொதுத் தேர்தலும், 23ஆம் திகதி தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையும் நடைபெறவுள்ளன. எனவே, இந்த ஆவணி மாதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்தக் காலப்பகுதியில் நாட்டில் அமைதியைப் பேண வேண்டியுள்ளது. எனவே, கஞ்சா வழக்கு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணை மனு மீதான விசாரணையை இப்போது நடத்த முடியாது அது ஒத்திவைக்கப்படுகின்றது எனக் கூறி நீதிபதி இளஞ்செழியன் இளவாலை கஞ்சா வழக்கு தொடர்பான பிணை மனு மீதான விசாரணையை செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், இளவாலை பொலிஸார், 81 கிலோ 485 கிராம் நிறையுள்ள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தாகவும், அதனை விற்பனை செய்ததாகவும் குற்றம்சாட்டி, உதயச்சந்திரன் ஞானசீலன் மற்றும் சிவகுமார் கார்த்திக் ஆகிய இரண்டு பேரைக் கைது செய்திருந்தனர். இவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, நீதவான் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் முதலாம் எதிரியாகிய உதயச்சந்திரன் ஞானசீலன் சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த பிணை கோரிக்கை மனுவுக்கு அரச சட்டத்தரணி எழுத்து மூலமான ஆட்சேபணை தாக்கல் செய்து பிணை வழங்கப்படக் கூடாது என நீதிமன்றத்திடம் கோரினார். (எ-11)

# 13 வாக்களிப்பு நிலையங்கள் வேறு இடங்களுக்கு மாற்றம்

## யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற தேர்தலுக்கு வாக்களிப்பதற்காக ஏற்பாடாகியிருந்த வாக்களிப்பு நிலையங்களில் 13 நிலையங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையம் (மண்டப இல-01) புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாலயத்துக்கும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் இருந்த இரண்டு வாக்களிப்பு நிலையங்கள் (மண்டப இல-01,இல- 02) உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்துக்கும், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் இருந்த இரண்டு வாக்களிப்பு நிலையங்கள் (மண்டப இல-03,இல- 04) உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்துக்கும் (மண்டப இல-02,இல- 03),

சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்த வாக்களிப்பு நிலையம் (மண்டப இல - 03) சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கும், செங்குந்தா இந்துக் கல்லூரியில் இருந்த இரண்டு வாக்களிப்பு நிலையங்கள் (மண்டப இல-01,இல-02) , கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கும், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திலிருந்த வாக்களிப்பு நிலையம் (மண்டப இல-02) பூம்புகார் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், புனித ஜேம்ஸ் பெண்கள் ஆரம்பப் பாடசாலையில் இருந்த வாக்களிப்பு நிலையம் புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலைக்கும் (மண்டப இல-01), புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையிலிருந்த வாக்களிப்பு நிலையம் (மண்டப இல-02) புனித ஜேம்ஸ் பெண்கள் ஆரம்பப் பாடசாலைக்கும், ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயத்திலிருந்த இரண்டு வாக்களிப்பு நிலையங்கள் (மண்டப இல-01, இல-02) வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயத்துக்கும் மாற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-9,4)

## சாதனை படைத்த மாணவர்கள் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவில் நடைபெற்ற விசேட ஒலிம்பிக் போட்டியில் வெற்றியீட்டிய சிவபூமி மாணவர்கள் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணம் வரும் அவர்கள் மாலை 3 மணிக்கு நல்லூர் ஆலயத்திலிருந்து பலாலி வீதியூடாக சிவபூமி பாடசாலைக்கு திறந்த வாகனத்தில் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். அத்துடன் அவர்களை கௌரவிக்கும் முகமாக விசேட வைபவமும் சிவபூமி பாடசாலையில் நடைபெறவுள்ளது. (எ-12)

## பிரசார கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 6 மணிக்கு மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் அரசியல் ஆய்வாளர் சி.அ.ஜோதிலிங்கம் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் கட்சி சார்பாக போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் உரையாற்றவுள்ளனர். (எ-12)



## சத்திய தரிசனம்

### தேவை, சேவை, மனப்பான்மை

❖ மனித மனங்களில் உறுதியும், நேர்மையும் இருந்து விட்டால் உலகில் அமைதி தழைக்கத் தொடங்கிவிடும்.

❖ கடவுளை வணங்கினால் மட்டும் போதாது. அவருடைய தெய்வீக இயல்பை நாமும் பெற வேண்டும். அதுவே உயர்ந்த வழிபாடாகும்.

❖ மன வீட்டைப் பூட்டியிருக்கும் மோகம், கோபம் என்னும் இரட்டைக் கதவுகளைத் திறந்திடுங்கள். பேராசை என்னும் தாழ்ப்பாளை நீக்குங்கள். அப்போது ஆன்மீகக்காற்று வீசுவதைக் காண்பீர்கள்.

❖ மனதை அன்பினால் நிரப்புங்கள். நேர்மையான சிந்தனையைப் பரவ விடுங்கள். நல்ல விடயங்களிலும், உயர்ந்த செயல்களிலும் எப்போதும் ஈடுபடுங்கள்.

❖ சேவை மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களால் இயன்ற உதவியை மக்களுக்கு செய்ய ஆர்வம் காட்டுங்கள். கடவுளின் கருணையை பெற இதுவே வழி.

❖ ஒவ்வொரு எண்ணமும் கடவுளை அலங்கரிக்கும் மலராக விளங்கட்டும். பேசும் ஒவ்வொரு சொல்லும் அன்பெனும் இனிய சாற்றினைத் தாங்கி நிற்கட்டும்.



## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத்தகவல்கள்

### தேவாரம், திருவாசகம் என்றால் என்ன? இவற்றைப் பாராயணம் செய்வதால் என்ன பயன்?

தேவாரம், திருவாசகம் இவை யாவுமே நான்கு வேதங்களின் சாரமே ஆகும்.

வேதங்களில் கூறப்பட்டுள்ள சாரம்தான் உலக உயிர்கள் புனிதப் படவேண்டும் என நோக்கில் பூமியில் அருளாளர்களை அவதரிக்க வைத்து அவர்கள் மூலமாக தூய தமிழில் சிவபெருமானே வழங்கியுள்ளார். இவை யாவும் உயிர்கள் நன்மைக்கே ஆகும்.

இப்படியாக இவற்றைப் பாராயணம் செய்வதால் அதில் வரும் வார்த்தை ஒலிக்கு மந்திர சக்தி பிறக்கின்றது.

அவ்வாறு அதை உச்சரிக்கும்போது நமது மூச்சுக்காற்றுடன் கலந்து நமது உடல் உள்ளே செல்லும் போது நம் உடற்கூறுகளில் உள்ள நோய்கள் தீர்க்கப்படுகின்றன. அதேசமயம் நாம் சொல்லக்கூடிய இடங்களிலும் அந்த ஒலி பரவி அங்கேயிருக்கும் ஏனைய துஷ்ட ஆவிகள் கெட்டவைகள் யாவும் விரட்டப்படும்.

அது நம்மைச் சுற்றி பாதுகாப்பு வேலியாக பாதுகாக்கும் அரணாக நம்மைக் காத்து நிற்கும். இவ்வாறாக நாம் இதை பாராயணம் செய்யும் போது நம்மைச் சார்ந்துள்ள பாவ வினைகள் படிப்படியாக களையப்பட்டு [illegible]த்தினின்று நம்மை விடுபடச் செய்து சிவஜோதியில் சங்கமிக்க வைத்திடும் என்பது முற்றிலும் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ்

# 18 பயனாளிகளுக்கு பனம் கைப்பணிப்பயிற்சி

## பயிற்சியின் நிறைவில் உபகரணங்கள் வழங்கப்படும்

(முல்லைத்தீவு)

**பனை அபிவிருத்திச் சபையின் விசேட வாழ்வாதார திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 18 பயனாளிகளுக்கு ஒரு மாதகால விசேட பனம் கைப்பணிப் பயிற்சி ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் முகாமையாளர் (விரிவாக்கம்) கே.கோபால கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மேற்கில் உள்ள பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர் குழுக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 18 பயனாளிகளுக்கு இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் ஈர்க்கில் கூடை தயாரித்தல், சுளகு பின்னுதல் தொடர்பான பயிற்சிகள் பயனாளிகளுக்கு வழங்கப் படுகின்றன.

பயிற்சியின் போது சகல உபகரண வசதிகளும் மூலப்பொருட்களும் வழங் கப்படுவதோடு, பயிற்சி நிறைவில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

## மஹோற்சவம்



கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் கொடியேற்றத்துடன் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில், எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும் இரவு சப்பறத்திருவிழாவும் நடைபெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு கிளிநொச்சி தீர்த்தக்கரையில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

இதேவேளை வேட்டைத்திருவிழா பிற்பகல் 2 மணிக்கு கணேசபுரம் சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். இராஜகோபுரம் அமைக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக இத்திருவிழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-254)

# முல்லை. மாவட்டத்தில் நிலக்கடலை இயந்திரம் விவசாயிகள் முன்னிலையில் பரீட்சார்த்தம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன்கட்டுக் கிராமத்தில் நேற்று முன்தினம் மகாஇலுப்பள்ளமவில் அமைந்துள்ள பண்ணை இயந்திரங்களுக்கான ஆராய்ச்சி நிலையத்தில் வடிவமைக்கப்பட்ட நிலக் கடலை இயந்திரம் பிரதேச விவசாயிகள் முன்னிலையில் பரீட்சார்த்தமாக இயக்கப் பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



நிலையத்தின் எந்திரி எம்.எச்.ஜே.ஜே கேமச்சந்திர குழுவினரும், பங்குபற்றி இருந்தார்கள். இந் நிகழ்வினை முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பளார் பொ.அற்புதச்சந்திரன் ஒருங்கிணைத்திருந்தார்.

நிலக்கடலை உற்பத்திச் செலவில் நிலக் கடலையினை பயிரிலிருந்து பிரித்தெடுப் பதற்கு கூலியாள் செலவாக ஏக்கருக்கு 10ஆயிரம் ரூபா வரை செலவிடப்படுகின்றது. இயந்திரத்தினைப் பயன்படுத்தி நிலக்கடலையினைப் பிரித்தெடுப்பதனால் இச்செலவினை 4ஆயிரம் ரூபாவாக குறைத்துக் கொள்ளலாம். அவ்வகையில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையின் மூலம் 6 நிலக்கடலை பிரித்தெடுக்கும் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு தற்போது பாவனையிலுள்ளது. ஆனாலும் இவ்வியந்திரங்கள் மூலம் அறுவடை செய்த கடலையினை 5முதல் 6 நாட்கள் காய வைத்த பின்னரே பிரித்தெடுக்க முடியும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பரீட்சித்த இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்த உடனேயே பச்சை தளிர்களுடன் நிலக்கடலை பயிரை பிரித்தெடுக்கலாம் என இயந்திரத்தினை வடிவமைத்த எந்திரி தெரிவித்தார்.

நிலக்கடலை உற்பத்தியில் இலங்கையில் இரண்டாம் நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளது. அத்துடன் வடக்கு மாகாணத்தில் முதன்மை நிலையில் உள்ளது. மேலும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் நிலக்கடலைச் செய்கையிலும் இயந்திர பாவனையிலும் அதிக ஆர்வம் காட்டிவருவதாக அவர் தெரிவித்தார்.(2)

# வன்னித்தேர்தல் தொகுதியில் 18 முறைப்பாடுகள் பதிவாகின

## கபே அமைப்பு சுட்டிக்காட்டு




நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் வடக்கில் வன்னித் தேர்தல் மாவட்டத்திலேயே அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. அத்துடன் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளது என கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பாராளுமன்ற தேர்தல் தொடர்பில் ஆயிரத்து 399 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வடமாகாணத்தைப் பொறுத்தவரை வன்னித் தேர்தல் தொகுதியில் 18 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் நான்கு வன்முறைச் சம்பவங்களும் வன்னியில் பதிவாகியுள்ளது.

அந்த வகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரோகண கமகேயின் வாகனம் மீது நேற்று முன்தினம் இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளதாக பதிவாகியுள்ளது.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய ஒருவார காலத்திற்கு முன்பாக சுவரொட்டிகளை அகற்றிக்கொண்டிருந்த ஒருவருக்கு கட்சியொன்றின் ஆதரவாளர்கள் தாக்கியது தொடர்பாகவும் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த தாக்குதல் சம்பவத்தினால் காயமடைந்து குறித்த நபர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். அதுபோல் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது மன்னார், அரிப்பு பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பகுதியிலும் ஒருவர் தாக்கப்பட்டுள்ளதாக வன்முறைச் சம்பவம் பதிவாகியுள்ளது.

அது மாத்திரமின்றி வன்னி தேர்தல் தொகுதியிலேயே அதிகளவான உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் பணம் வழங்கும் செயற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன.

தேர்தலில் வாக்கினைப் பெற்றுக் கொள்வதற்காக, விளையாட்டுக் கழகங்களுக்கும் மத அமைப்புகளுக்கும் மத தலைவர்களுக்கும் பொருட்களை வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றது என கபே அமைப்புக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று அவர் கூறினார். (2)

## வாகனங்களை நிறுத்த இடவசதி ஏற்படுத்துக

(முக்கொம்பன்)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி-கேரதீவு மன்னார் வீதியில் சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகாமையில் சுற்றுலாவிற்கு வருகின்ற பயணிகள் வாகனங்களை தரித்து விடுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள அவ்விடத்தில் கடற்றொழிலில் ஈடுபடுகின்ற கடற்றொழிலாளர்கள் வலைகளைக் காயவிடுகின்றனர். இதனால் சுற்றுலாவிற்கு வருகை தருகின்ற பயணிகள் தமது வாகனங்களை தரித்து நிற்க விடமுடியாது வீதியோரங்களில் நிறுத்துவதால் விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே இச்செயற்பாட்டை கடற்றொழிலாளர் சங்க சமாச அதிகாரிகள்கவனத்தில் எடுத்து வாகனங்கள் தரித்து நிற்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.(2-283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளுக்கு...

வாக்களிக்காமல் விடுவது மற்றும் ராஜ பக்ஷ குடும்பத்தின் எவருக்கும் பாதிப்பு ஏற்ப டுத்தக் கூடாது என்றே புலிகளுக்கு பணம் வழங்கப்பட்ட தாக குறிப்பிட்ட அவர், 2006ம் ஆண்டு கோத்தபாய மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் குறித்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததாகவும் கூறியுள்ளார். (எ-11)

## தேர்தல் முடிவுகளை...

சுட்டிக்காட்டுகிறது.

இதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைக்கப்பட்டிருப்பதாகவும் சுயேச்சையான கண்காணிப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதற்கு பல மாதங்களாக எதிர்ப்புத் தெரிவித்துவந்த சிறிசேன, தனக்குக் கட்சிக்குள் ஆதரவில்லாததன் காரணமாக, கடைசியில் அதற்கு இணங்க வேண்டியிருந்தது என அறிக்கை கூறுகிறது. (எ-11)

பாராளுமன்ற தேர்தல் - 2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

இவர்தான் அவர்
8
சில்வேஸ்திரி அலென்ரின்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
X 8
(134)

## வித்தியா படுகொலை...

கடற்படையினருக்கு அபகீர்த்தியை உண்டாக்கும் வகையிலேயே வித்தியாவின் சடலத்தை சடலம் மீட்கப்பட்ட பகுதியில் விட்டதாகவும் தகவல் பெற்றிருப்பதாக மன்றில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை 4ஆம் சந்தேக நபரிடம் இருந்த வித்தியாவின் கண்ணாடி தொடர்பாக குறித்த கண்ணாடியைதான் கடையில் வாங்கியதாக மன்றில் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் 26ஆம் திகதி கண்ணாடியை மன்றுக்கு கொண்டு வருமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந் நிலையில் சந்தேகநபர்கள் தமக்கு பிணை வழங்குமாறு நீதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன்போது தம்மால் பிணை வழங்க முடியாது பிணை மேல் நீதிமன்றத்தினாலேயே வழங்க முடியும் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் சந்தேகநபர்கள் டீ.என்.ஏ பரிசோதனையினை மீண்டும் ஒருமுறை மேற்கொள்ளுமாறு நீதிபதியிடம் நேற்றைய தினம மன்றில் வைத்து கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் காலை 10.56 மணிக்கு வழக்கு நிறைவடைந்து எதிர்வரும் 26ம் திகதி வரையில் 14 நாட்கள் சந்தேகநபர் களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேலும் குற்றப்புலனாய்வு துறையினர் தமது விசாரணையிலிருந்த சந்தேகநபர்களை, பொலிஸாரிடம் கையளித்த நிலையில் சந்தேகநபர்கள் யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (எ-4)

## தேர்தலுக்கான...

நிலையமாக யாழ் மத்திய கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் 41 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் 8ஆயிரம் அலுவலர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தையும் பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர். அந்த வகையில் வாக்கெண்ணும் நிலையங்கள், வாக்கெடுப்பு நிலையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் தொடர்பான பெரியளவிலான வன்முறைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை அமைதியான முறையில் நடைபெற்று வருகின்றது.

அனைவரும் சுமுகமான முறையில் வாக்களிப்பு செய்ய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-4,9)

பாராளுமன்ற தேர்தல் - 2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

அடுத்த தலைமுறையின் எதிர்காலம் சுபீட்சமாய் அமைய வழி செய்வோருக்கு வாக்களிப்போம்.
டக்ளஸ் தேவானந்தா
(முதன்மை வேட்பாளர்)
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
X 4
நிரோஷன், கவி, தர்சன், முகமட், சாரு, தமிழ், வினு, நிசா, அன்பு, பபி
யாழ்ப்பாணம்.
(130)

## மரண அறிவித்தல்

### கணபதி நாகேந்திரம்



யாழ்.வரணி இயற்றாலை வரணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நாகேந்திரம் அவர்கள் 09-08-2015 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதி சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கணபதிபிள்ளை பத்தினி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகம்மா அவர்களின் அன்புக் கணவரும், நேசமலர், சாந்தினி, பகீரதி, சுகந்தினி, நாகேஸ்வரன, விக்னேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மராசா, காலஞ்சென்ற ராஜரூபன், துஷாந்தன், ரேவதி, சயந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுரன், வினோஜா, விபூசன், கிஷோனா, மதுஷன், சந்தோஸ், கிஷோர், அபிசாந், பவீஸ், சுலக்சன், டினுஷா, சஸ்விந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 13.08.2015 வியாழக்கிழமை இன்று காலை 9:00 மணிமுதல் நண்பகல் 12:00 மணிவரை நடைபெற்று குடமியன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். **தகவல்:குடும்பத்தினர்**

(1479)

பாராளுமன்ற பொதுத் தேர்தல்- 2015
வன்னி மாவட்டம்

அன்பான எங்கள் உறவுகளே!
அமையப் போகும் நல்லாட்சி அரசாங்கத்தில் எங்களில் ஒருவன் எங்களுக்காய் பங்கெடுத்து பற்றுறுதியுடன் பகிர்ந்தளிப்போம் எங்கள் வாக்குகளை
கமலநாதன் விஜிந்தனுக்கே.

ரிசாத் பதியுதீன்

கமலநாதன் விஜிந்தன்
X 1 2
பட்டதாரிகளும் பல்கலைக்கழக மாணவர்களும்
வன்னி மாவட்டம்
(அ-53)

பாராளுமன்றத் தேர்தல் - 2015
வடக்கின் நிரந்தர அமைதிக்கும் ஐக்கியத்துக்கும்
X 3

பிரதான வேட்பாளர்
திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முன்னாள் மகளிர் விவகார பிரதியமைச்சர்
ஐ.தே.க.வின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர்)
தாவடி-இணுவில் வாழ் கட்சி ஆதரவாளர்கள்
(36)

இறுதிச் சந்தர்ப்பம்!

பட்டத்துடன் தொழில் அனுபவம் உள்ள எவரும்
கனடாவில் குடும்பத்துடன் குடியேறும் அரிய வாய்ப்பு
150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு
180,000+க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம்புள்ளி அடிப்படையில் உங்கள் விண்ணப்ப தகைமையை மதிப்பீடு செய்து, நீங்களே நேரடியாக கனேடிய முகவர் ஊடாக விண்ணப்பம் செய்யக்கூடிய
100% பாதுகாப்பான ஏற்பாடு
இதுவரை 6,851 பேர்
நிரந்தர குடியுரிமை விசா பெற்றனர்
FREE Assessment Send your CV to info@sikaram.lk
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1 மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004
021 222 00 11

CSE COLOMBO STOCK EXCHANGE
பங்குச் சந்தை முதலீட்டு உத்திகள் பயிற்சிப் பட்டறை
துறைசார் அனுபவமுடைய வளவாளர்களினால் கருத்துக்கள் பரிமாற்றப்படும்.
- பங்குச் சந்தை முதலீடுகள் அறிமுகம்.
- நிதிக் கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல்.
- பங்குத் தெரிவுகள்.
- பங்குகளில் முதலீடு செய்தல்.
2015 ஆவணி 15 மற்றும் 22 ஆம் திகதி சனிக்கிழமைகளில்
(மு.ப 9.30- பி.ப 4.30) (முதலீட்டு கைநூல் மற்றும் மதிய உணவு வழங்கப்படும்)
பதிவுக் கட்டணம் ரூபா 500)
147-2/3, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள (சத்திரச் சந்தி)
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளையில் நடைபெறும்.
முற்பதிவுகளுக்கு:-021 222 1455, 0777822014,
www.cse.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா ஆதிக்கம்



இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் முதல் நாள் ஆட்டத்தில் கோலி தலைமையிலான இந்திய அணி சிறப்பாக செயற்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 183 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து தனது முதல் இனிங்சை தொடங்கிய இந்திய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 34 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 128 ஓட்டங்கள் எடுத்து 55 ஓட்டங்கள் பின்தங்கி இருக்கிறது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)
























இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org